குத்தூசி

மாத வெளியீடு

KUTHOOSI: HIGH CLASS THAMIZH MONTHLY

ஆசிரியர்: சா. குருசாமி

லெனின்

ஊசி 2 குத்து 5

★ ஃபிப்ரவரி 1964 ★

இதனுள்:

உதட்டளவில்தானா?
"200 கோடி ஆக்கிடுவேன்!"
வாழ்க்கை வரலாறு: லெனின்
குழந்தைக்குப் புத்தகம்
தமிழன்-அன்றும் இன்றும்
உங்கள் உயரம்
பொருளாதார வளர்ச்சி
கவிதைப் பகுதி
இலக்கியப் பகுதி
—இன்னும் பல

Telegrams: "SWITCHES"

Phone: 51436

KASIMARI INDUSTRIAL CORPORATION

"KASIMARI BUILDINGS"

295, THIRUVOTTIYUR HIGH ROAD,

MADRAS-21.

INDUSTRIALISTS, ENGINEERS & CONTRACTORS

We Undertake:

ALL KINDS OF STRUCTURAL FABRICATIONS AND ENGINEERING WORKS OF EVERY DESCRIPTION

Our Motto:

QUICK, EFFICIENT AND PROMPT SERVICE

MEENAKSHI GROUP OF MILLS

MADURAI (South India).

Manufacturers of:

Single Yarn in counts 16s to 100s, carded and combed, in hanks and in cones for Weaving and Hosiery Factories and Grey Gada. Grey and Bleached Mulls, Long-Cloth, Dyed Cloth etc.

★

1. The Sree Meenakshi Mills, Ltd., Madurai.
2. The Sree Meenakshi Mills, Ltd., Paravai.
3. Thiakesar Alai Manaparai.
4. Alagappa Textiles (Cochin) Ltd., Alagappanagar.
5. Thiagarajar Mills, Kappalur.
6. Rukmini Mills Ltd., Silaiman.
7. Sree Sivakami Mills Ltd., Thenur.
8. Saroja Mills Ltd., Coimbatore.
9. The Coimbatore Kamala Mills Ltd., Coimbatore.
10. Sri Sarada Mills Ltd., Podanur.
11. Sree Rajendra Mills Ltd., Salem.
12. Loyal Textile Mills Ltd., Kovilpatti.
13. Virudhunagar Textile Mills Ltd., Sulakarai.
14. Parvathi Mills Ltd., Quilon.
15. Vijayamohini Mills Ltd., Trivandrum.
16. Kerala Lakshmi Mills Ltd., Trichur.

தி மதருஸ் இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட்.

23, நுங்கம்பாக்கம் ஹைரோடு, (போன் : 82026) சென்னை-34.

புதிய தொழில்களை ஆரம்பிக்கவும், பழைய தொழில்களை விஸ்தரிக்கவும் தேவையான நிதியை உதவ சென்னை அரசாங்கம் மதருஸ் இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷனை ஆரம்பித்துள்ளது. இக் கார்ப்பரேஷன் ஏற்றுக்கொள்ளும் பிக்ஸட் டிபாஸிட்டுகளின் அசலுக்கும் வட்டிக்கும் சென்னை அரசாங்கம் நிபந்தனையின்றி உத்திரவாதம் அளித்திருக்கிறது.

எங்கள் டிபாசிட்டுகளின் பேரில் கீழ்க்கண்டவாறு வட்டிகள் அளிக்கிறோம்:—

ஒரு ஆண்டும் அதற்கு மேலும்	...	4½%	ஒரு ஆண்டிற்கு
இரண்டு ஆண்டுகளும் அதற்கு மேலும்	...	4¾%	,,
மூன்று ஆண்டுகளும் அதற்கு மேலும்	...	5%	,,
நான்கு ஆண்டுகளும் அதற்கு மேலும்	...	5¼%	,,
ஐந்து ஆண்டு முதல் இருபது ஆண்டுகள் வரை		5½%	,,

ஒரு லட்சமும் அதற்கு மேற்பட்ட தொகையையும் மூன்று ஆண்டுகளுக்கும் அதற்கு மேலும் டிபாஸிட் செய்தால் மேற்கண்ட வட்டி விகிதங்களை விட 1/4% வட்டி அதிகமாக அளிக்கப்படும்.

மற்ற விவரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

தமிழ் நூல் நிலயம்

84, ஷெணய் நகர் : : சென்னை-30

		ரூ. காசு
1.	பிச்சைக்காரி (சிறு கதைகள்) சா. குருசாமி.	2·00
2.	பன்னீர்ச்செல்வம் (நாடகம்) சா. குருசாமி.	0·40
3.	குத்தூசி (12 இதழ்கள்) பைண்டு செய்யப்பட்டது.	8·00
★ 4.	குத்தூசி (கிண்டல்)-கட்டுரைகள் புதிய தொகுப்பு	அச்சில்
★ 5.	கட்டுரைக் கொத்து சா. குருசாமி.	அச்சில்

★ இவை இரண்டும் இதுவரையில் புத்தக உருவில் இல்லாதவை; திருத்தியும், பெருக்கியும், தனிச் சுவையுடன் எழுதப்பட்டவை. மார்ச் இறுதியில் கிடைக்கும்.

குறிப்பு :—மேற்கண்டவைகளுக்கு அஞ்சல் செலவு தனி.

அன்புடையீர்,

வணக்கம். நாங்கள் இதுவரை தமிழ் நாட்டுப் பொதுக்கல்வி இயக்குநர்

திரு. நெ. து. சுந்தரவடிவேலு

அவர்கள் எழுதிய 12 நூல்களை வெளியிட்டிருக்கிறோம்.

அவை :

1. தம்பீ நில்
2. நஞ்சு உண்டவர்
3. சிலுவையில் மாண்டவர்
4. குண்டுக்கு இரையானவர்
5. மின் விளக்கு
6. தங்கத் தாத்தா
7. வானொலி வழங்கியவர்
8. தோற்றும் வென்றவர்
9. பாக்கு வெட்டி
10. ஆறு
11. விளக்குப்பாவை
12. செஞ்சிலுவை தந்தவர்

அவற்றில் அரிய பெரிய கருத்துக்களை எளிய நடையில், தெளிவான முறையில், இளைஞர் முதல் பெரியோர் வரை ஆர்வத்தோடு படித்து இன்புறும் வகையில் தெரிவித்துள்ளார்கள். அவற்றைப் பெருமளவில் வாங்கிப் பயன்படுத்தியது எங்களுக்கு மகிழ்ச்சியையும் ஊக்கத்தையும் அளித்துள்ளது.

ஆகவே,

"எண்ண அலைகள்"

என்ற தலைப்பில் அவர்கள் எழுதிய 24 கட்டுரைகளின் தொகுப்பை இப்போது வெளியிடுகிறோம். அச்சில் உள்ள இந்நூல் விரைவில் வெளிவரும். சுமார் **260 பக்கங்கள்** கொண்ட இந்நூலின் **விலை ரூ. 2-60.** நூலின் படிகள் வேண்டியவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதினால் அனுப்பப்பெறும்.

முருகன் & கம்பெனி,

32, வெங்கடேச கிராமணி தெரு,

சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.

குடிசை அருகிலும் கோவில் அருகிலும்



"மெய்ப்பொருள் காண்பது அறிவு"

குத்தூசி

ஊசி 2 ஃபிப்ரவரி 1964 குத்து 5

உதட்டளவில்தானா?

கலப்புத் திருமணம் ஒன்றினால் தான் சாதிகள் ஒழியும் என்ற உண்மையைப் பெரும்பாலும் எல்லாக் கட்சித் தலைவர்களும் ஒப்புக் கொள்கின்றனர். பிறப்பினால் உயர்வு தாழ்வு கற்பிக்கும் "சாதி" என்பது "பாரத புண்ணிய" பூமியைத் தவிர வேறு எந்த நாட்டிலும் இல்லை. ஆஃப்ரிக்கா — அமெரிக்கா நாடுகளில் நிற வேற்றுமை உண்டு; இன வேற்றுமை உண்டு. ஆனால் அங்கும் கூட சாதி கிடையாது; சாதியைக் குறிப்பிடும் பட்டம், சின்னம் முதலியன இல்லை.

இந்நாடு அந்நியர் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்ற பிறகு சாதி உணர்ச்சியும் அதன் கிளையாகிய தீண்டாமையும் வளர்ந்திருக்கின்றனவே ஒழிய குண்டூசி முனையளவுகூடக் குறையவில்லை. அரசியல் சட்டவிதிப்படி தீண்டாமை உணர்ச்சி குற்றமாக்கப்பட்டிருந்துங் கூட கிராமங்களில் குளிநீரிலும் குடிநீரிலும் கூட இன்றும் தீண்டாமை தாண்டவமாடிக் கொண்டிருப்பதை மறுக்க முடியாது. இந்நிலையில் கோயில் நுழைவு உரிமை எங்கே? கலப்புமண நிகழ்ச்சியைக் கனவிலாவது காண முடியுமா?

கிராமங்களில் மாடும் மனிதனும் குடிசைவாழ் பகுதியில் ஒரே குட்டையில் குளிப்பதையும் "உயர் சாதி"க்காரர் என்பவர்கள் மட்டும் கோயில் குளத்தில் குளிப்பதையும் இன்றும் காணலாம். சட்டம் சாதியைக் கண்டு பதுங்கிக்கிடக்கிறது.

குத்தூசி

> "கலப்பு மணம் செய்பவர்களுக்கும் செய்தவர்களுக்கும் அர சாங்கப் பண உதவி அல்லது பதவிச்சலுகை உண்டா?"

என்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் கேட்கப்பட்ட கேள்விக்கு, "இல்லை", என்று அமைச்சர் விடையளித்துவிட்டார்.

இராணுவத்தில் சேர்பவர்களுக்கும் அவர்களது வழித்தோன்றல் களுக்கும் மேற்கண்ட இரு சலுகைகளும் உண்டு. ஆனால் இராணுவத் தில் சேர்ந்து உயிரை விடத்துணிபவன் கூட வேறு சாதியிலும் வேறு மதத்திலும் கலப்புத் திருமணம் செய்யத் துணிவதில்லை. காரணம், இது தன்மீது தானே தீ வைத்துக் கொளுத்திக் கொள்வது போன்றது! ஆகையால்தான் இன்று நடக்கும் ஒரு லட்சம் திருமணங்களில் ஒன்று கூடக் கலப்புத் திருமணமாக இருக்க முடிவதில்லை.

சாதி உள்ள வரையில் மக்கள் ஆட்சி முறை ("ஜன நாயகம்") என்பதும், சமதர்மம் ("சோஷலிசம்") என்பதும் வெறும் ஏட்டுச் சர்க்கரை தான்!

> "சாதி முறை என்பது ஜனநாயகத்துக்கும் சோஷலிசத்துக்கும் எதிர்ப்பானது. சோஷலிச சமுதாயத்தை அமைக்க வேண்டு மானால், சாதியை அறவே ஒழித்தாக வேண்டும். வெறும் ஏட்டுத் தீர்மானத்தினால் பயன் இருக்காது,"

என்று புவனேஸ்வர் காங்கிரஸ் மாநாட்டுச் சிறப்பு மலர் கட்டுரையில் முதலமைச்சர் நேரு எழுதியுள்ளார்.

சரி! இந்தக்கருத்து ஏட்டுச் சர்க்கரையா? அல்லது உதட்டுச் சர்க் கரையா?

ஆட்சி அதிகாரத்தைக் கையில் வைத்துக் கொண்டு, சாதி ஒழிப் பில் படுதோல்வி கண்டிருப்பதை ஆளும் கட்சி ஒப்புக் கொள்ளத்தானே வேண்டும்? இந்த முயற்சிக்கான சிறு திட்டம் கூட அரசாங்கத்திடம் இல்லையே!

ஏன்? இப்பெரு முயற்சியில் ஈடுபட்டால் "மேல்" சாதிக்காரர் எனப்படும் யாவருடைய எதிர்ப்பும் தொல்லையும் தாங்க முடியாததா யிருக்கும். இவர்கள்தானே இன்றைய ஆட்சியின் — அதிகாரத்தின் — அச்சாணி? ஆணி கழன்றால் அரசாங்க வண்டி கவிழ்ந்து போகு மல்லவா?

ஆதலால் இன்றைய சாதி — நாயக, பண — நாயக அரசாங்கம் கல்வி — தொழில் துறைகளில் எவ்வளவு விரிந்த திட்டம் வகுத்து

வெற்றிப்பாதையில் சென்றாலும் சாதி ஒழிப்புத் துறையில் ஒரு நூற்றாண்டு பின்னுக்குப் போயிருக்கிறது என்பதை வெட்கமில்லாமல் ஒப்புக் கொண்டாக வேண்டும்.

எனவே, முதலமைச்சர் நேரு கூறியுள்ளபடி சாதி ஒழியாத இன்றைய ஜனநாயக — சோஷலிசம் வெறும் கேலிக் கூத்தேயாகும்.

இன்று சோஷலிச நாடுகளாக இருக்கும் 100 கோடி மக்களைக் கொண்ட (உலகில் மூன்றில் ஒரு பகுதி) நாடுகள் சோஷலிசத்தில் வெற்றி பெற்றிருப்பதற்குக் காரணம், இந் நாடுகள் அனைத்திலும் சாதி என்பதே இல்லை; அதற்கு முட்டுக் கொடுக்கும் கடவுள்—மத—புராண—இதிகாசங்களும் இல்லை.

இந்தியத் தலைவர்கள் இந்த உண்மையை மறந்துவிட வேண்டாம்

"200 கோடி ஆக்கிடுவேன்!"

''மூட மானிடர்களே! முன்னூறு கோடி நடைப் பிணங்களே! உங்கள் எண்ணிக்கைப் பெருக்கத்தைக் கண்டு அஞ்சுகிறீர்களே!

இப்படியே பெருகிக் கொண்டிருந்தால் உணவுக்கும், உடைக்கும், குடியிருப்பதற்கும், கல்விக்கும், மருத்துவத்துக்கும் மற்ற தேவைகளுக்கும் என்ன செய்வது? எத்தனை திட்டங்கள் தீட்டினாலும், அறிவும் விஞ்ஞானமும் எத்தனை வேகமாக வளர்ந்தாலும் 300 கோடி 600 கோடி ஆகும்போது அரைவாசிப் பேர் அரைப்பட்டினி — முழுப்பட்டினி தானே! குடும்பக் கட்டுப்பாடு செய்வதோ பலருக்குப் பிடிக்கவில்லை. மருத்துவ வசதியும் வாழ்க்கை வசதியும் வளரவளர சாக்காட்டு எண்ணிக்கையும் குறைந்து கொண்டிருக்கிறது; பிறப்பு எண்ணிக்கையும் பெருகிக் கொண்டிருக்கிறது, — என்றெல்லாம் ஏங்கித் தவிக்கின்ற மானிடர்களே! நீங்கள் கவலைப்படுவது சரிதான்.

உலகப்போர் ஏதாவது வெடித்தாலும் நாகசாகி மாதிரி லட்சம் லட்சமாக ஒரே விநாடியில் ''மோட்சம்'' போகலாம்! அதற்கும் வழியில்லாமல் தடுக்கிறார்கள், உலகப் பெருந்தலைவர்கள்; சிறப்பாக வல்லரசு நாட்டுத் தலைவர்கள். இவர்கள் சிறிது மனம் வைத்தால் போதும்; ஒரே நாளில் 300 கோடி 3 கோடி, அல்லது 3 லட்சம் ஆகி

விடும். அதன் பிறகு எல்லா மக்களும் இவ் உலக மன்னர்களாக (சோம்பேறிகளாக) இன்ப வாழ்வு வாழலாம்.

ஆதலால் இந்த நெருக்கடி தீர ஒரே ஒரு வழிதான் உண்டு! என்னைப் பின்பற்றுங்கள்! என்னை நம்புங்கள்! நான் நினைத்தால் ஒரே மாதத்தில் இந்த உலக மக்கள் எண்ணிக்கையை 200 கோடி ஆக்கிவிடுவேன்! என் திறமையைப் பற்றி அய்யப்பாடு வேண்டாம்! முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பு அய்ரோப்பாவில் அருஞ்சேவை செய்திருக்கிறேன். பல தடவை பாரத நாட்டில் பணியாற்றியுள்ளேன்! 17 ஆண்டுகளுக்கு முன்பு வட இந்தியாவில்! சென்ற ஆண்டில் வியத் நாமில்! சென்ற மாதத்தில் வங்காளப் பகுதியில்: மூன்றே நாட்களில் ஆயிரம் பேரை — பெண்கள், குழந்தைகள், முதியவர் உட்பட — குறைத்திருக்கிறேன். பகுத்தறிவும், தத்துவமும், நாத்திகமும் என் பரம் பரை எதிரிகள்! ஆதலால் இவை மட்டும் இந்நாட்டில் பரவாதபடி பார்த்துக் கொண்டால் போதும்! முன்பெல்லாம் ப்ளேக் (Plague) நோயினால் ஒரே நாளில் ஊர் ஊராக ஆயிரம் ஆயிரமாகப் பொத் துப் பொத்தென்று செத்து மடிவார்களாம்! அந்த வசதியையும் தொலைத்து விட்டார்கள், பாழாய்ப்போன விஞ்ஞானிகள்! ஆகவே இனி என்னைத்தவிர, உலக மக்கள் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு வேறு நாதியில்லை! இது உண்மை! வெறும் புகழ்ச்சியில்லை! வெற்றி எனதே!"

இவ்வாறு எவரெஸ்ட் உச்சியில் நின்றுகொண்டு மத ப்ளேக் (plague) உலகத்துக்கு ஒலி பரப்புவது உங்கள் காதில் கேட்கிறதா?

உடனே புறப்படுங்கள், மத வெறியைக் கையிலேந்தி! மக்கள் எண்ணிக்கையை மட்டுமல்ல; மக்கள் இன்பத்தையும் சரிபாதியாகக் குறைத்து விடலாம்!

"என்னுடைய நண்பர்களைத் தேர்ந்தெடுப்பது அவர்களது நல்ல தோற்றத்துக்காக; அறிமுகமானவர்களைப் பொறுக்குவது அவர்களின் நல்ல பண்புகளுக்காக; எதிரிகளைத் தேர்ந்தெடுப்பது அவர்களின் அறிவுக்காக. ஒருவனுடைய எதிரிகளைத் தேர்ந்தெடுப்பதில் எவரும் மிகுந்த எச்சரிக்கையோடிருக்க முடியாது."

—ஆஸ்கார் ஒயில்டு.

உலகப் பெரியார் வரலாறு:

லெனின்

[சா. கு.]

I

"லெனினுக்கு வறுத்த ரொட்டித் துண்டுகள் என்றால் மிகவும் பிடிக்கும். மணிக் கணக்காக அவர் எழுதிக்கொண்டே இருப்பார். இடை இடையே மேஜை அறையில் கையைவிட்டு ஒரு ரொட்டித்துண்டை எடுத்து வாயில் போட்டுக்கொள்வார், சில வேளைகளில் ஒன்றுமிருக்காது. எங்களுக்கு நாள்தோறும் ஒரு பவுண்டு ரொட்டிப் பங்கீடு இருந்தது. அவருக்குத் தரப்பட்ட பங்கீடு (ரேஷன்) அவருக்குப் போதாது என்பதையறிந்து நாங்கள் சிலர் சேர்ந்து எங்கள் பங்கீட்டில் ஒரு சிறு பகுதியை அவருக்காக வறுத்து அவர் அறியாதபடி மேஜை அறையில் போட்டுவைத்தோம்."

"இந்த வாரம் மாஸ்கோவுக்கு எவ்வளவு ரொட்டித்துண்டு வந்தது?" என்று கேட்டார் லெனின்.

"எதுவும் வரவில்லை, தோழரே" என்று பதில்.

"அப்படியானல் இவ்வளவு ரொட்டித் துண்டுகள் எனக்கு எப்படி வந்தன?"

விடைகூற முடியவில்லை யாராலும். விழித்தனர்.

"சரி! இதையெல்லாம் அப்படியே கொண்டுபோய் அநாதை விடுதிக் குழந்தைகளிடம் கொடுத்து விடுங்கள்! எனக்குப் போதுமான உணவு இல்லை என்று கருதிக்கொண்டு உங்கள் பங்கீட்டில் மிச்சம் பிடித்து இப்படிச் செய்திருப்பதாகத் தெரிகிறது. இனி இப்படிச் செய்யாதீர்கள்!" என்றார், லெனின்.

இது நடந்தது 1919ல்; ருஷ்யப் புரட்சி நடந்த இரண்டாண்டுக்குப் பிறகு.

காரல் மார்க்சுக்குப் பிறகு மார்க்சிஸம் அழியவில்லை; லெனின் அதை நடைமுறைக்குக் கொண்டு வந்தார்; அவருக்குப் பிறகு லெனினிசம் அழிந்துவிடவில்லை; ஸ்டாலின் அதைப் பரப்பி வெற்றிக்கொடி நாட்டினர். ஒரு மனிதனுக்குப் பிறகு அவனது கருத்து அல்லது கொள்கை அழிந்துவிடும் என்பது உலக வரலாறு அறியாதாரின் கூற்று.

மூன்று பேருக்கு ஒருவர்

இன்று உலகெங்கும் 3½ (மூன்றரை) கோடி பொது உடைமை வாதிகள் (கம்யூனிஸ்ட்) இருக்கின்றனர். அய்ரோப்பா, ஆசிய நாடுகளில் 100 (நூறு) கோடிப் பேர்களுக்கு மேலாகவே (உலக மக்களில் மூன்றில் ஒரு பகுதி) சோஷலிச தத்துவத்தை மேற்கொண்டுள்ளனர். இந்த தத்துவம் ஒன்றுதான் மக்கள் வாழ்க்கையில் நிலையான இன்பத்தையளிக்கும் என்பதை நாள்தோறும் பல்லாயிரக் கணக்கானவர் உணர்ந்து வருகின்றனர்.

உலக நாட்டுச் சிக்கல் எது வானாலும் சரி, சோவியத் ருஷ்யாவைக் கலக்காதபடி இன்று நிகழ்வதே இல்லே.

விஞ்ஞான வளர்ச்சியில், விண்வெளிப் பயணத்தில்; வேலேயில்லாதாரோ பட்டினியாயிருப்பவரோ ஒருவருமே இல்லே என்ற உயர்ந்த நிலேயில், இன்று உலகிலேயே முதலிடம் வகிக்கும் நாடு எது? ருஷ்யா!

இதற்குக் காரணமாயிருந்தவர் யார்? லெனின் என்ற புனே பெயர் கொண்ட விலாடிமீர் இலியிச் உல்யநாவ்.

பிறந்த நாள் ஏப்ரல் 10—1870ல். ஊர், (இன்று அவர் பெயராலுள்ள உல்யனுவுஸ்க்) சிம்பிர்ஸ்க் நகரம். தந்தை ஒரு ஏழைப் பள்ளி ஆசிரியர்; தாயார் ஒரு ஏழை மருத்துவனின் மகள்.

லெனினுக்கு உடன்பிறந்தவர் ஐந்துபேர்; இவர் மூன்ருவது குழந்தை.

பெற்ருேர் இருவருமே கற்றறிந்தவர்களா யிருந்தபடியால் (தாயார் பன்மொழி பயின்றவர்; இசைவல்லுநர்) ஆறு குழந்தைகளுக்கும் நல்ல கல்வி தந்து, நேர்மையும்,சுறுசுறுப்பும், பொதுநல சேவை உணர்வும் உடையவர்களாக வளர்த்தனர். ஆதலால் அவர்கள் யாவருமே புரட்சிக்காரர்களாக உருவாகியதில் வியப்பொன்றுமில்லே.

இளமைத் துடிப்பு

வருங்காலப் புரட்சிவீரன், மனித சமுதாயத்தின் 'தலேவிதி'யையும் 'கடவுள் கட்டளே'யையும் தவிடுபொடியாக்கிய உலகப் பெருந் தலேவன் லெனின் தன் இளமையில் பனிக்கட்டியில் சறுக்கியும், நீரில் நீந்தியும், முரட்டுத்தனமான விளேயாட்டுகளில் ஈடுபட்டும் மகிழ்ச்சியோடும் சுறுசுறுப்போடும் வளர்ந்தான். நண்பர்களுடன் கிராமங்களில் சுற்றுவான்.

விளேயாட்டில் மட்டுமல்ல; படிப்பிலும் முதல்தரமாகவே இருந்தான்; பாடுபட்டுப் படித்து ஆண்டுதோறும் பரிசுபெறும் மாணவஞகத் திகழ்ந்தான். உடன் படித்த சிறுவர்களுக்கும் பாடம் சொல்லிக்கொடுப்பான்.

படிப்பு! படிப்பு! எந்நேரமும் படிப்புத்தான்! புஷ்கின், டால்ஸ்டாய், டர்கனெவ்-போன்ற பல ரஷ்ய எழுத்தாளர்களின் நூல்களை யெல்லாம் கூர்ந்து படித்தான். புரட்சி எழுத்தாளர்களின் (பெலின்ஸ்கி, ஹர்சன் போன்றவர்கள்) நூல்களேயும் படித்தறிந்தான். ஆம்! காதல் கதைகளேப் படிக்கின்ற வயதில். அதிசய மல்லவா?

படிக்கப்படிக்க சுரண்டல் கூட்டத்தாரின்மீது வெறுப்பும் சுரண்டப்படுகின்ற பாட்டாளி மக்கள் மீது இரக்கமும் அன்பும் கொதித்தெழுந்தது.

பள்ளி வகுப்புக்காக எழுதப்பட்ட கட்டுரை ஒன்றைப்படித்த தலேமை ஆசிரியர், சிறுவன் லெனினே அழைத்தார். "என்ன இது? 'அழுத்தப்பட்ட வகுப்பார்' என்று எழுதியிருக்கிருயே! அவர்கள் யார்? என்ன செய்கிருர்கள்? இந்தக் கட்டுரை வேண்டாம், எடுத்துச் செல்!" என்று அதட்டிக் கூறினுராம்.

மார்க்ஸ் இலக்கியத்துக்கு லெனினுக்கு ஆசிரியராக விளங்கியவன், அவனது அண்ணனை அலெக்சாண்டர். இவனும் விஞ்ஞானத் துறையில் முதல்வனுகக் கற்றுத் தேறியும்கூட மக்களுக்காக உழைக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் சார் மன்னனின்

கொடுங்கோலாட்சியை எதிர்த்துப் போராடுவதில் ஈடுபட்டான்.

இளமையில் இடி!

லெனினுக்கு16வயதாயிருக்கும்போது தந்தை திடீரென்று காலமானார். இந்த அதிர்ச்சி அடங்கு முன்னரே, அடுத்த ஆண்டில் அண்ணன் அலெக்சாண்டர், மன்னனைக் கொல்லச் சதி செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுத் தூக்கிடப்பட்டான். இந்தப் பேரிடியைத் தாங்கமுடியாத லெனின், இனிமேல் புரட்சிக்காரனாகவே இருந்துவிடுவதென்று முடிவு செய்துவிட்டான். ஆனாலும் அண்ணன் போன பாதையைக் கண்டித்தான். தனிப்பட்ட அதிகாரியையோ. மன்னனையோ கொன்றுவிடுவதனால் புரட்சி இயக்கம் வெற்றி பெற்றுவிட முடியாது என்பதை உணர்ந்தான்.

புரட்சி இயக்கம் என்றால் அறிவை அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும்; அறிவு எப்படி வரும்? கற்றனைத்து ஊறுவதல்லவா அறிவு? ஆகவே சமுதாய அமைப்பு பற்றிய நூல்களை யெல்லாம் ஆழப் படித்தான். தங்க மெடல் பரிசுடன் பட்டப் படிப்பை முடித்துக் கொண்டு சட்டக் கல்லூரியில் சேர்ந்தான்.

புரட்சிக் கருத்துக்கொண்ட கல்லூரி மாணவர்களுடன் தொடர்புகொண்டு மாணவர் கிளர்ச்சியில் ஈடுபட்டதற்காகக் கல்லூரியைவிட்டு நீக்கப்பட்டுக் கைது செய்யப்பட்டான்.

"பையா! இப்படிக் கலகம் செய்து பயனென்ன? உன் எதிரில் ஒரு சுவர் நிற்பதைக் காணவில்லையா? அதன் மீது மோதுகிறாயே!" என்று கேட்டார், 17 வயது மாணவனைச் சிறைக்குள் அழைத்துச் சென்ற அதிகாரி.

மாணவ லெனின் என்ன கூறினான், தெரியுமா?

"ஆம்! சுவர் தெரிகிறது! ஆனால் அது இடிந்து ஆடிப்போன சுவர். ஒரே தள்ளு! உடைந்து நொறுங்கிப்போகும்."

கிராமம் ஒன்றில் காவலில் தங்கியிருக்குமாறு லெனினுக்கு தண்டனை விதிக்கப்பட்டது. அங்கு ஓராண்டில் போலீஸ் மேற்பார்வையில் இருந்துகொண்டே நிறையப்படித்தான். அங்கிருந்து விடுதலையானதும் மீண்டும் கல்லூரியில் சேர்ந்து படிக்கக் கோரினான்; வெளிநாடு சென்றுவது மேல் படிப்பு படிக்கவேண்டும் என்று கேட்டான். இரண்டுக்கும் அனுமதி கிடைக்கவில்லை. அரசாங்கம் அவன் மீது புரட்சிக்காரப் புள்ளிவைத்து விட்டது.

அச்சமயம் ருஷ்யாவில் சட்ட விரோதமான மார்க்சிச ஆராய்ச்சிக் கழகங்கள் பல இருந்தன; இவற்றில் ஒன்றில் லெனின்

வளர்ந்த குழந்தைகள்!

"மதம் சம்பந்தப்பட்ட வரையில் மனிதர்கள் யாவரும் வளர்ந்த குழந்தைகளே யாவார்கள். ஒரு மதம் எவ்வளவுக்கெவ்வளவு மிகுந்த அபத்தமாயிருக்கிறதோ, எவ்வளவுக்கு மிகுதியான அதிசயங்களைக் கொண்டதாயிருக்கிறதோ, அவ்வளவுக்கு அதன் சக்தியும் மிகுந்திருக்கும். நம்பக் கூடாத சங்கதிகள் மிகுந்திருந்தால் அந்த அளவுக்குக் கடவுளின் சக்தி அதிகம் என்று மனிதன் நம்புகிறான்."

—ஜீன் மெஸ்லியர்

("மரண அறிக்கை"—பக்கம்—52)

சேர்ந்தான். மார்க்ஸ்—எங்கெல்ஸ் நூல்களைப் படித்து ஆராய்ந்தான்: பல பாட்டாளிகளின் உழைப்பை நுகர்ந்து ஒரு சில முதலாளிகள் செல்வம் திரட்டும் கொடுமையை நிச்சயம் ஒழித்தாக வேண்டுமென்று உறுதி பூண்டான்.

மார்க்சியவாதி

ருஷ்யப் புரட்சிக்காரர்களில் பலர் மார்க்சிசத்தை ஊன்றிப் படித்து வந்தனர். இக்கொள்கையை ருஷ்யாவில் முதன் முதல் பிரசாரம் செய்தவர் ஜி. வி. ப்ளெகனுவ் என்பவர்; சார் ஆட்சியின் கொடுமையைத் தாங்காமல் ஜெனிவாவுக்கு (சுவிட்சர்லாண்டு) குடியேறிய இவரும் இவரது தோழர்களும் மார்க்ஸ்—எங்கெல்ஸ் நூல்களை ருஷ்ய மொழியில் பெயர்த்து ருஷ்யாவுக்குள்ளே இரகசியமாகப் பரப்பி வந்தனர். இவற்றையெல்லாம் கற்றுணர்ந்த லெனின் முழுமூச்சான மார்க்சியவாதியாகிவிட்டான்.

1889ல் லெனின் சாமரா என்ற இடத்தில் தங்கி நாலரை ஆண்டுகள் தீவிரமாகப்படித்தான். மார்க்ஸ்-எங்கெல்ஸ் நூல்களை மூல நூலாகவே படிக்கவேண்டுமென்ற ஆசையில் ஜெர்மன் மொழி கற்றுன். பிறமொழிகளையும் கற்கலானுன். மார்க்ஸ் எழுதிய "பொது உடைமை அறிக்கை" (Communist Manifesto) என்பதை ருஷ்யமொழியில் ஆக்கிப் பரப்பினுன்.

லெனின் சாமராவுக்கு வந்த சமயத்தில் நரோட்னிக் என்ற பிற்போக்கு இயக்கத்தார் மார்க்சிசத்தை எதிர்த்துப் பிரசாரம் செய்துகொண்டிருந்ததைக் கண்டார். புரட்சி நோக்கங்கொண்ட இளைஞர் பலர்—பெரும்பாலும் மாணவர்கள்-இந்தக் கூட்டத்திடம் சிக்கிக் கிடந்தனர்.

இந்தப் பிற்போக்கு பயங்கர இயக்கத்தைக் கண்டித்து லெனின் சொற்பொழிவாற்றினுர். இதுதான் இவரது முதல் (கன்னி) சொற்பொழிவு.

தனிப்பட்ட அரசாங்க ஊழியர்களைக் கொல்வதன் மூலம் சார் ஆட்சியை ஒழித்துவிட முடியாது என்பதையும், பாட்டாளி மக்களை ஒன்று திரட்டிப் பெரும் புரட்சி செய்தால்தான் முதலாளித்துவத்துக்கும் அதைத் தாங்கி நிற்கும் சார் ஆட்சிக்கும் முடிவுகாலம் வரும் என்றும் லெனின் விளக்கிக்காட்டினுர்.

பயங்கர இயக்கத்தினர் தூக்கிலிடப்பட்டும், நாடு கடத்தப்பட்டும், சிறைப்படுத்தப்பட்டும் அரசாங்கத்திஞல் அடக்கப்பட்டனர்.

குடும்பத்தோடு இங்கு தங்கியிருந்த லெனின் எந்நேரமும் மரத்தடியில் ஒரு கட்டுப் புத்தகங்களை வைத்துக்கொண்டு தீவிரமாகப் படித்துக்கொண்டும் எழுதிக்கொண்டும் இருப்பார். தன்னுடைய அக்காள் ஆனு வந்து உணவுக்கு அழைக்கும் வரையில் படிப்புத்தான்.

இடை இடையே நாள் தவருமல் உடற்பயிற்சி; நீண்ட தொலைவு நடத்தல்; கருவி இசை; வாய்ப்பாட்டு; 'செஸ்' விளையாட்டு-போன்ற பொழுது போக்குங்கூட உண்டு.

நான்காண்டு படிக்கவேண்டிய கல்லூரிப்படிப்பை பதினெட்டே மாதங்களில் தனியே வீட்டில் படித்து பீட்டர்ஸ்பர்க் பல்கலைக் கழகத்தில் சட்டப்பட்டம் பெற்றுர்; முதல் வகுப்பில் தேறிப் பரிசும் பெற்றுர்.

(தொடரும்

வாலுக்குப் போவதெங்கே?

[உ.க.]

[அர்ச்சகர் வேலைக்குப் பார்ப்பனரைத் தவிர மற்றவர்களும் தகுதியுள்ளவராகலாம் என்பது பலரது ஆசை. 'எந்த வேலைக்கும் எல்லோருக்கும் உரிமையுண்டு;' என்பது அரசியல் சட்ட விதி. ஆனாலும் அர்ச்சகர் வேலையில் மற்றவர் எவரும் இன்று வரையில் இடம் பெற வில்லை. இது பற்றிய கருத்தாழங் கொண்ட கிண்டல் உரையாடல் இது. சிறந்த எழுத்தாளரான உ. க. சுவைபடத் தீட்டியுள்ளார்.]

"குருக்களய்யா! உங்கள் ஸ்தானிக உத்தியோகத்திற்குப் பயிற்சி பெற்ற எந்தச் சாதி ஆளாயிருந்தாலும், நியமிக்கப் போகிறார்களாம்! உங்கள் அர்ச்சகர் சேவை கூட திசை மாறி ஓடும்போலிருக்கிறதே!"

"அது தான் நடைபெறாது!"

"ஏன் நடைபெறாது? அர்ச்சகர் வேலைக்குத் தான் 'பயிற்சி' கொடுத்து விடுகிறார்களே!"

"எங்கள் ஸ்தானிகம், அர்ச்சகம் சேவை பார்ப்பதென்றால், மற்ற தொழிலுக்கு இல்லாத தனி ரகக் குணங்கள் தெய்வாம்சமாகப் பொருந்த வேண்டும். அவை சொல்லிக் கொடுத்துப் பயிற்சி செய்வதால் மட்டும் வந்து விடாது."

"அவை என்ன? சொல்லுங்களேன்."

"அவை எங்களுக்கே தெரிந்தவை. அந்தரங்கமானவை. உமக்கு மட்டும் சொல்கிறேன்."

மேற்கண்டவை எனக்கும் சிவன் கோயில் குருக்களுக்கும் நடந்த உரையாடல். அவர் எனக்கு மட்டும் சொல்லியவைகளைச் சுருக்கி இங்கே எழுதுகிறேன்:-

"குருக்கள் வேலை பார்ப்பது என்றால், சர்க்கார் ஆஃபீஸ் குமாஸ்தா மாதிரி வெள்ளைத் தாளும் ஃபவுண்டன் பேனாவும் கையிலிருந்தால் சர்க்கார் வேலை உட்கார்ந்தபடியே நடைபெற்று விடுகிறதே! அதுபோல தட்டமும், மணியும் கையில் கொடுத்து கோயிலுக்குள் ஆளை அனுப்பி விடுவதல்ல. அல்லது மணியை அடிக்கும்போது தட்டத்தைக் கை நழுவ விடாமலும், தட்டத்தைச் சுழற்றும் போது மணி அடிக்க மறந்து அதைக் கீழே போட்டு விடாமலும் இருக்கும்படி கைகளுக்குப் பயிற்சி கொடுத்து விடுவதல்ல எங்கள் தொழில். அர்ச்சகர் குருக்கள் முதலிய உத்தியோகஸ்தர்களுக்கு இருக்க வேண்டிய குணங்களை வரிசையாகச் சொல்லி வருகிறேன். கேளும்!

முதலாவது, கோயில் பூஜை செய்யும் குருக்களுக்கு "சரீர சம்பத்து" வேண்டும். அதாவது, இடுப்பு, வயிறு, மார்பு, கழுத்து முதலியவைகளின் பிரிவு தெரியாமல் சதை தூர்த்து, தாழியில் ஊறிய பிண்ணாக்கு மூட்டை போல உப்பி ஊதிய ராஜ சரீரமாய் எப்போதும் இருக்க வேண்டும். உடல் சாம்பல் பூத்த கரு நிறத்தோடு விளங்க வேண்டும்.

அடிக்கடி முகம், தலை முதலியவை களை வழித்துக் கொள்ளாமல், சிலிர்த்து நிற்கும் முள்ளம் பன்றி போல மயிர்க்கால்கள் குத்திட்டு நின்று பயமுறுத்த வேண்டும். சமிதை (விறகு) எரிவதால் உண்டாகும் புகையில் கண்களைக் கோவைப் பழமாகச் சிவக்கச் செய்து, மற்றவர்கள் தம்மை நேரே பார்க்கக் கூசும்படி செய்து கொள்ள வேண்டும். குருக்கள் இந்தக் கோர உருவத்தோடு கையில் தீபாராதனைத் தட்டு ஏந்தி கர்ப்பக் கிரகத்திற்குள்ளிருந்து வெளி வந்தால் தான், சன்னதியின் இரு புறமும் கை கூப்பி நிற்கும் ஆண்டவன் பக்தர்கள், பீதியடைந்து, 'குகையில் பதுங்கியிருந்த பெரும் பூதம் நெருப்பைக் கக்கிக் கொண்டு இப்பொழுது கால் வாங்கி வருகிறது' என்று நடுங்கிக் கையிலிருக்கும் காசுகளை அப்படியே தட்டத்தில்கொட்டி விடுவார்கள். ஆண்டுக்கொருதரம் குடிமக்களிடமிருந்து வரி வசூல் செய்ய மாட்டாமல் சர்க்கார் மூக்கால் அழுகிறதே! ஆனால் கோயிலில் இந்த வேஷத்தோடு உண்டியல் தட்டு எடுத்தால் கால் நாழிகையில் காணிக்கைப் பணம் பை பையாகக் குவிந்துவிடும்.

இரண்டாவது, கோயிலில் பூசை செய்யும் அர்ச்சகர்த் தொழில் 'ஒரு மனிதனைப் பொறுத்தது' என்ற நினைவு தான் எல்லோருக்கும் உண்டாகும் அப்படியல்ல இது. இந்தத் தொழில் தொடர்ந்து நீடித்து வருவதற்குப் பின்னணிச் சக்தியாக ஒரு ஸ்தாபனமே' கூட்டுறவாக பல ஆண்டுகளாக வேலை செய்து வருகிறது. கோவிலும், கோவிலுள்ளே நடைபெறும் பூசை முதலான தெய்வ கைங்கர்யங்களும் நிலைத்து நின்று இடையறாது 'தொழில். புரிய வைக்கும் திருக்கூட்டத்தின் அங்கத்தினர்கள்:- 1. சாஸ்திரியார் 2. தீட்சதர் 3. பௌராணிகர் 4. சோதிடர் 5. புராணப் பிரசங்கியார் 6. புலவர் 7. கலைஞர் அல்லது கூத்தாடிகள் இந்த திருச்சபைக்கு நிரந்தரத் தலைமை ஸ்தானம் வகித்து வருபவர்கள் ஸ்ரீலஸ்ரீ சங்கராச்சாரியார் ஸ்வாமிகளும் ஜீயர்ஸ்வாமிகளும், மத்வாச்சாரியாரும், இவர்கள் திருவாய் மலர்ந்தருளுவதை அப்படியே சிரமேல் வைத்துக் கொண்டு ஆதரித்துவரும் பெரிய மடாதிபதிகளும் ஆவார்கள். இவர்கள் சுகத்திற்கும், வழிமுறைக்கும் எவ்வித இன்னலும் நேராமல் கட்டிக் காத்து வருவது அரசாங்கம். இத்தனை பேரும் ஒருவருக்கொருவர் ஒரு விதத் தொடர்பும் இல்லாதவர்கள் போல் மேல் பார்வைக்குத் தோன்றினாலும், சங்கிலித் தொடர்போல் ஒருவருக்கொருவர் பிணையுண்டு, முதல் மனிதரிடத்திலிருந்து கிளம்பும் 'சக்தி,' அடுத்த எண்ணிக்கையில் நிற்கும் நபரை உந்தித் தள்ளி, அடுத்த கட்டத்திலுள்ள ஆளைத் தொழில் புரியவைத்து, வெடி மருந்தில் திரிவழியாகத் தீவைத்தது போல, படிப்படியாய் எரிந்து வந்து இறுதியில் கோயிலில்—குருக்கள் பூஜையான 'தேவ-தா கிரியையில் வந்து முடிகிறது!

இந்தக் கட்டுப்பாடான தொழில் முறைக்கு ஒரு உதாரணம் சொல்லித்தான் விளக்க வேண்டும்.

''தைமாசம் போகிப்பண்டிகையின்று 'சங்கராந்தி' இப்பூமண்டலத்திற்கு விஜயமாகிறது. இது சாஸ்திர விதி. பகவான் ஆக்ஞை", என்று சாஸ்திரியார் முதல்விதை ஊன்றுவார். இரண்

டாம் கட்டத்திலிருக்கும் தீட்சதர், "சங்கராந்தி தேவதை மகா உக்ரத்தோடு கீழிறங்குகிருள். உலகுக்கு என்ன 'விநாச' காலமோ!" என்று துக்கம் தெரிவிப்பார்! அடுத்த கட்டத்திலிருக்கும் பௌராணிகர், 'சங்கராந்தி தெய்வம் ஒருசாண் அகலமுள்ள கம்பளி ஆடை சுற்றி, மஞ்சள் பூசி, இரத்த திலகமிட்டு, வளைந்த கோரப் பல்லுடன், ஓரோ கொங்கையோடு கொழுந்துவிட்டு எரியும் தீச்சட்டி ஏந்தி, சூலாயுதம் கையில் பிடித்து, தலை வெட்டுண்ட கழுதையின்மேல், பேய்ச் சிரிப்போடு தந்திவேகத்தில் கீழிறங்குகிருள்" என்று, சங்கராந்தியின் கூடவே வந்த தோழிப் பெண்போல சுலோகங்கள் இசைப்பார்.

அடுத்த நிலையில் நிற்கும் சோதிடர், சங்கராந்தி விஜயத்தால், ஒன்பது கிரகங்களும் தம் தம் வீடுகளில் இல்லாமல் மனைவிகளை அநாதரவாக விட்டுவிட்டு, திசைக்கு ஒன்ருக ஓடிவிடுமாகையால் இந்நில வுலகில், நீர், நெருப்பு, காற்று முதலியவைகளால் பெருத்த துன்பம் விளையுமென்றும், பெண்களும் ஆண்களும் நிலைகுலைந்து போவார்களென்றும்'' புளியங்கொட்டைகளை வைத்துக்கொண்டே கணக்கிட்டுச் சொல்லிவிடுவார்.

புராணப்பிரசங்கியாரோ, "வெள்ளப் பெருக்கால் ஆற்ருேரமாக இருக்கும் ஊர்கள் அடித்துச் செல்லப்படுமென்றும், நெருப்பால் ஏழைகளின் ஓலைக் குடிசைகள் சாம்பலாகுமென்றும், செல்வர்கள் இரத்தக் கொதிப்பு, வயிற்று வலியால் துன்புறுவார் என்றும் தரித்திரப்பேய் பிடித்த பெண்கள் உடலை விற்பார்களென்றும் கேட்பவர் நடுங்கும் படி இரவு முழுதும் பிரசங்கம் செய்வார்.

புலவர்கள் இவைகளை நாடகத் தமிழில் பாக்களாகவே பாட, அதனைக் கலைஞர்கள் நாடக மேடைமீது 'சங்கராந்தி நாடகம்' நடித்து அதையே படமபிடித்து பேசும்படமாக மாற்றி பார்ப்பவர்கள் பொருள்களைக் கறந்த வண்ணமிருப்பார்கள்.

இவைகளெல்லாம் உடனுக்குடன் முன் ஏற்பாடு செய்தது போல் அடுத்தடுத்து நிகழ்ந்து விடுகின்றன. மக்கள் தாம் கேட்டவைகளைப் பற்றி சிந்திக்க இடைவழியில்லாமல் போவதால் மனங்கலங்கி, மரண தண்டனையடைந்தகைதிமுடிவாக குடியாட்சித் தலைவரிடம் தஞ்சம் புகுவது போல,இறுதிக்கட்டமாகக் கோயிலினுள் பிரவேசித்து எங்கள் மூலமாய் ஆண்டவனின் அடைக்கலம் வேண்டுகிருர்கள். குருக்களாகிய நாங்களும், பயத்தால் ஜீவனிழந்து நிற்கும் அவர்களுக்கு கோயிலில் லட்சார்ச்சனை கோடி எண்ணெய் விளக்குப் போடுதல், நவக்கிரக பூஜை, மண்டலாபிஷேகம் முதலிய பரிகாரங்களை செய்விக்கச் செய்து அதனல் நாங்களும் எங்கள் இனமும் பெண்டு பிள்ளைகளோடு உண்டு உடுத்து, துரும்போடு துரும்பெடுத்துப் போடாமலே 'ராஜ போகம்' இன்றுவரை அனுபவித்து வருகிருேம்.

ஆச்சார்ய ஸ்வாமிகளும், மேலே குறிப்பிட்டவைகளெல்லாம் 'கட்டுக் கோப்பு'க் கலைந்து அழிந்துபோகாமலிருக்க, ஏதுவாக ஆங்காங்கே, புதிய கோயில்கள் எழுப்புவித்தும், பழைய கோயில் குட்டிச்சுவர்களைப் புதுப்பித்து கும்பாபிஷேகம் முதலிய திருப்பணிகள் அடுத்தடுத்து நிகழும்படி செய்தும் அனுக்கிரகித்தும் வருகிருர்கள். அரசாங்க

மும் இவர்களுக்குப் பக்க பலமாக நின்று, இவைகளை அமோகமாக் ஆதரித்து நிற்கிறது!

இவ்வளவும், ''தெய்வத்தின் ''லீலாவிபூதி'' என்ற இருண்ட போர்வைக்குள் தொன்று தொட்டு நடைபெற்று வருகின்றன! குருக்கள்-அர்ச்சகர்களாகிய நாங்களும் அந்த சர்வேசுவரன் நிழலில் தங்கியிருக்கும் போது எங்களுக்கும் ''நித்ய மங்களம்'' உண்டாவதில் தடையிருக்க நியாய மில்லையே!

இந்நிலையில் பிராமணரல்லாத வேறு சாதியார் தட்டமும் மணியும் எடுத்துப் பூஜை செய்வது, தமிழிலேயே 'அர்ச்சனை' செய்வது, கோயிலுக்குள்ளே தரகர் இல்லாமல் பக்தர்களே நேருக்கு நேராக மூலவருக்குப் பூஜை செய்வது முதலிய நிதழ்ச்சிகள் நடைபெறுமானால்-சங்கராச்சாரியார், ஜீயர்ஸ்வாமிகள் இவர்களுடைய அனுக்கிரகம் கிடைக்குமா? புராணிகர், சோதிடர் முதலியவர்களெல்லாம் தம்தம் 'மகிமை'யை இழந்து இடத்தைக் 'காலி' செய்யவேண்டிய நிலை வந்துவிடுமே!

தெய்வத்தின் கோயிலின் பின்னணிக் காப்பாளராக விளங்கும் இத்திருக் கூட்டம் செயலிழந்து மறையுமானால், ஆஸ்திகமத பக்தர்களுடைய மனமும் விடுதலையடைந்து, காரணகாரியங்களின் தொடர்பை சிந்திக்கத் தொடங்கிவிடும். உடனே மெய்ப் பொருள் காணும் அறிவும் விழிப்படைந்து பலம் பெற்று வாழ்க்கைப் போருக்குஈடுகொடுத்துஎதிர்த்து நிற்க ஆயத்தமாகிவிடும்! இந்த நிலை வந்துவிடுமானால் அப்புறம் பூஜை ஏது? ஈஸ்வரன் ஏது? இந்து மதத்தின் 'கதி' மண்ணுக்குள் மறைந்து விடாதா? இந்த நிலை வருவதற்கு எங்கள் ஆச்சாரியசுவாமிகளும்,-தத்துவ சாஸ்திரிகளான நம் ஜனாதிபதிகளும்,-எதிர் எதிரே இடைவெளியில்லாமல் இருசாரமாக வீடுக்ள் அமைத்திருக்கும் பிராம்மண அக்ரகாரமும்,-உயிரோடு இருக்கும் வரை சாத்தியமே இல்லை. அதனால் தான் ஆதியில், ''அர்ச்சகர் வேலை வேறு திசை ஓடாது'' என்று சொன்னேன்.''

—என்று தம் தொழிலின் அந்தரங்க நுட்பங்களின் விளக்க உரையை முடித்தார்.

நானும், ''குருக்களய்யா, நீங்கள் சொல்லிவந்த சங்கதிக் கோர்வை-'அனுமந்தன் வால்' என்பார்களே, அதுபோல, உங்களுக்குப் பின்பலமாக அமைந்திருக்கிறது. உங்களைத் தவிர எங்கள் இனத்தார் யார் அர்ச்சகர் வேலையை எவ்வளவு மந்திரங்கள் கற்றுப் பணிபுரிந்தாலும், குரங்கின் வால்போல் அமைந்திருக்கும், நீங்கள் சொல்லிய அந்த ஏழுபேர்களுடைய வரிசையான ஒத்துழைப்பும், மற்ற ஆச்சாரிய சுவாமிகளுடைய அனுக்கிரகமும் கிடைப்பது குதிரைக் கொம்பாகவே முடியும் இந்த நிலையில் உங்கள் இனம் தவிர ஏனையவர் அர்ச்சகர் வேடம் தரித்தாலும், அவர்கள், கவி பாரதி பாடிய குரங்குப் பாட்டில்,

''கோபுரத்தில் ஏறத்தெரியாமல்
ஏணிவைத்துச் சென்றாலும்,
வேறெதைச் செய்தாலும்,
வேகமுறப் பாய்ந்தாலும்...
வாலுக்குப் போவதெங்கே?''

என்ற வரிகளைத்தான் நினைத்து ஏக்கம் கொள்ளவேண்டும்! என்று முடித்தேன்! ★★

K. S. மகாதேவன், B.SC., M. A.

குழந்தைக்குப் புத்தகம் :

6. புத்தகத்தின் தகுதி நிலை

இன்று குழந்தை இலக்கியத் துறையில் ஓரளவு வணிக நோக்கும் செயல்பட்டு வருவதால் தகுதி குன்றிய புத்தகங்களும் வெளிவரும் நிலை இருந்து வருகிறது. தகுதி குன்றிய நூல்களில் பயனற்றனவும் உண்டு; கேடு பயப்பனவும் உண்டு.

பயனற்ற ஏடுகள்

குறிப்பிடும் அளவிற்குப் பயனுள்ள செய்தியையோ, இலக்கியச் சுவையையோ, பண்பட்ட நல்லுணர்ச்சிகளையோ தர இயலாத ஏடுகளைப் பயனற்ற ஏடுகள் என்று சொல்லலாம். இத்தகைய ஏடுகளில் வருகின்ற 'வாழ்க்கை வரலாறு' 'வீரச் செயல்' போன்ற செய்திகள் உண்மையுலகிற்கு முற்றிலும் புறம்பானவையாகவே இருக்கும்! பயனற்ற ஏடுகள் குழந்தைகளை உண்மையுலகிலிருந்து நெடுந் தொலைவிற்கு இழுத்துச் சென்று வாழ்க்கையில் எவர்க்கும் பயன் படாதவர்களாக்கி விடுகின்றன. பழங்காலத்துத் தேவதைக் கதைகளைப் போன்றும் இந்தக் 'கற்பனை' ஏடுகள் இருப்பதில்லை. தேவதைக் கதைகள் கற்பனையுலகைக் காட்டினாலும் அவற்றில் சுவையும் தெளிவும் இருக்கும். தேவதையுலக நிகழ்ச்சிகளை யாரும் உண்மையுலக நிகழ்ச்சிகளுடன் குழப்பிக்கொள்வதில்லை. ஆனால் இந்தப் 'புதிய கற்பனை' ஏடுகளோ, போலியுலகத்தை உண்மையுலகம் போன்று காட்டிக் குழந்தை உள்ளங்களைக் குழப்பிவிடுகின்றன! இப்புத்தகங்கள் கூறும் கதைகளில் வருகின்ற சிறுவர்கள் அறிவும் பயிற்சியும் உள்ள மருத்துவரும், பொறியியலாரும் செய்ய முடியாத செயல்களைக் கூட எளிதாகச் செய்து முடித்து அவர்களை அறிவிலிகளாக்குவர்! பருவமுறாத பள்ளிப் பிள்ளைகள் நள்ளிரவில் குகைகளிலும் நிலவறைகளிலும் நுழைந்து, கத்தி, இரத்தம் போன்றவற்றிற்கிடையே நெளிந்து துப்புத் துலக்குவர். பிள்ளைகளைக் கண்காணிக்கப் பெற்றோர்கள் இருக்கும் உண்மையையே கதையாசிரியர் மறைத்து விடுவார்கள். அவ்வாறே நாட்டின் நடைமுறைச் சட்டங்களையும் அவர்களின் கற்பனையுலகில் காணமுடியாது! பயனற்ற நூல்களில் வரும் கதை மாந்தருடன் நட்புக் கொண்டுவிட்ட குழந்தைகள் செயற்கரிய செய்யும் அந்த நண்பர்களுடன் மீண்டும் மீண்டும் பழக விரும்பிப் படித்த புத்தகத்தையே திரும்பத் திரும்பப் படித்துக் கொண்டிருப்பர். இத்தகைய குழந்தைகள் புத்தகத்தைச் சுவைக்கின்றனர் என்று கருதுவதும் தவறாகும். புத்தகத்தைச் சுவைப்பது வேறு; புத்தகத்தை ஒரு கருவியாகக் கொண்டு உண்மையுலகிலிருந்து விலகி ஓடுவது வேறு!

கேடு பயக்கும் ஏடுகள்

கொலை, கொள்ளை, ஏமாற்றுதல் போன்ற செய்திகளையே நூற்

பொருளாகக் கொண்டு வெளி வரும் ஏடுகளைக் கேடு பயக்கும் ஏடுகள் என்று கூசாமல் கூற லாம். இவற்றில் வரும் 'திடுக் கிடும்' செயல்கள் மிகவும் கவர்ச் சியான முறையில் சொல்லப்படு வதால் குழந்தைகட்கு இயல்பாக அமைந்திருக்கும் அறவுணர்வு தேய்ந்துவிடுகிறது. நெஞ்சத் தை நஞ்சாக்கிக் கொண்டுவிட்ட குழந்தைகள் வாழ்க்கையிலும் 'திடுக்கிடும்' செயல்கள் செய்ய விரும்பிக் குற்றப் பாதையிலே குதித்து விடுகின்றனர். கொலை—கொள்ளை நூல்கள் இலக்கியப் புலத்திலே முளைக்கும் களைகள். அவற்றைக் களையும் திருப்பணி யைப் பெற்றோரும் ஆசிரியரும் மேற்கொண்டேயாக வேண்டும்.

நல்லேடுகள்—பொது இயல்பு

நல்ல புத்தகங்கள் குழந்தை களின் அறிவுக் கருவூலத்தை மேலும் மேலும் பெருக்குவதற் குத் துணை செய்யும். அழகை விரும்பிச் சுவைக்கும் மரபினைக் குழந்தைகளிடம் நிலையாக ஏற் படுத்தும். ஊன்று கோலாக நின்று எதிர்காலத்தில் பயன் படும் பல நல்ல கோட்பாடு களைக் குழந்தைகட்குத் தந்துத வும். மேலும் மேலும் பல நல்ல இலக்கியங்களைத் தொடர்ந்து படிக்கக் குழந்தைகளைத் தூண் டும். இவை நல்ல ஏடுகளின் பொது இயல்புகளாகும். இனிச் சிறப்பியல்புகளாகச் சில கூறு பாடுகளைக் கூறலாம்.

பொருட் சிறப்பு

ஒரு புத்தகம், அதன் தலைப்பு, மேலட்டை, படங்கள், ஆசிரியர் ஆகிய காரணங்களுக்காகவுங் கூடக் குழந்தைகளால் மிகுதி யாக விரும்பப்படலாம். ஆனல், எது எப்படி இருந்தாலும் புத்த கத்தில் முதற் சிறப்பாகப் பொருட் சிறப்பு (quality of the content) இருந்தாக வேண்டும். அரசியல் போராட்டங்களும் சமு

20 ஆண்டுக்குள் அரசியல் கொலைகள்

1945: எகிப்து; மெகர்பாட்சா (பிரதமர்)
1946: சயாம்; ஆனந்தமகிடோல் (மன்னர்)
1947: பர்மா; ஜெனரல் அவுங்சானும் 5 அமைச்சர்களும்
1948: இந்தியா; காந்தியடிகள்
1948: எகிப்து; நொக்ராச்சி பாட்சா (பிரதமர்)
1949: சிரியா; ஒசினியாம் (பிரசிடெண்ட்)
1949: ஈரான்; அப்துல் உசேன் (பிரதமர்)
1951: ஈரான்; அலிரச்மாரா (பிரதமர்)
1951: ஜோர்டான்; அப்துல்லா (மன்னர்)
1951: பாகிஸ்தான்; லியாகத் அலிகான் (பிரதமர்)
1955: பனமா; அந்தோனியா ரீமான் (பிரசிடெண்ட்)
1957: கவுதமாலா; காசுடில்லோ அர்மன் (பிரசிடெண்ட்)
1958: ஈராக்; மன்னர், இளவரசர், பிரதமர்.
1959: இலங்கை; பண்டார நாயகா (பிரதமர்)
1961: டொமினிகன்; துருசில்லோ (சர்வாதிகாரி)
1963: அமெரிக்கா; கென்னடி (பிரசிடெண்ட்)

தாயப் பூசல்களும், பால் விழைவு பற்றி எழும் போட்டிகளும் குழந்தைகளின் ஏடுகளில் இடம் பெறுதல் ஆகாது. அன்றியும், குழந்தைகள் மெல்லிய உள்ளங் கொண்டவர்கள்; வாழ்க்கையின் மேடு பள்ளங்களை நேருக்கு நேராகக் கண்டு அவற்றைப் பொறுத்துக் கொள்ளும் ஆற்றல் அவர்களிடம் இருக்கும் என்று நாம் எதிர்பார்த்தல் இயலாது. எனவே, வாழ்வில் நடைபெறும் கொடுமை, கொலை, வஞ்சம் போன்ற செய்திகளைப் பச்சை யாக எடுத்துக் குழந்தைகட்குக் கூருமல் இருப்பது நல்லது. குழந்தைகளிடம் மிகவும் புகழ் பெற்றுத் திகழும் சிந்தரல்லா (cinderella) கதையைக் கூட, அது சிற்றன்னையின் கொடுமை பற்றிப் பேசுகின்றது என்ற காரணத்திற்காகச் சில நாடு களில் தடை செய்திருக்கிருர்கள்! மேலும், இக்காலக் குழந்தைகள் விரும்பிச் சுவைக்க முடியாத பழங்காலச் சமூகப் பழக்க வழக் கங்களை—ஒருவன் பல பெண் களை மணப்பது, ஒருத்தி பல ஆண்களை மணப்பது போன்ற செய்திகளை—குழந்தைக் கதை களில் நுழைக்காமல் இருப்பதும் வேண்டற்பாலதாகும்.

குழந்தைகள் இயற்கையி லேயே அறிவியல் உள்ளம் படைத்திருக்கின்ருர்கள். அவர் களின் அறிவியற் கண்களைப் பழு தாக்கும் வகையில் அடிப்படை யற்ற, உண்மைக்கு மாறுபட்ட நம்பிக்கைகளை உண்மை போலப் புத்தகங்களில் எடுத்துச் சொல் லுதல் ஆகாது. பாம்பின் நஞ்சில் மாணிக்கம் தோன்றுவது; நத் தைகள் பாம்புகட்குத் தண்ணீர் சுமந்து செல்வது, குளவிகள் வேறு இனத்துப் புழுக்களைக் கொட்டித் தம்மினமாக மாற்று வது, தேரைகளும் தவளைகளும் நூற்றுக்கணக்கான ஆண்டுகள் பாறையினுள் அடைபட்டு உயிர் வாழ்ந்திருப்பது, போன்ற நம்பிக் கைகள் அறிவியல் வளர்ச்சியைக் கெடுப்பனவாகும்.

மற்ருெரு செய்தியையும் குழந் தைக்கு நூல் எழுதுகின்றவர்கள் மனத்திலே கொள்வது நல்லது. குழந்தைகளின் உள்ளத்திலும் எத்தனையோ சிக்கல்களும், ஆசைகளும் துடிதுடிப்புக் களும் இருக்கவே செய்கின் றன. குழந்தைக்காக எழுதப் படும் கதைகள் அவற்றை மைய மாகக் கொண்டு உருவாதல் வேண்டும். அப்படி இல்லாமல், பெரியவர்கட்கு இருக்கும் வாழ்க் கைப் பாடுகளையெல்லாம் குழந் தைகளின் புத்தகத்திலே நுழைப் பது பொருத்தமாகாது. ஆலை முதலாளியின் பிடிவாதம், போனஸ் தொகை பெருத தொழிலாளர்களின் வேலை நிறுத் தம், ஊர்வலம், போன்ற செய்தி களால் குழந்தையுலகத்திற்கு எத்தகைய சுவையும் ஊட்ட முடியாது!

மொழி நடை

எளிய இனிய நடையில் செய் தியைச் சுவையாக எழுது வதையே குழந்தைகள் விரும்பு கின்றனர். இடை இடையே உரையாடல்களை இடம்பெறச் செய்து விறுவிறுப்பாகக் கதையை நடத்திச் செல்வது குழந்தைகளின் படிப்பார்வத் தைத் தூண்டுவதாக இருக்கும். அவ்வாறின்றி வெறும் வர்ணனை களில் தேங்கி நிற்பது படிக்கின்ற குழந்தைகட்குச் சோர்வையே தரும்! புத்தகத்தில் ஆளப்படும் சொற்களில் பெரும்பகுதி குழந் தைகள் வழக்கமாகப் பேசும் சொற்களாக இருத்தல் வேண் டும். ஆனல், குழந்தைகளின் உச்சரிப்பைப் பின்பற்றி மொழி நடையைக் கொச்சையாக மாற்றி

விடுதல் கூடாது. குழவியின் தளர் நடை காண்பதற்கு இனிதாக இருத்தல் போன்று குழந்தையின் மழலை மொழி கேட்பதற்கு இனிமையாக இருக்கும்; ஆனால், குழந்தைகள் போலப் பெரியவர்கள் நடந்து காட்டினால் குழந்தைகளே கைகொட்டிச் சிரிப்பார்கள்; குழந்தைகள் போலப் பெரியவர்கள் பேசிக் காட்டினாலோ, குழந்தைகளே அவர்களைத் திருத்துவதற்கு முன் வந்து விடுவர்! குழந்தைப் புத்தகங்கள் குழந்தைகட்கு நல்ல உச்சரிப்பைக் கற்றுத் தருதல் வேண்டும். கொச்சை நடையில் நூல் எழுதுவது குழந்தையுலகிற்கும் மொழிக்கும் செய்யும் பெருங்கொடுமை என்றே சொல்ல வேண்டும்.

படங்கள்

படங்கள் அழகாகவும், பொருள் விளக்கமுடையனவாகவும் இருத்தல் வேண்டும். வண்ணப் படங்கள் இளங் குழந்தைகளைப் பெரிதும் கவரும். நூலை எழுதுகின்ற ஆசிரியரின் கருத்தும் ஓவியரின் கருத்தும் ஒன்றாக இருப்பது மிகவும் இன்றியமையாதது. படங்கள் நூலின்பொருளை விளக்குவதாக இருத்தல் வேண்டும். குழப்புவதாக இருத்தல் ஆகாது. நூலில வலது கை வெட்டப்பட்டதாக இருந்தால், படத்தில் இடது கை வெட்டப்பட்டிருத்தல் கூடாது! மேலும் படங்கள் அறிவியல் உண்மையோடு மாறுபடாமல் இருத்தல் வேண்டும். வானவில்லை வரையும் ஓவியருக்கு வில்லின் புற விளிம்பில் என்ன நிறம் இடம்பெற வேண்டும், அக விளிம்பில் என்ன நிறம் இடம் பெற வேண்டும் என்பது தெரிந்திருத்தல் இன்றியமையாதது. பிறைத் திங்களின் இருட்டிற்கிடையில் ஒரு விண்மீனை வைப்பதற்கு முன் அப்படி ஒரு காட்சி என்றாவது இயற்கையில் தெரிகின்றதா என்பதை ஓவியர்கள் எண்ணிப்பார்த்தல் வேண்டும்! ஒளியையும் பொருளையும் தீட்டும் ஓவியர் பொருளின் நிழல் எந்தத் திசையில் விழவேண்டும் என்பதைத் தெரிந்திருத்தல் வேண்டும். பூமியின் வடகோடியில் பனிப் பாறையில் நீர் நாய் வேட்டையாடும் மனிதனுக்கு இடுப்பில் முழத் துண்டு மட்டும் சுற்றிவிடுவது போதாது. காலுறையும், தலையுறையும் தந்து உடலையும் தோலாடையால் மூட வேண்டும். அன்னம், வாத்து போன்ற நீந்தும் பறவைகட்கும் காக்கை குருவி போன்ற கிளைகளில் அமரும் பறவைகட்கும் கால்விரல் அமைப்பில் உள்ள வேறுபாடு பற்றி ஓவியர் தெரிந்திருத்தல் வேண்டும். மூலக் கதையிலிருந்த ரொட்டித்துண்டு மொழி பெயர்ப்பில் வடையாக மாறினால் படத்திலும் 'சதுரம்' 'வட்டமாக' மாறவேண்டும்!

புத்தகத்தில் படத்தை இடம் பெறச் செய்யும் போது அதனைப் பக்கங்களின் மேலோ, கீழோ, ஓரத்திலோ இருக்கும்படி பொருத்துவது நல்லது. பாடப் பகுதியை பிளந்தோ, சொற்றொடரை வெட்டியோ, சொல்லைத் துண்டாடியோ படங்களுக்கு இடம் ஒதுக்குவது அடாது. அவ்வாறு செய்வது படிப்போரின் கருத்தோட்டத்தைத் தடைசெய்துவிடும்!

பக்க அளவு

சிறுவர்கட்காக எழுதும் புத்தகங்களில் வரையறையின்றிப் பக்கங்களின் எண்ணிக்கையைப் பெருக்குவதில் பொருளில்லை. ஒரே சமயத்தில் படித்து முடிக்க உதவும் வகையில் குறைந்த அளவு பக்கமுள்ள புத்தகங்

களையே குழந்தைகள் விரும்பி வரவேற்கின்றனர். குழந்தைகளின் வயது நிலைக்கேற்பப் பக்கங்களை ஓரளவு மிகுத்துக் கொண்டு செல்லலாம். பக்கங்களைப் பார்த்துவிட்டு குழந்தைகள் மலைக்கும்படி புத்தகங்கள் அமைதல் கூடாது.

புத்தகத்தின் உருவ அளவு

படங்களுடன் வெளிவரும் நூல்கள் பெரிய உருவ அளவில் (10" × 7½") இருப்பதைக் குழந்தைகள் பெரிதும் விரும்புகின்றனர். அமெரிக்கா, உருசியா போன்ற நாடுகளில் இந்த அளவிலேயே குழந்தைக்கான நூல்களைத் தயாரிக்கின்றனர். உருவம் பெரிதாக இருப்பதால் பெரிய எழுத்துக்களில் போதுமான இடைவெளி விட்டுக் கவர்ச்சியாக அச்சிட முடிகிறது.

அச்சு எழுத்து

குழந்தைகட்காக வெளிவரும் புத்தகங்கள் கூடுமான வரையில் பெரிய எழுத்துக்களிலேயே அச்சிடப்பட வேண்டும் கண் பார்வைக்குக் கேடு பயக்கும் வகையில் மிகச் சிறிய எழுத்துக்களில் அச்சிட்ட புத்தகங்களைச் சிறுவர்கள் கைகளில் சேராமல் நாம் பார்த்துக் கொள்ள வேண்டும். மிகவும் பெரிய எழுத்துக்களில் சுவரொட்டிபோல் அச்சிடுதலும் நல்லதன்று. மிகப் பெரிய எழுத்துக்கள் கண்கள் வரிகளின் மீது இயல்பான வேகத்தில் நகர்வதைத் தடுத்து நிறுத்தும். சுவரொட்டிகளை மிக அருகில் நின்று கொண்டு படிப்பது எவ்வளவு கடினம் என்பதை இங்கு நினைத்துக் கொள்வது நல்லது.

மேலட்டை

கையிலெடுத்துப் படிக்கப் படிக்கப் புத்தகங்கள் கட்டுக் குலைந்துவிடுவது கண் கூடு. குழந்தைகளோ படித்த புத்தகத்தையே மீண்டும் மீண்டும் படிக்கும் வழக்கமுடையவர்கள். எனவே, புத்தகத்தின்மேலட்டை கவர்ச்சியும், வழவழப்பும் கொண்டிருந்தால் மட்டும் போதாது. அழுத்தமாகவும் உறுதியாகவும் இருத்தல் வேண்டும். அன்றியும், கறுப்பு மை தெளிவாகப் புலப்படும் வகையில் நல்ல தாளிலேயே குழந்தைப் புத்தகங்கள் வெளிவர வேண்டும். செய்தித்தாள் அச்சிடும் காகிதத்தில் வெளிவரும் புத்தகங்கட்குக் குழந்தை இலக்கிய உலகில் இடமே இல்லை! ★

தமிழ் நாட்டில் மருத்துவம்

	1957ல்	1963ல்
அரசாங்க டாக்டர்கள்	1,073	1,874
நர்சுகள்	1,306	2,073
படுக்கைகள்	19,894	24,756

* * *

"மிகமிக ஆபத்தான—அவசியமான நோயாளிகளுக்கு மட்டுந்தான் பிற நாடுகளில் படுக்கையிடம் தரப்படுகிறது ஆனால் இந்நாட்டிலோ, பழிச்சொல்லுக்கு அஞ்சிக் கொண்டு டாக்டர்கள் ஏராளமான நோயாளிகளை மருத்துவ மனைக்குள் சேர்த்து விடுகின்றனர். கட்டிலுக்கு அடியிலும், பக்கத்திலும் கூட நோயாளிகள் படுத்திருக்கின்றனர். ஆபத்தான நிலையிலுள்ளவர்களுக்கு மட்டுந்தான் ஆஸ்பத்திரியில் இடமிருக்க வேண்டும் ஹோட்டல்களைவிட மலிவாயிருக்கின்ற காரணத்துக்காக மக்கள் ஆஸ்பத்திரிகளைப் பயன்படுத்தக் கூடாது."

—டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார்.

பகீரதன்

தமிழன்: அன்றும் இன்றும்

[மொழித் துறையிலும், சமுதாயத் துறையிலும், வீரத்திலும், ஆக்கப் பணிகளிலும் வெளிநாட்டினரைப் போலத் தமிழன் ஏன் விரைவாக முன்னேறவில்லை என்பதைப்பற்றி ஆழ்ந்து சிந்தித்து, தன் முதுகில் தானே தட்டிக் கொள்ளும் தற்பெருமை—முற்பெருமை தான் காரணம் என்கிறார், கட்டுரையாளர், 'கங்கை' பகீரதன். வடநாட்டுப் பகுதியில் வதியும் லட்சக் கணக்கான தமிழ் மக்கள் இக்குறைகளை ஒப்புக் கொள்வர். "என் பாட்டனுக்குப் பத்தாயிரம் ஏக்கர் நிலம் இருந்தது" என்று இன்றுள்ள பிச்சைக்காரப் பேரன் சொல்லிக் கொள்வது போல், பண்டைப் பெருமை பேசி மகிழ்வது பயன்தராது. உலகில் வேறு எந்நாட்டினரும் மொழிப் பெருமை, இனப் பெருமை, கலாசாரப் பெருமை பேசி, பழைய ஏட்டைப் புரட்டி, வாழவில்லை. தமிழனைப் பீடித்துள்ள பெரு நோய்களில் இதுவுமொன்று.]

தங்களைத் தாங்களே உயர்த்திக் கொள்வதில் தமிழர்கள் அன்றும் இன்றும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறார்கள். இதில் தமிழர்களுக்கு இணை தமிழர்கள்தான்! உண்மையில் தமிழ் இனம் மற்ற இனங்களை விடச்சிறப்புடைய இனமா? இலக்கியத்திலும், வீரத்திலும், செயல் திறமையிலும் அவர்கள் உயர்ந்தவர்கள் தானா?

யார் தங்களுடைய குறைகளை நன்கு உணர்கிறார்களோ அவர்கள்தான் குறைகளை நீக்கிக்கொண்டு நிறைவுடன் உயர முடியும். யார் தங்கள் குறைகளை வெறும் சொல் அலங்காரத்தால் மூடி மறைக்கிறார்களோ அவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்பவர்கள் தாம். இதை மறந்துவிடக் கூடாது.

இதுவரை தமிழர்கள் தங்கள் ஒரு பக்கத்து வாழ்க்கையைத்தான் பார்த்துப் பேசி மகிழ்ந்து வருகிறார்கள். ஒரு நாணயத்துக்கு இரண்டு புறமும் சுத்தமாக இருந்தால்தான் நாணயம் செல்லும். அது போல தமிழ் மக்கள் வாழ்க்கையின் இரண்டு பக்கமும் நிறையுள்ளதாக இருக்கின்றதா? இல்லை.

இந்திய நாட்டைப் பொறுத்தவரையில் தமிழ் மக்களின் முன்நாள் நிலை என்ன? இந்த நாள் நிலை என்ன?

தமிழ் மக்கள் அந்த நாளில் நன்றாக வாழ்ந்தார்களா? இல்லை. அது எப்படித் தெரி

கிறது? தமிழ் நாட்டின் பழைய இலக்கியங்கள் சொல்லுகின்றன. அவை தமிழ் மக்களின் ஒரு பக்கத்து வாழ்க்கையை மட்டும் எடுத்துக் காட்டுகின்றன. அதனால் மறு பக்கத்து வாழ்க்கையை ஊகிக்க முடிகிறது

திருக்குறள் தமிழ் நூல். சிறந்த அறிவு நூல். தமிழ் மக்களும் தமிழும் இருக்கும் வரை பெருமைப்படும் நூல். இப்படிப் பட்ட அறிவுரை தமிழ் மக்களுக்குச் சொல்ல வேண்டுமானால் தமிழ் மக்கள் வாழ்க்கை அன்று எவ்வளவு ஒழுக்கக் குறைவுடன் இருந்திருக்க வேண்டும் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். நினைத்துப் பார்த்தால் மகிழ்ச்சியடையும்படியாக அவர்கள் வாழ்க்கை இல்லை என்பதை மறந்துவிட முடியாது.

திருக்குறள்தான் அப்படி என்றால், மற்ற நூல்கள் எல்லாம் தமிழ் மக்களின் குறுகிய புத்தியைத்தான் படம்பிடித்துக் காட்டுகிறது. சில நூல்கள் தமிழன் காதல் செய்தான்; அதற்காகவே வாழ்ந்தான் என்பதைக் காட்டுகின்றன. இன்னும் சில நூல்கள் தமிழன் தமக்குள்ளாகவே ஓயாமல் அடித்துக் கொண்டும் கொன்று கொண்டும் வாழ்ந்திருக்கிறான் என்று காட்டுகின்றன. தமிழ் நாட்டில் வேற்று நாட்டு மன்னர்கள் படையெடுத்து வந்தார்கள் என்பதைவிட தமிழ் மன்னர்களே தங்களுக்குள் (சேரனும், சோழனும், பாண்டியனும், வேறு குறுநில மன்னர்களுமாக) ஓயாமல் சண்டை போட்டுக் கொண்டே வாழ்ந்திருக்கிறார்கள். கடைசியில் தமிழ் நாட்டை வேற்று நாட்டு மன்னர்களிடம் விட்டுவிட்டுத் தூங்கிக் கொண்டிருந்தார்கள் என்பதையே காட்டுகிறது.

தமிழ் நாட்டை விட்டுச்சென்று தன் நாட்டு மக்கள் மேன்மைக்காக வேறு நாடுகளையும் பிடித்து ஆண்டான் தமிழ் மன்னன், என்ற வீர வரலாறே இல்லை. இதைச் சொல்லும் போது கங்கையையும் கடாரத்தையும் வென்றான் தமிழன்; இமயத்திலே கொடி நாட்டினான் தமிழன், என்று வெறும் சொல் அலங்காரங்களைச் சொல்லிக் கொண்டு நம்மை நாமே ஏமாற்றிக்கொள்ள வேண்டாம். மன்னர் புகழ்பாடிய பாவலரின் தமிழ்க் கவிதைகள் இதைக் கூறுகின்றன. இது போல கங்கைக்கரையிலும் இமயப் பகுதியிலும் தமிழ் மன்னன் வந்த செய்திக்கு அந்த நாட்டின் வரலாறு கூறவில்லை. தமிழன் தன் பெருமையைத்தானே பாடிக் கொண்ட கவிகள், இவை. இமயத்தின் பனிமுடியை இவ்வளவு விஞ்ஞானம் வளர்த்த நாளிலேயே எட்ட முடியவில்லை. அந்நாளில் அதன் உச்சியில் கொடி ஏற்றினான் தமிழன் என்றால் இது கற்பனை யல்லாமல் வேறு என்ன?

பண்டைய வீரம்!

ஆனாலும் தமிழன் தமிழ் நாட்டைவிட்டுச் சென்றிருக்கிறான். சிங்களம், புட்பகம், சாவகம் ஆகிய தீவுகளுக்கு! எதற்கு? கூலிவேலை செய்து பிழைப்பதற்கு! இன்றுகூட அவர்கள் நிலை என்ன? நாடற்ற அநாதைகள். உரிமையில்லாத அடிமைகள்! பழைய கதையேதான்!

இந்த உண்மை நிலையை மறுத்து எவ்வளவோ அழகாக வாதமிடலாம். இமய மலையை நேரில் பார்த்து வியந்தவன் தஞ்சை மாவட்டத்திலுள்ள சாமி மலையை மலை என்று ஒப்புக் கொள்ளமாட்டான். ஆனால் மலையே இல்லாத மாவட்டத்துக்கு அது மலைதான். பெரிய

இமயமலையைக் கூட அவர்கள் மலையாகத்தான் பார்த்தார்கள். தமிழனே சாதாரண குன்றைக் கூட கலையாக்கிப் பெருமைப்பட்டான் என்று வாதமிடுவதில் பொருளில்லை. இது போலத்தான் அன்றையத் தமிழனின் வீர வரலாறும் காவியமும்!

பழைய சரித்திர[1] காலத்தை விட்டுவிடலாம். இருநூறு ஆண்டுகளுக்குமுன் தமிழ் நாட்டின் நிலை என்ன? வெள்ளைக்காரன் யாரிடமிருந்து, தமிழ்நாட்டைக் கைப்பற்றினன்? தமிழ் மன்னர்களிடமிருந்தா? இல்லை. மராட்டியரிடமிருந்தும், ஆந்திரரிடமிருந்தும், முஸ்லீம்களிடமிருந்தும் தமிழ் நாட்டைப்பறித்தான். அப்படிப் பறிக்கும்போது எதிர்த்து முதல் முழக்கம் செய்தவன் தமிழனு? இல்லை. கட்டபொம்மன் என்ற ஆந்திரக் குறுநில மன்னன் தானே!

தமிழன் நாகரிகத்தைக் காண்பிக்க இந்நாட்டுக் கோயில்களையும் அதில் உள்ள சிற்பங்களையும் காட்டிப் பெருமைப்படுகிறார்கள் சிலர். இந்த நாட்டின் கோயில்களைவிட எத்தனையோ மடங்கு உயர்ந்த கோயில்களும், சிற்பங்களும் சித்திரங்களும் வடநாட்டிலும் ஏராளமாக இருந்திருக்கின்றன; இருக்கின்றன அவை இன்று முழு உருவத்துடன் இல்லை; இடிந்தும் சிதைந்தும் காணப்படுகின்றன. காரணம் என்ன?

அங்குள்ள மக்கள் வீரத்துடன் வாழ்ந்தார்கள். தங்களை எதிர்த்தவர்களை எதிர்த்து நின்றார்கள். அதனல் இந்த இடிபாடுகள். நாம் எதிரி வருகிறான் என்றவுடனேயே கையைத்தூக்கி அடிமைக் கொடி பிடித்தோம்; நம் கோயில்கள் காப்பாற்றப்பட்டன. யாருடைய தயவால்? அந்நிய மன்னர்கள் தயவால்.

சென்ற ஆயிரம் ஆண்டில் தமிழ்நாட்டில் தமிழன் தனக்குள் சண்டை போட்டுக் கொண்டு மடிந்ததைத் தவிர எதிரிகளை எதிர்த்துப் புறமுதுகிட்டு ஓடச் செய்தான் என்ற வரலாறு இல்லை. மல்யுத்த வீரர்கள் தங்கள் சகோதரர்களையே புறமுதுகிட்டுக் காண்பிப்பது போல தமிழன் தனக்குள்ளாகவே வீரம் பேசி வாழ்ந்தான்; இதைத் தவிர வேறு நிகழ்ச்சிகள் இல்லை.

மற்ற நாட்டு மனிதர்களால் எப்படி பயங்கரத் தொல்லைகள், அதாவது கொடிய போர் என்பது தமிழ்நாட்டில் இல்லையோ, அது போலவே இயற்கை உற்பாதங்களும் இங்கு கிடையா. பெரும் புயல் என்று கிடையாது. வெள்ளம் என்று கிடையாது; நிலநடுக்கம் இல்லை. கடுங்குளிர் இல்லை. கொடிய வெய்யில் இல்லை. உலகிலேயே மிகவும் சம நிலை உடைய பகுதி தமிழ் நாடு. இன்றையத் தமிழ்நாட்டின் தோற்றம் கடந்த ஆயிரம் ஆண்டின் நிலையான வளர்ச்சி என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

வடநாடு அப்படியா? இல்லையே! அடிக்கடி, ஏன், சென்ற ஆண்டு வரை கூட எதிரிகளின் படையெடுப்பு. படுகொலை. நில நடுக்கம். பெரும் வெள்ளம். கடும் குளிர். கொடிய வெய்யில். அப்பப்பா! அவைகளின் கொடூரங்களை வர்ணிக்க முடியாது. இத்துடன் போராடி எழுந்து நிற்கிறன் வடநாட்டான்.

ஆகவே சென்ற ஆயிரம் ஆண்டுகளிலும் சரி, வெள்ளையன் ஆண்ட இருநூறு ஆண்டுகளிலும் சரி, முன்னேறிக் கொண்டே இருந்த பகுதி தமிழ்ப் பகுதி. மற்றப் பகுதிகள் அப்படியல்ல. மற்றப் பகுதி மக்கள்

வீரம் நிறைந்த மக்கள். அடிமைக் குணம் இல்லாதவர்கள். இதனுல் அவர்கள் வளர்ச்சியில் புரட்சி இருந்தது. தமிழ் மக்கள் நல்ல அடிமைகளாயிருந்தனர். அதனுல் அவர்கள் பகுதியில் சமமான வளர்ச்சி தொடர்ந்து இருந்தது.

இதைத் தமிழன் ஒத்துக்கொள்வானு? மாட்டான். "தமிழன் பண்பாட்டால் உயர்ந்தான்: தமிழ் நிலத்தை மகான்கள் செய்த தவம் காத்து வருகிறது; தமிழ் நாட்டில் உள்ள கோயில்கள் நாட்டைக் காப்பாற்றுகின்றன; என்பானே தவிர, உண்மையை ஏற்றுக்கொள்ள முன்வர மாட்டான்.

வெந்த புண் : முதலுதவி

கொதித்த நீர், பால், எண்ணெய் முதலியவற்ருல் ஏற்படும் வெந்த புண்ணுக்கு முதல் உதவி (First aid) :— கொப்புளத்தின் மீதிலோ வெந்த இடத்திலோ, தெளிந்த சுண்ணும்பு நீர்கலந்த தேங்காயெண்ணெயைத் தடவி, புண்ணின் மீது தூசு படாதபடி மெல்லிய வெள்ளைத்துணியால் கட்டவும்; பஞ்சு இருந்தால் புண்ணின் மேல் வைத்து துணியால் சுற்றலாம். சோடா உப்பையும் புண்பட்ட இடத்தில் தூவலாம்.

நெருப்புச் சுடர் பட்டு மேல் தோல் வெந்து போயிருந்தால், தேங்காய் எண்ணெயில் தோய்த்த மெல்லிய துணியிஞல் சுற்றலாம். முட்டையின் வெண் கருவை அதன்மீது தடவுவது நலம்.

முதல் உதவிக்குப் பிறகு டாக்டரிடம் காட்ட வேண்டும்

நாடு சுதந்திரம் பெற்ற பிறகு தமிழன் நிலே, அதாவது இன்றைய நிலே என்ன?

சுதந்திரம் பெற்ற பிறகு நாடு முழுதும் நல்லவளர்ச்சிப்; பெற்றிருக்கிறது. ஆனுல் தமிழ்நாட்டின் வளர்ச்சி ஆயிரம் ஆண்டின் நிலேயான வளர்ச்சி; மற்றப் பகுதியின் வளர்ச்சி சென்ற பதினேந்து ஆண்டுகளின் வளர்ச்சிதான்.

வளராத காரணம்

ஏன் தமிழ்நாடு எல்லாத் துறைகளிலும் விரைவாக வளரவில்லே? தமிழ் மக்கள் பெரும்பாலும் உழைக்காமல் சாப்பிட விரும்புகிறவர்கள். தன்மான உணர்ச்சி இல்லாதவர்கள். ஒற்றுமை இல்லாதவர்கள். உணர்ச்சியில்லாதவர்கள். இது ஏதோ மிகைப்படுத்துவதாக யாரும் எண்ண வேண்டாம். நிதானமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

தமிழ் நிலத்தில் மற்ற மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் இருப்பதைவிட மற்ற மாநிலங்களில் தமிழ் மக்கள் அதிகமாக வாழ்கிருர்கள்; பம்பாய், கல்கத்தா, டில்லி, இன்னும் மற்ற வட இந்தியப் பகுதிகளில். அங்கெல்லாம், அவர்கள் எப்படி வாழ்கிருர்கள்? தொழில் அதிபர்களாகவா? வியாபாரிகளாகவா? இல்லே

ஏதோ விரல்விட்டு எண்ணக் கூடியவர்கள் இருக்கலாம். மற்ற லட்சக்கணக்கான மக்கள் கூலிகளாகவும், குமாஸ்தாக்களாகவும், அடிமைகளாகவும், பிச்சை எடுப்பவர்களாகவும் வாழ்கிருர்கள்.

ஏதோ, மாதாமாதம் சாப்பாட்டு அளவுக்குச் சம்பாதித்துச் சாப்பிடும் இத்தமிழர்கள் விரிந்த மனப்பான்மையுடன் அங்குள்ள மக்களோடு மக்களாகச் சேர்ந்து

ஒன்றி வாழ்கிறார்களா? இல்லை. அல்லது தமிழ்நாட்டிலிருந்து சென்ற தமிழ் மக்களுடன் தான் அங்கு ஒற்றுமையாக வாழ்கிறார்களா? அதுவும் இல்லை. அங்கும் சாதி வேற்றுமை! மாவட்ட வேறுபாடு! ஊதிய ஏற்றத் தாழ்வு வேறுபாடு! மிகவும் வெட்கக்கேடான வாழ்க்கைதான்!

வீட்டிலே கண்ணாடிப் பெட்டியிலே வளர்க்கப்பட்ட மீனைக் கடலில் விட்டால் அது இரண்டடிக்குள் தான் வளைய வளைய சுற்றிவரும். அப்படிச் செக்கு மாடுபோல குறிப்பிட்ட வட்டத்துக்குள்ளேயே அங்கும் செயல் திறமையில்லாமல் குறுகிய புத்தியுடன் தமிழ் மக்கள் வாழ்கிறார்கள். எப்படியாவது வயிற்றை வளர்த்தால் சரி என்ற அடிமை நிலைதான்.

வடநாட்டில் வடநாட்டான் பிச்சை எடுப்பதில்லை; தமிழன் தான் வடநாட்டான் போல வேஷம் போட்டுக் கொண்டு பிச்சை எடுக்கிறான். இவர்கள் தான் கல் தோன்றிமண் தோன்றாக் காலத்துக்கு முன் தோன்றிய மூத்த குடிகள்!

வடநாட்டில் வாழும் தமிழனைக் கேட்டால் என்ன சொல்லுகிறான்? தான் புத்திசாலி என்றும், வடநாட்டான் முட்டாள் என்றும் வாய்கூசாமல் சொல்லுகிறான். தமிழனுக்கு மாதம் நூறு ரூபாயும், இருநூறு ரூபாயும் கொடுத்துவிட்டு இவனுடைய உழைப்பால் கோடிக் கணக்கில் பணம் சேர்க்கிறானே அவனை முட்டாள் என்கிறான், அடிமை வேலை செய்யும் தமிழ் குமாஸ்தா! தமிழன் நன்றி உணர்ச்சிக்குப் பெயர் பெற்றவன் ஆயிற்றே! பின் என்ன சொல்லுவான்!!!

நான் வடநாட்டில் சுற்றுப் பயணம் செய்தபோது ஒரு பொறுப்புள்ள வட இந்தியர் என்னைப் பார்த்துக் கேட்டார்:—

“தமிழ்நாட்டில் உள்ளவர்கள் ஓயாமல் எங்களைக் கண்டு பொறாமைப் படுகிறார்களே! நான் ஒன்று கேட்கிறேன். வடநாட்டைச் சேர்ந்தவர்கள் யாராவது தமிழ்நாட்டில் தமிழ் முதலாளிகளிடம் அடிமைகளாக வேலை செய்கிறார்களா? அவர்கள் பட்டியல் ஒன்றைக் கொடுங்கள். நான் அவர்களை உடனே திருப்பி அழைத்துக் கொள்கிறேன். அது போல வடநாட்டில் இருக்கும் தமிழர்களை நீங்கள் திருப்பி அழைத்துக் கொள்ள வேண்டும். ஏதோ, பொறுப்பில்லாமல் பிதற்றிக் கொண்டிருக்கிறார்கள்; வடநாட்டான் தமிழ்நாட்டுக்கு வந்தால் சுதந்தரமாகத் தொழில் செய்து பிழைப்பான். நீங்கள் தொழில் செய்வதற்குப் பண உதவி செய்வான். ஆனால் உங்களிடம் கைகட்டி நின்று பிழைக்க மாட்டான்; பிச்சை எடுக்கமாட்டான்,” என்றார். சிந்தித்துப் பார்த்து தலைகுனியத்தான் வேண்டியிருந்தது.

இனி என்ன?

ஆகையால் சென்றது செல்லட்டும், எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திப்போம். தமிழர்கள் தாங்களும் தங்கள் நாடும் தமிழ் மொழியும் உண்மையாகவே முன்னேற வேண்டும் என்று விரும்பினால் அவர்கள் செய்ய வேண்டியது என்ன?

(1) இன்றையத் தமிழன் கண்களைத் திறந்து உலகத்தைப் பார்க்கவேண்டும். முந்நூறு கோடிக்கு அதிகமான உலக மக்கள் கூட்டத்தில் நாம் ஒரு சிறு கூட்டம். அறிவில், ஆற்றலில் நம்மைவிடச் சிறந்தவர்கள் உலகில் பல கோடிப் பேர் இருக்கிறார்

கள். இயற்கை வளம் குறைவாக உள்ள அதிக மக்களைக் கொண்ட நிலம் தமிழ் நிலம். இந்த உண்மையை மறக்கக் கூடாது.

(2) தன்னைச் சுற்றிவரும் உலகைச் சுற்றிவிட்டுத் திரும்பியிருக்கிறாள் ஒரு பெண். அந்த அளவு மனிதன் உயர்ந்திருக்கிறான், விஞ்ஞான அறிவால். இந்த நாளில் பெண்களை வெறும் பிள்ளை பெறும் இயந்திரமாக இன்னமும் நினைப்பது தவறு. பெண்கள் ஆண்களுடன் நெருங்கிப் பழகுவது தவறு என்னும் குறுகிய புத்தியை விட வேண்டும். வேட்டி கட்டிக் கொள்ளும் கற்கால நாகரிகத்தைச் சிறப்பிக்கக் கூடாது. உடை, உணவு, மொழி முதலியவைகளின் பிடிப்பிலிருந்து சுதந்திரம் பெறப் பாடுபட வேண்டும். தமிழன் இந்த மூன்றுக்கும் அடிமையாக இருப்பது தவறு.

(3) தமிழன் தனக்குள்ளாகவே தமிழன் உயர்ந்தவன், தமிழ் மொழி உயர்ந்த மொழி என்று சொல்லிக் கொள்வதை நிறுத்த வேண்டும். உலகில் உள்ள பல மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்று. தமிழ் காலத்தால் மூத்த மொழியாக இருக்கலாம். அது ஒன்றே அதற்குச் சிறப்பு ஆகாது. முப்பது ஆண்டுகளாக சைக்கிள் விடும் ஒருவருக்குப் பெடலில் கால் வைத்து ஏறத் தெரியாது. பதினைந்து வயது சிறுவன் சைக்கிளில் எத்தனையோ வித்தைகளையெல்லாம் செய்கிறான். இதில் சிறுவன்தான் பாராட்டப்பட வேண்டியவன் என்பதை மறந்துவிடக் கூடாது.

(4) தமிழன் கூடிய வரையில் அடிமைப் புத்தியை உதறித் தள்ள முயலவேண்டும். தன்னம்பிக்கையுடன் உழைத்து உயர முயல வேண்டும். ஆங்கிலேயர் தம் ஆட்சியில் குழப்பம் இல்லாமல் இருப்பதற்காக அடிமைப் புத்தி படைத்த ஆங்கிலம் கற்ற தமிழர்களை நன்கு உபயோகப் படுத்தினான். இன்று காலம் மாறிவிட்டது. உழைப்பும் அறிவும் இருந்தால் தான் உலகில் ஒளியுடன் வாழலாம். மொழி வெறி கூடாது. உலகத்து மொழிகளையெல்லாம் தமிழன் கற்க வேண்டும். அதில் உள்ள அறிவுச் செல்வங்களைத் தமிழில் கொண்டுவர வேண்டும். அதே சமயத்தில் இந்திய நாட்டு மொழிகளையெல்லாம் கற்றுக் கொண்டு நாடு முழுதும் சென்று அங்கெல்லாம் தமிழ்ப் பள்ளிக்கூடம் அமைத்து தமிழை அவர்கள் படிக்கும்படி தமிழ் மக்கள் உயர்வான வாழ்க்கை வாழ்ந்து காண்பிக்க வேண்டும்.

(5) இன்றைய உலக நிலையில், தமிழ் மக்கள் தமிழ் நிலத்துக்குள்ளாகவே வாழ முடியாது; முயலுவதும் தவறு. அதற்கான இடவசதியும் இயற்கை வளமும் தமிழ் நாட்டில் இல்லை. ஆகையால் தமிழ்நாட்டை தமிழ்நாட்டுக்குள்ளாகவே பெருமைப் படுத்துவதை நிறுத்திக் கொண்டு நமக்கு இருக்கும் ஒரே செல்வமான மொழி பயிலும் அறிவுச் செல்வத்தைக் கொண்டு மற்ற மொழிகளை உடனடியாகக் கற்றுக் கொண்டு அங்குள்ள மக்களை அன்பால் ஆட்கொண்டு தமிழ் மக்களையும் தமிழ் நாட்டையும் உயர்த்தும் பணியில் உறுதியுடன் ஈடுபடவேண்டும்.

(6) முக்கியமாக, பிற நாடுகள் சென்று அங்கு நிலையாக வாழ வேண்டிய தமிழர்களாவது தங்கள் சாதி, மதம், பிரதேசம், மொழி, சுற்றம் முதலிய கிணற்று நீரைவிட்டுத் தாண்டி வெளியேறி ஆங்காங்குள்ள மக்களுடன்

கலந்து திருமணம் செய்து கொள்ள வேண்டும். ஆக்ராவில் பணிபுரியும் தமிழன் அதிராம்பட்டினத்திலுள்ள அத்தை மகளைத் தான் மனைவியாகக் கொள்ள வேண்டுமென்ற கடுகு உள்ளம் கொள்ளக் கூடாது.

இந்தக் காரியங்களைத் தமிழன் இனியாவது கடைப்பிடித்தால் தான் உயர முடியும்.

வளர்க, தமிழ் மக்கள்!

புது நட்புப்பெற வழி

"நாம் பிறரிடம் ஆசையுடனிருந்தால் அவர்களும் நம்மிடம் ஆசையாயிருப்பார்கள். நாம் நட்புணர்ச்சியுடனிருந்தால், பிறரும் நம்மிடம் நட்புக் காட்டுவார்கள். மற்றவர்களிடம் நாம் மரியாதை காட்டினுல் அவர்களும் நம்மிடம் மரியாதை காட்டுவார்கள்.

ஒவ்வொருவரும் பாராட்டையும் நன்றியையும் விரும்புகிருர். ஆதலால் பிறரைப் பாராட்டுவதன் மூலம் நீடித்த நட்பைப் பெறலாம். பிறரின் அரிய சாதனைகள் அல்லது வெற்றிகள் பற்றி அவர்களைப் பாராட்டுவது புதிய நட்புக்கு நல்வழி.

தேவைப்பட்ட சமயத்தில் வலியச்சென்று பிறருக்கு உதவி செய்வது மற்ருெருவழி. பிறருக்குத் தொல்லேயோ, செலவோ ஏற்படுவதை முன்கூட்டியே தடுத்து நிறுத்துவது மிகச் சிறந்த உதவியாகும். நாம் மகிழ்ச்சியுடனும் முகமலர்ச்சியுடனும் இருந்தாலொழிய பிறர் நம்மை நட்புக்கொள்ள விரும்பமாட்டார்கள். வேதனைக்காரனையும் அழு மூஞ்சியையும் நண்பனுக்கிக்கொள்ள யாருக்குத்தான் விருப்பமிருக்கும்?

மற்றவர் உன்னிடம் நெருங்க வேண்டுமென்று காத்திருக்காதே! நீயே முதலில் சென்று நட்புக்கொள். வெட்கப்படாமல் சென்று புன்சிரிப்புடன் கை குலுக்கிப் பேசு! அவர்களின் பிறந்தநாள் முதலியவற்றை நினைவில் வைத்து சிறு பரிசுகளாவது கொடு! நட்பைப்பெற வேண்டுமானுல் நீயும் ஒரு நண்பனுயிருக்க வேண்டும்.

சங்கங்கள், கிளப்புக்கள், விளையாட்டு அரங்குகள், பொழுது போக்கு இடங்கள் — முதலியவற்றில் உறுப்பினராகி, மற்றவர்களோடு கலந்து கொண்டிருக்க வேண்டும். நண்பர்களை அடிக்கடி சந்தித்து அளவளாவ வேண்டும்.

இவையெல்லாம் புதுப்புது நண்பர்களைப் பெறும் வழிகள். நட்பு இல்லாத வாழ்க்கை வாழ்க்கையல்ல".

("Psychologist" —Sep. 1963)

கவிதைப் பகுதி

கபிலர் அகவல்

[தமிழ் இலக்கியத்தில் இருட்டடிக்கப்பட்டுள்ள கபிலர் அகவல் இதோ! ஒவ்வொரு தமிழரும் மனப்பாடம் செய்து குழந்தைகளையும் மனப்பாடம் செய்ய்வைத்து இதிலுள்ள கருத்துக்கொப்ப நடப்பது நல்லது. இதுபற்றிய அரிய கட்டுரை சென்ற இதழில் வந்துள்ளது.]

1. உலக இயற்கை

*நான்முகன் படைத்த்நா ஞவகை உலகில்
ஆன்ற சிறப்பின் அரும்பொருள் கூறுங்கால்!
ஆண்முதிதோ? பெண்முதிதோ? அன்றிஅலி முதிதோ?
நாள்முதிதோ? கோள்முதிதோ? நல்வினையோ? தீவினையோ?
செல்வஞ் சிறப்போ? அறிவு சிறப்போ?
தொல்லைமா †ஞாலந் தோற்றமோ? படைப்போ?
எல்லாப் பிறப்பும் இயற்கையோ? செயற்கையோ?
காலத்தாற் சாவரோ? பொய்ச்சாவு சாவரோ?
நஞ்சுறு தீவினை ‡துஞ்சுமோ? துஞ்சாதோ?
துஞ்சும்போ தந்தப் பஞ்சேந் திரியம்
என்செயா நிற்குமோ? எவ்விடத் தேகுமோ?

2. மக்கள் இயற்கை

**ஆற்ற லுடையீ ரருந்தவம் புரிந்தால்,
வேற்றுடம் பாகுமோ? தமதுடம் பாகுமோ?

---

* பிரமன். † பூமி. ‡ இறத்தல்.
** வலிமை.

உண்டியை உண்குவ(து) உடலோ? உயிரோ?
உலகத் தீரே! உலகத் தீரே!
நாக் †கடிப்பாக வாய்ப்பறை யறைந்து,
சாற்றக் கேண்மின்! சாற்றக் கேண்மின்!
மனிதர்க்கு வயது நூறல்ல தில்லை,
ஐம்ப திரவி லகலுந் துயிலினால்;
ஒட்டிய இளமையா லோரைந்து நீங்கும்;
‡ஆக்கை இளமையி லெம்மூன்று நீங்கும்;
எழுபது போகநீக் கிருப்பன முப்பதே;

(அவற்றுள்)

3. நிலையாமை

இன்புறு நாளும் சிலவே யதாஅன்று,
துன்புறு நாளுஞ் சிலவே யாதலால்,
$பெருக்கா(று) ஒத்தது செல்வம்; பெருக்காற்(று)
இடிகரை யொத்த(து) இளமை; யிடிகரை
வாழ்மர மொத்தது வாழ்நா ளாதலால்,

4. அறவுரை

ஒன்றே செய்யவும் வேண்டும், ஒன்றும்
நன்றே செய்யவும் வேண்டும், நன்றும்
இன்றே செய்யவும் வேண்டும்; இன்றும்
இன்னே செய்யவும் வேண்டும், இன்னும்
நாளை நாளை யென்பீ ராகில்,
நமனுடை முறைநா ளாவதும் அறியீர்!
நம்முடை முறைநா ளாவதும் அறியீர்!

---

† குறுந்தடி. ‡ உடம்பு. $ வெள்ளம். * இப்பொழுதே.

5. கூற்றுவன் கொடுமை

எப்போ தாயினும் %கூற்றுவன் வருவான்;
அப்போ தந்தக் கூற்றுவன் தன்னைப்
போற்றவும் போகான்; பொருளொடும் போகான்;
சாற்றவும் போகான்; ×தமரொடும் போகான்;
நல்லா ரென்னுன்; £நல்குர வறியான்;
தீயா ரென்னுன்; செல்வரென் றுன்னுன்;
தரியா னெருகணம் *தறுக ணுளன்!
உயிர்கொடு போவான், உடல்கொடு போகான்;

6. மக்கள் அறியாமை

ஏதுக் கழுவீர்? ஏழை மாந்தர்காள்!
உயிரினை யிழந்தோ? உடலினை யிழந்தோ?
உயிரிழந் தழுதுமென்(று) ஓதுவீ ராகில்,
உடலினை யன்றலா(து) இன்றுங் காண்கிலீர்!
உயிரினை யிழந்த உடலது தன்னைக்
களவு கொண்ட கள்வனைப் போலக்
காலு †மார்த்துக் கையு மார்த்துக்
‡கூறை களைந்து கோவணங் கொளுவி,
$ஈமத் தீயை எரியெழ மூட்டிப்
பொடிபடச் சுட்டுப் §புனலிடை மூழ்கிப்
போய்த்தம ரோடும் ‖புந்திநைந் தழுவது,
¶சலமெனப் படுமோ? ०சதுரெனப் படுமோ?

% எமன். × உறவினர். £ வறுமை.

* அஞ்சாத எமன். † கட்டி. ‡ ஆடை. $ சுடுகாடு. § நீர் மனம். ¶ பொய். ० திறமை.

7. பார்ப்பனர் சூழ்ச்சி

பார்ப்பன மாந்தர்காள்! பகர்வது கேண்மின்!
இறந்தவ ராயுமை *இவ்விடை யிருத்திப்
பாவனை மந்திரம் பலபட உரைத்தே,
உமக்கவர் புத்திர ருட்டின போது,
அடுபசி யாற்குலைந் தாங்கவர் மீண்டு
கையேந்தி நிற்பது கண்டதார் புகலீர்!
அருந்திய உண்டியா லார்பசி கழிந்தது?
ஒட்டியர், மிலேச்சர், ஊணர், சிங்களர்,
இட்டிடைச் சோனகர், யவனர், சீனத்தர்,
பற்பலர் நாட்டிலும் பார்ப்பா ரிலையால்;
முற்படைப் பதனில்வே(று) ஆகிய முறைமைபோல்,

8. சாதி வரலாறு

நால்வகைச் சாதியிந் நாட்டில்நீர் நாட்டினீர்!
மேல்வகை கீழ்வகை விளங்குவது †ஒழுக்கால்.
‡பெற்றமும் எருமையும் பிறப்பினில் வேறே;
அவ்விரு சாதியி லாண்பெண் மாறிக்
கலந்து கருப்பெறல் கண்ட துண்டோ?
ஒருவகைச் சாதியாம் மக்கட் பிறப்பில்ஈ
ரிருவகை யாகநீ ரியம்பிய குலத்து
ஆண்பெண் மாறி, அணைதலு மணைந்தபின்,
**கருப்பொறை உயிர்ப்பதுங் காண்கின் றிலிரோ?
எந்நிலத் தெந்தவித் திடப்படு கின்றதோ,
அந்நிலத் தந்தவித்(து) $அங்குரித் திடுமலால்,
மாறிவே றாகும் வழக்கமொன் றிலையே;

---

* இவ்வுலகினிடம். † ஒழுக்கத்தினுல். ‡ பசு.

** பிள்ளை பெறுதல். $ முளைத்தல்.

9. கலப்பு மணம்

‡பூசுரர்ப் புணர்ந்து, புலைச்சிய ரீன்ற
புத்திர ராயினோர் பூசுர ர்ல்லரோ?
பெற்றமும் எருமையும்
பேதமாய்த் தோன்றல்போல்,
மாந்தரிற் பேதமாம் வடிவெவர் கண்டுளார்?
வாழ்நா ளுறுப்புமெய் வண்ணமோ டறிவினில்
வேற்றுமை யாவதும் வெளிப்பட லின்றே;
தென்றிசைப் புலையன் வடதிசைக் கேகிற்
பழுதற வோதிப் பார்ப்பா னவான்;
வடதிசைப் பார்ப்பான் தென்றிசைக் கேகின்,
நடையது கோணிப் புலைய னவான்,

(அது நிற்க,)

சேற்றிற் பிறந்த செங்கழு நீர்போல்,

பிரமற்குக்

*கூத்தி வயிற்றிற் பிறந்த வசிட்டரும்;

வசிட்டர்க்குச்

சண்டாளி வயிற்றிற் பிறந்த சத்தியரும்,

சத்தியர்க்குப்

புலைச்சிதோள் சேர்ந்து பிறந்த பராசரரும்,

பராசரருக்கு மீன்

வாணிச்சி வயிற்றிற் பிறந்த வியாசரும்

(இந் நால்வரும்)

வேதங்க ளோதி, மேன்மைப் பட்டு,
மாதவ ராகி, வயங்கின ரன்றோ?

---

‡ பார்ப்பனர். * தாசிப்பெண், திலோத்தமை.

10. கபிலர் வரலாறு

அருந்தவ மாமுனி யாம்பக வற்குக்
கருவூர்ப் பெரும்பதிக் கட்பெரும் புலைச்சி

ஆதி வயிற்றினி லன்றவ தரித்த
*கான்முளை யாகிய கபிலனும் யானே;
என்னுடன் பிறந்தவ ரெத்தனை பேரெனில்,
ஆண்பால் மூவர்; பெண்பால் நால்வர்;
யாம்வளர் திறஞ்சிறி தியம்புவல் கேண்மின்!

ஊற்றுக் காடெனும் ஊர்தனிற் றங்கியே,
வண்ணா ரகத்தில் உப்பை வளர்ந்தனள்;
காவிரிப்பூம் பட்டினத்திற் கள்விலைஞர் சேரியில்,
†சான்றா ரகந்தனில், உறுவை வளர்ந்தனள்;
‡நரப்புக் கருவியோர் நண்ணிடு சேரியில்,

பாண ரகத்தில் ஔவை வளர்ந்தனள்;
குறவர் $கோமான் கொய்தினைப் புனஞ்சூழ்
வண்மலைச் சாரலில், வள்ளி வளர்ந்தனள்;
தொண்டைமண் டலத்தில் வண்டமிழ் மயிலைப்
பறைய ரிடத்தில், வள்ளுவர் வளர்ந்தனர்;

அரும்பார் சோலைச் **சுரும்பார் வஞ்சி
அதிக னில்லிடை அதிகமான் வளர்ந்தனன்;
பாரூர் நீர்நாட் டாரூர் தன்னில்,
அந்தணர் வளர்க்க †யானும் வளர்ந்தேன்.

(ஆதலால்,)

---

* மகன். † நாடார். ‡ யாழ்வாசிப்போர். $ தலைவன்.

** வண்டுகள் நிறைந்த கரூர். † கபிலர்.

11. இயற்கையின் பொதுமை

மாரிதான் சிலரை வரைந்து பெய்யுமோ?
காற்றுஞ் சிலரை நீக்கி வீசுமோ?
மாநிலஞ் சுமக்க மாட்டே னென்னுமோ?
கதிரோன் சிலரைக் காயே னென்னுமோ?
வாழ்நான்கு சாதிக்(கு) உணவு நாட்டிலும்,
கீழ்நான்கு சாதிக்(கு) உணவுகாட் டிலுமோ?

‡திருவும் வறுமையுஞ் செய்தவப் பேறும்
சாவதும் வேறில்லை $தரணி யோர்க்கே.

12. எல்லாம் ஒன்றே

குலமு மொன்றே; குடியு மொன்றே;
இறப்பு மொன்றே; பிறப்பு மொன்றே;
வழிபடு தெய்வமும் ஒன்றே யாதலால்;

13. மக்கட் கடமை

முன்னோ ருரைத்த மொழிதவ றுமல்,
எந்நா ளாயினும் இரப்பவர்க் கிட்டுப்
புலையுங் கொலையுங் களவுந் தவிர்ந்து,
நிலைபெற அறத்தில் நிற்பதை யறிந்து,

ஆணும் பெண்ணு மல்லதை யுணர்ந்து,
பேணி யுரைப்பது பிழையெனப் படாது,
சிறப்புஞ் சீலமு மல்லது
பிறப்புநலந் தருமோ? பேதை யீரே!

---

‡ செல்வம். $ பூமி.

இலக்கியப் பகுதி :

ஆங்கில மொழியில் தமிழ்ச் சொற்கள்

[கோ. இராமச்சந்திரன், எம்.ஏ.,]

[ஆங்கில மொழியிலுள்ள தமிழ்ச் சொற்களைப்பற்றிய இக்கட்டுரையிலிருந்து அறிய வேண்டியது என்ன? ஒரு மொழியில் இல்லாத பிறமொழிச் சொற்களை அப்படியே கடன் வாங்கி ஏற்றுக்கொள்வது தவறல்ல; அப்படிச் செய்வதுதான் இயற்கையான மொழி வளர்ச்சியுமாகும். 'சைக்கிள்' என்பதை 'ஈர்உருளி' ஆக்க வேண்டியதில்லை!]

தமிழ் மொழியின் பழமையையும் தமிழர்களுடைய நாகரிகச் சிறப்பினையும் அறிந்து கொள்ளப் பெரிதும் துணை செய்வது பண்டைத் தமிழர் வாணிகமேயாகும் என்பது மிகையாகாது. ஆங்கிலேயர்கள் வாணிகத்தின் மூலம் பொருளைத் திரட்டவே தமிழ் நாட்டிற்கு வந்தனர். முன்பு அவர்களால் ஏற்படுத்தப்பட்ட கிழக்கிந்தியக் கம்பெனியின் செயல் முறைகள், வளர்ச்சி ஆகிய யாவும் மேற்கூறிய உண்மையை உறுதிப்படுத்துகின்றன. இன்றைக்கும் E.C.M. என்னும் சந்தை (ஐரோப்பியப் பொது வாணிகக் களம்)யின் மூலம் பொருள் வளத்தைப் பெருக்க ஆங்கில அரசு பிறநாடுகளுடன் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளுவதை நாம் காண்கிறோம். அறிவியல் (Science) வளத்தாலும், வாணிக வளத்தாலும், தொழில் துறை வளத்தாலும் விரைவாக வளர்ச்சியுறும்-முன்னேற்றமடையும்-நாடுகளே இன்று உலக அரங்கில் சிறப்புடைய நாடுகளெனப் பாராட்டப்படுகின்றன.

தமிழ் நாட்டோடு வாணிகத் தொடர்பு கொண்ட மேலைநாட்டு வணிகர்கள், தங்கள் மொழிகளில் தமிழ்நாட்டுப் பொருள்களைக் குறிப்பதற்குரிய பெயர்கள் இல்லாத காரணத்தால் தமிழ் மொழிச் சொற்களையே ஏற்றுக் கொள்ள வேண்டியவர்களாயினர். பல சொற்கள் தமிழ் மொழியினின்று நேராகவும், சில சொற்கள் மலையாளம், தெலுங்கு, இப்இரு மொழிகள் மூலமாகவும் இரவல் சொற்களாக ஆங்கிலத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டன. இதனால் ஆங்கிலம் வளமுடைய-செழிப்பிற்குரிய-மொழியாக மாறிவிட்டது. ("In the matter of enriching the English language, trade has played a more important part than conquest or colonisation. The merchant adventurer holds an important place in the history of the English language. Usually new words first come into the spoken language and then they percolate into the written language also." page 143, "Tamil Culture" Vol I. No. 2. "Some Dravidian loan-words in English" By C. R. Myleru.) இந்த உண்மையை விளக்குவதற்கெனவே தமிழ் மொழியினின்று ஆங்கிலத்தால் பெறப்பட்ட சொற்களின் பட்டியலும் பிற விளக்கங்களும் கீழே தரப்பட்டுள்ளன:—

தமிழ்ச் சொற்கள்	ஆங்கிலச் சொற்கள்	பொருள் விளக்கம்	மேற்கோள்
1. அடைக்காய் (பாக்கு)	Areca	Genus of Palms	From Tamil adaikay adar close clustering —Kay nut (page-56)
2. வண்டி	Bandy	Indian cart or buggy	from Telugu bandi (p-84)
3. வெற்றிலை (மெல்லிலை)	Betel	Leaf of piper betel	from Malayalam vettila (p-105)
4. காசு	Cash	A small coin	Ultimately from Tamil Kasu (p-171)
5. கட்டுமரம்	Catamaran	Raft or float of logs tied side by side	from Tamil Katta-maram (p-174)
6. சுருட்டு	Cheroot	Cigar with both ends open	from Tamil Shuruttu roll (p-190)
7. கயிறு	Coir	Coco-nut fibre, used for ropes, matting	from Malayalam Kayar (p-217)
8. கொப்பரை	Copra	Dried kernels of Coco-nut	Prob - from Malayalam Koppara (p-251)
9. குருந்தம்	Corundum	Crystallized mineral of same species as sapphire & ruby	from Tamil Kurundam (p-257)
10. கறி	Curry	Dish of meat & curry cooked with bruice spices & turmeric	from Tamil Kari Sauce (p-279)

தமிழ்ச் சொற்கள்	ஆங்கிலச் சொற்கள்	பொருள் விளக்கம்	மேற்கோள்
11. இஞ்சி	Ginger	Hot spicy root used in cooking & medicine & preserved in syrup or candy as sweet-meat.	from Latin Zingiber from Greek Ziggiberis (p-484)
12. மாங்காய்	Mango	Indian tree bearing fleshy fruit yellowish-red in colour	from Tamil Mankay (p-696)
13. மிளகுத் தண்ணீர் (இரசம்)	Mulligatawny	Pepper-water	from Tamil Milagutannir (p-745)
14. அரிசி	Rice	Pearl-white seeds, used as staple food in many Eastern countries.	from Old French ris from Italian riso from Greek Oruza probably from Oriental source (p-1011)
15. சந்தனம்	Sandal	Kinds of scented wood —Sandal tree	from Latin. Sandalum (p-1051)
16. தேக்கு	Teak	(Indian tree with) heavy durable timber that does not warp or shrink	from Malayalam Tekka (p-1257)

(குறிப்பு: * உடுக்குறிப் பகுதி—மேற்கோள் பகுதி —"THE CONCISE OXFORD DICTIONARY" அகராதியினின்றும் எடுத்துக் கொள்ளப்பட்டது. அகராதியில் சில சொற்கள் மலையாளத்தினின்றும், இலத்தீன் மொழியினின்றும், கிரேக்க மொழியினின்றும், தெலுங்கினின்றும் கொள்ளப்பட்டவை எனப் பிழைபடக் காட்டப்பட்டுள்ளன. அவ்வம்மொழிகளில் காணப் பெறும் தமிழ்ச் சொற்களைத் தொகுத்துக் காணும்பொழுது இந்த உண்மை புலனாகும்.

கிறித்து சகாப்தத்திற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரும், ஆரியர் வருகைக்கு முன்னரும், தமிழர்கள் நாகரிகத்திற் சிறந்தவராய் விளங்கினர்; சிறந்த ஆட்சி முறையைக் கண்டனர்; இந்திய நாகரிக வளர்ச்சிக்கு வித்திட்டனர் என்ற உண்மைகளை யெல்லாம் வரலாற்றைத் தெளிவாக அறிந்து கொண்டுள்ள சான்றோர்கள் இன்று ஒப்புக் கொள்ளுகின்றனர். இந்திய வரலாறு ஒழுங்காக எழுதப் படுமானால் இத்தகைய உண்மைகள் பல வெளிப்படுவதற்கு வாய்ப்பு உண்டு. பண்டைத் தமிழர்களுடைய வாணிகச் சிறப்பைக் கீழ்க்காணும் மேற்கோள்கள் உணர்த்த வல்லனவாய் அமைகின்றன. அவை வருமாறு:—

(1) "பிளினி, டாலமியின் நூல்கள், பெரிபிளஸ் ஆகிய ஆதாரங்களிலிருந்து தென்னிந்தியாவிற்கும் ஐரோப்பாவிற்குமிடையே நிலவிய வாணிகத் தொடர்பு தெற்றெனக் காணக் கிடக்கின்றது. இவர்கள் காலத்திலேயே பெருமளவில் வாணிகம் நடந்திருந்ததென்றால், கி.மு. 6 அல்லது 7 நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே இது ஆரம்பித்திருக்க வேண்டுமென்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை. மேலும் இவ்வாதாரங்கள் அக்காலத்தில் தென்னிந்திய வரலாறு, ஆட்சி நிலைமை முதலியனவகளை யெல்லாம் எடுத்துக் காட்டவும் உதவுகின்றன."

(ப-28 "நாமிருக்கும் நாடு அல்லது தென்னிந்திய வரலாறு"—டாக்டர் மு. ஆரோக்கியசாமி, எம்.ஏ., பி.எச்.டி.,)

(From J.R.A.S. by Kennedy)

(2) "Sea-going merchants, availing themselves of the monsoons, were in the habit, at the beginning of the seventh (and perhaps at the end of the eighth) century B.C., of trading from ports on the South-West Coast of India (Sovira at first, afterwards Supparaka and Bharukaccha) to Babylon, then a great mercantile emporium.

These merchants were mostly Dravidians, not Aryans, such Indian names of the goods imported as were adopted in the west (Solomon's ivory, apes, and peacocks, for instance, and the word "rice") were adaptations, not of Sanskrit or Pali, but of Tamil words."

(p-50 "Buddhist India,"
—By T. W. Rhys-Davids)

(3) There was brisk trade between South India and Rome in pearls......Lolla, wife of the emperor Caius Claudius, appeared often publicly covered with pearls worth £ 300,000 sterling.

(page-82 "The Ancien, Dravidians"
—By T. R. Sesha Iyengar, M.A.)

பி. என். பாலசுப்பிரம்மணியன், B. Sc. Dip. Re. Ed., D.H.M.P.

உங்கள் உயரம்

[உயரமாக இருப்பவர் எவரும் அதை ஒரு குறையாகக் கருதிக் குள்ளமாக ஆவதற்கு ஆசைப்படுவதில்லை. ஆனால் குள்ளமாயிருப்பவர் யாவருமே அதைப் பெருங் குறையாகக் கருதுகின்றனர். ஆதலால் இயற்கைக் குள்ளர்கள் சிறு அளவுக்காவது உயரமாக வளர முடியும் என்பது இக் கட்டுரையாளரின் கருத்து. அதற்கேற்ற ஆதாரங்களைத் தருகிறார் இதில்.]

எல்லாவற்றிலும் உயர்வடைய விரும்புவது மனித இயற்கை. இவ்வியல்பினை ஒட்டி மனிதன் நெடிதுயர்ந்து கம்பீரமாகக் காட்சியளிக்க விரும்புவதில் வியப்பில்லை. 'கள்ளனை நம்பினாலும் நம்பலாம் குள்ளனை நம்பலாகாது' என்பது பழமொழி. இதனால் உணர்த்தப்படும் 'குள்ளன் கொடூர மனப்பான்மையுடையவன்' என்னும் உண்மையை ஆய்வது நமது நாட்டமன்று. உயரமாக வளர வேண்டியதன் அவசியம், அதற்காக நமது உடலில் உள்ள உறுப்பு, உயரத்தை அதிகரிக்கச் செய்யும் வழி வகைகள் இன்ன பிறவற்றை இயம்புவதே இக்கட்டுரையின் நோக்கம்.

உயரமாயிருப்பதால் ஏற்படும் பயன்கள் எண்ணிலடங்கா. உயரமாயிருப்பதால் உண்டான உயர்வையும் குள்ளமாயிருப்பதால் உண்டான குறையையும் நாம் நமது நடைமுறை வாழ்க்கையில் நன்கறிவோம். ஒருவனது ஆளுமையை (Personality) அறிய அவனது உயரம் ஒரு சாதனமாக அமைந்துள்ளதாக உளவியல் நிபுணர் உரைப்பர்.

ஐம்பத்தொன்பது அங்குல உயரமுடைய ஆண்களையும் ஐம்பத்து நான்கு அங்குல உயரமுடைய பெண்களையும் உடல் கூற்றியற் அறிஞர்கள் குள்ளர்களாகவே எண்ணுகின்றனர்.

ஆண்களின் வளர்ச்சி இருபத்திரண்டு வயது வரை ஏற்படுவதாகவும், பெண்களின் வள்ர்ச்சி பதினெட்டு வயதுக்குப் பின்னர் குன்றுவதாகவும் கூறுவர்.

ஒருவர் உயரமானவராகவோ அன்றிக்குள்ளமானவராகவோ அமைய அவரது உடலில் பிட்யூட்டரி சுரப்பியில் சுரக்கும் 'பிட்யூட்டரின்' என்னும் ஹார்மோன் பெரிதும் காரணம். இந்த ஹார்மோன் அதிக அளவில் சுரந்தால் எலும்புகள் அளவுக்கு மீறிய வளர்ச்சியுறும். காலும் கையும் கீழ்த்தாடையும் அளவிற்கு மிஞ்சி அகன்றிருக்கும். இதனால் அன்னாரது உயரம் மிதமிஞ்சியிருக்கும். தேவையான அளவு ஹார்மோன் (பிட்யூட்ட

யின்) சுரக்காவிடில் உடலின் உயரம் குறைந்துவிடும். பிட்யூட்டரி சுரப்பியைப் பற்றி ஈண்டுச் சிறிது காண்போம்.

பணமும் மதமும்

பணம் இல்லையேல் பிரசாரம் இல்லை; பிரசாரம் இல்லையேல் மதம் இல்லை; மதம் இல்லையேல் கடவுளும் இல்லை!

ஆயிரம் பேர்களைக் கொண்ட வாட்டிகன் அரசு (இத்தாலிய) தான் உலக கத்தோலிக கிருஸ்துவர்களின் தலைமையிடம். உலக மக்கள் 300 கோடிப் பேரில் 54 கோடிப்பேர் (ஆறு பேருக்கு ஒருவர்) கத்தோலிக்கர்!

அய்ரோப்பாவில்	24,80,00,000
வட — தென் அமெரிக்கா	22,80,00,000
ஆசியா	3,50,00,000
ஆஃப்ரிக்கா	2,60 00,000
பிற நாடுகளில்	30,00,000

வாடிகன் ஆட்சியின் தங்கக் கொடுக்கல்—வாங்கல் மதிப்பு 12 ஆயிரம் மிலியன் (ஒரு மில்லியன் 10 லட்சம்). இங்கு 85 பாங்குகள் உள.

ஆகவே, உலகெங்கும் 92,000 குருமார்களும், 1,51,000 மதப்பிரசாரகர்களும், 9,78,000 கன்னிப் பெண்களும் பரவியிருப்பதில் வியப்பில்லை.

கத்தோலிக்கர் பல நாடுகளில் ஆட்சியைக் கைப்பற்றியும், வேறுபல நாடுகளில் வலிமையுள்ள அரசியல் கட்சிகளாகவும் இயங்குகின்றனர்.

தினசரிகள், வார—மாத ஏடுகள் முதலிய ஏராளமான பிரசார இதழ்கள் 50 மொழிகளில் வெளியிடப்படுகின்றன.

பிட்யூட்டரி சுரப்பி
(Pituitary Glands)

இச்சுரப்பி பட்டாணி அளவு பருமனுடையது. இஃது தலையில் மூளையின் அடியில் உள்ளது. இச்சுரப்பி இரண்டு பிரிவுகளைக் கொண்டதாக இலங்குகின்றது. இச்சுரப்பியில் சுரக்கும் 'பிட்யூட்டரின்' என்னும் ஹார்மோன் (Harmone) நமதுடலின் வளர்ச்சிக்குக் காரணமாயுள்ளது.

பிட்யூட்டரினின் அளவுக்கேற்ற வண்ணம் மனிதர்களது உயரம் அமைந்திருக்கும்.

உடற்பயிற்சி, உணவு நியதி இன்ன பிறவற்றால் உயரம் அதிகரிக்கவியலுமா என்பதனையும் இங்கு ஆய்வோம். சர்வாங்காசனம், கருடாசனம், திரிகோணாசனம், புஜங்காசனம் போன்ற ஆசனங்களைத் தொடர்ந்து பழகுவதால் உடலுயரம் அதிகரிக்கின்றது. இவ் உண்மை ஆசனம் பற்றிய புத்தகங்களில் காணப்படுகிறது.

குறிப்பாக சர்வாங்காசனம் செய்வதால் தைராய்டு சுரப்பி (Thyraid Gland) வலுவடைகிறது. தைராய்டு சுரப்பி சரிவரப் பணிபுரிந்தால்தான் மற்ற சுரப்பிகள் செவ்வனே செயலாற்றவியலும். தைராய்டு சுரப்பியைச் சார்ந்த பிட்யூட்டரி உரம் பெற்று தேவையான அளவு ஹார்மோனைச் சுரக்க இவ் ஆசனத்தைப் பயில்வது நன்று. விருப்பமுடையோர் சிறந்த ஆசனப் புத்தகங்களைப் படித்தறிந்து பழகுவார்களாக.

உயரமாக வளர விரும்புவோர் படுக்கும் போது குறுகிப்படுக்கலாகாது. கால்களை நன்றாக நீட்டிப் படுக்கவேண்டும். சிறு வயதிலிருந்தே குழந்தைகளையும் இவ்வாறு பழக்கப்படுத்துவது நன்று. திறந்த வெளி அல்லது காற்

ரேட்டமான இடங்களில் துயில்வது நல்ல பலனைத் தரும்.

எளியதாயினும் சத்துள்ள மரக்கறி உணவு உண்பதே முறை. இறைச்சி உணவுஉண்பதால்ஏற்படும் இடர்ப்பாடுகள் ஏராளம். இதைத் தொடர்ந்து உண்பதால் மூளையிலுள்ள இரத்தக்குழாய்கள் வெடிக்க ஏதுவாகும். இதனால் பிட்யூட்டரி சுரப்பி பழுதடைந்து உடல் வளர்ச்சிக்கு ஊறு விளையக் கூடும். எனவே புலால் புசிப்பதை விடுதல் நன்று. சத்துள்ள உணவினை உரிய வேளைகளில் அளவோடு உண்பதே சிறந்தது.

கற்பனையையும் விஞ்சும் வகையில் முன்னேற்றமடைந்துள்ள மருத்துவத் துறையில் உடலின் உயரத்தை அதிகரிக்கச் செய்யும் வழிவகைகள் கண்டுபிடிக்கவில்லையா என்ற கேள்வி எழுவது இயல்பு.

நமது உடலிலுள்ள 'பிட்யூட்டரி' நாளத்தில் சுரக்கும் ஹார்மோனை உடலில் ஊசி மூலம் செலுத்தி உடலின் உயரத்தினை ஒரு அங்குலத்திற்கும் மேலாக அதிகரிக்கச் செய்யவியலுமெனச் சமீபத்தில் மேற்கு செர்மனியைச் சேர்ந்த மருத்துவ நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளனர். மிகவும் குள்ளமாக இருப்பவர்களது உயரம் இச்சிகிச்சையால் அதிகரிப்பதோடன்றி அவர்களது எடை 11 பவுண்டுகள் கூடுவதாகவும் நடைமுறையில் கண்டுள்ளனர். உயரத்தை மேலும் அதிகரிக்கச் செய்யும் வழிவகைகளையும் வகுத்துள்ளனர்.

சமுதாய சர்வாதிகாரி தேவை!

''தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரும் இந்து மதத்திலிருக்க முடியாது, இருக்கக்கூடாது, என்கிற முடிவுக்கு வந்த டாக்டர் அம்பேத்கார், இம்மக்கள் யாவரும் வீரமுள்ள ஒரு கூட்டத்தில் சேர்ந்து விடவேண்டுமென்று கருதினர். 'சீக்கியர் மதம்' அவருக்கு மிகவும் பிடித்திருந்தது. முஸ்லீம் மதத்தைப் பற்றி அவர் குறிப்பிடும்போது, ''எவருடைய மத உணர்ச்சியிலோ பழக்கங்களிலோ தலையிடுவது மிகமிக ஆபத்தானது என்று ஒரு சமுதாயம் இருக்குமானல் அது முஸ்லீம் சமுதாயமேயாகும்,'' என்று குறிப்பிட்டார்.

ஆகவே, ''இந்தியாவிலுள்ள மத — சமுதாய சிக்கல்களைத் தீர்ப்பதற்காக முசோலினி, கெமால் பாட்சா போன்ற சர்வாதிகாரிகள் இருந்தால்தான் முடியும். இந்தியாவுக்கு ஜனநாயகம் ஏற்றதேயல்ல. காந்தியார் சமுதாயப்பிரச்னைகளுக்கு ஒரு சர்வாதிகாரியாக வருவார் என்ற என் நம்பிக்கை உடைந்து நொறுங்கிப் போய் விட்டது. வருங்கால இளைஞர் கூட்டத்தைப் பற்றி எனக்கு நம்பிக்கையே இல்லை. அவர்கள் சுகவாசிகள்; இன்பம் தேடிகள்; ரானடே, கோக்லே, திலகர் — போன்ற லட்சியவாதிகளாக இருக்க மாட்டார்கள். ஆதலால் இந்தியாவின் வருங்காலத்தைப் பற்றி எனக்கு அச்சமாக இருக்கிறது. ஆனல், இந்து மதத்தில் எனக்கு அறவே நம்பிக்கையில்லை; ஏனெனில் அயோக்கியத்தனம் என்பது எனக்குப் பிடிக்கவே பிடிக்காது.''

—''டாக்டர் அம்பேத்கார்''
—தனஞ்சேகீர் (பக்கம் 250–251)

மறுப்புக்கு ஓர் மறுப்பு

குறை இசை (சிலப்பதிகாரம்)

[மு. குழந்தைவேலன், பீ. ஏ.]

[வரலாற்றுக் கதைகளிலேயே குறையும் குற்றமும் காணும்போது கற்பனைக் கதைகளில் இலக்கிய ஆய்வும், கதை நிகழ்ச்சி ஆய்வும் காணக்கூடாதா? குறையே இல்லாத பெரியார் எந்தத் துறையிலும், எந்த நாட்டிலும் இல்லை. சிலப்பதிகாரத்தில் "குறை இசை"க் குறை மட்டுமல்ல; உலக இயற்கை, மனித இயற்கை, பகுத்தறிவு, நடைமுறை வாழ்க்கை-முதலியவற்றிற்கெல்லாம் முரண்பாடான பல குறைகள் இருக்கின்றன. இவற்றை அறிவுக்கண்கொண்டு ஆராய வேண்டும். எனவேதான், எந்தக் கருத்துக்கும் மறுப்பான கருத்தை வெளியிட வேண்டியிருக்கிறது. மறுப்புக்கு மறுப்பான இக்கட்டுரையை ஊன்றிப் படிக்க வேண்டும். இதுபற்றிய ஆய்வு இத்துடன் முடியும்.]

"குறை இசை தந்த நிறை மாண்பு" என்ற எனது இலக்கியக் கட்டுரைக்கு மதிப்புக்குரிய புலவர் திரு. தே. ப. சின்னசாமி அவர்கள் குத்தூசி ஊசி:2 குத்து 3-ல் மறுப்பு எழுதியுள்ளார்கள்; "நிறை இசை தந்த நிறை மாண்பே" எனும் கட்டுரையால்.

"குற்றமில்லா ஒன்றில் குறை கண்டு அக் குறைபாட்டிற்கு மெருகீடு செய்து குறையும் நன்மைக்கே என்று அமைதி கூறுவது சரியல்ல" என்ற குற்றச்சாட்டுடன் நான் ஆதாரமாகக் கொண்ட பகுதிகளுக்கு மறுப்புக் கொடுக்க ஆரம்பித்துள்ளார்கள்.

(1) "மாதவியின் இசைப் புயிற்சி குறைபட்டது என்று கூறுவதற்குரிய சான்று சிலப்பதிகாரத்தில் யாண்டுமில்லை, மாறாக அவளது இசை நிறைவையே அடிகள் பல்லாற்றான் சிறப்பித்துப் போந்தார் என்பது வெள்ளிடை மலை," என்று கூறிச் சிலம்பில் இருந்து பல வரிகள் மேற்கோள் காட்டி இருக்கிறார். "எனது கட்டுரையில் நான், "அடிகள் இந்நூலின் ஆரம்பத்திலேயே மாதவி தனது பன்னிரண்டாம் ஆண்டிலேயே ஆடற்கலையிலும், இசைக்கலையிலும் சிறந்து விளங்கிப் புவி முழுதும் உள்ளோர் எல்லாம் புகழ்ந்து பேசும்படி ஆடியும், பாடியும் காட்டி உலகம் போற்றும் சிறப்புப் பெற்றாள் எனக் கூறுகிறார்" எனக் கூறி மாதவியின் திறன் விளக்க நான்கு வரிகளையுடைய வெண்பாவை எடுத்தாண்டேன். திரு சின்னசாமி அவர்கள் அந்நான்கு வரிகளையும் சேர்த்து பதினெட்டு வரிகளால் மாதவியின் நிறைவுக்கு விளக்கம் தருகிறார்கள்.

(2) அடுத்து அவர்கள் "கோவலன் இசையில் குறையிருக்க வேண்டும் என்று கூறுகின்றவர்

இவ்விடத்தில் இன்ன முறையில் இந்த இசையில் குறை யென்று பகுத்துக் காட்டாமல் சென்றிருக்கின்ருர்,'' என்று குற்றம் சாட்டுகிருர்கள். இன்ன இடத்தில் குறை இருக்கிறது என்று சுட்டிக் காட்டாததால் கோவலன் இசையிலே குறையில்லை என்று சொல்வது விவாதமாகாது. மாதவி ஆடலிலும் பாடலிலும் திறமை பெற்றவள் என்று முடிவாகச் சொல்கிருர் அடிகள். வைத்துக்கொள்வோம். கோவலனையும் இசையில் தவறியவன் என்று அவர் வாயால் சொல்லவில்லை. ஒப்புக் கொள்வோம்.

கானல்வரி பாடிய கோவலன் கையிலிருந்து யாழை வாங்கி மாதவி

''மன்னும் ஓர் குறிப்புண்டு இவன் தன் நிலை மயங்கினன் என

கலவியால் மகிழ்ந்தாற்போல்
புலவியால் யாழ் வாங்கி
தானும்ஓர் குறிப்பினள்போல்
கானல் வரிப் பாடல் பாணி''

கண்டத்தால் பாடத் தொடங்கினள். பலவித வண்ணப்பாடல்கள் பாடிக் கடைசியில்,

''தீத்துழைஇ வந்த
இச்செல்லல் மருள்மாலை
தூக்காது துணிந்த இத்
துயர் எஞ்சுகிளவியால்
பூங்கமழ் கானலில்
பொய்ச்சூள் பொறுக்க என்று
மாக்கடல் தெய்வம் நின்மலர்
அடி வணங்குதும்''

என்று முடிக்கிருள் மாதவி.

இதைக் கேட்டுக் கோவலன்,

''கானல்வரி யான்பாடத்
தான்ஒன்றின்மேல் மனம்
வைத்து
மாயப்பொய் பலகூட்டும்
மாயத்தாள் பாடினள்''

திருமணப்பரிசு

கீரம்பூர் (திருச்சி) ஆசிரியர் திரு. நா. செல்வராசன் அவர்கள் தமது நண்பர் திருமணப் பரிசாக 'குத்தூசி' ஓராண்டுக் கட்டணம் அனுப்பியமைக்கு நன்றி. பலரும் இப்பரிசு முறையைப் பின்பற்றி மணமக்களுக்குச் சிறப்பான நன்கொடை தரலாம்.

முதல் இதழில், ''திருமணப் பரிசு'' என்று அழகாக அச்சிடப்பட்ட தாள் ஒட்டி அனுப்பப்படும். —நிர்வாகி

எனக் கோபம் கொண்டு ஏவலாளர் உடன் சூழ்தர கோவலன் வெளியேறுகிருன். இந்த வரிகளைத்தான் திறம்பட ஆராய வேண்டும். மாதவி,

''மன்னும்ஓர் குறிப்புண்டு
இவன்தன் நிலைமயங்கினன்''

என்கிருள். கோவலன்,

''கானல்வரி யான்பாட அவள் வேருெருவன் மேல் இச்சை வைத்துப் பாடினள்,'' என்கிருன். இருவரும் மோதுகிருர்கள். அடிகள் மாதவியைச் சிறந்த இசை நுட்பம் தெரிந்தவள் என் அறுதியிட்டுக் கூறுகிருர். கோவலனை அப்படிக் கோடிட்டுக் காட்டவில்லை. இங்கே கானல் வரியா அல்லது காமக் குறிப்பா என்ற ஐயம். அடிகளோடு ஒத்துப் போனல் மாதவி சொல்வதுதான் சரி. காமக் குறிப்பாகப்பட்டதால் தான் அவளும்பாடினள். ஆகவே முன் எனது கட்டுரையில் குறிப்பிட்டதுபோல் கோவலன் இசையில் குறை இருக்க வேண்டும்; அல்லது மாதவிக்குத் திறம்படப் பகுத்துணரும் ஆற்றல் முதிர்ச்சி பெருததாக இருக்க வேண்டும்.

இந்த இரண்டில் ஒன்று தவிர வேறு ஒன்றிருக்க நியதி இல்லை. இருக்கவே முடியாது. அடிகள் மாதவிமேல் கொண்ட கருத்து ஆணித்தரமானதாக இருந்தால் கோவலன் இசை நிச்சயம் குறை இசையேதான். கோவலன் இசையிலும் குறையில்லை என்று சொன்னால் இளங்கோவின் கதைப் படைப்பே தவறானது. ஆம்; அது நிச்சயம் தவறானது தான்.

(3) "கோவலன் ஒப்புயர்வற்ற ஒண்தமிழ் இசை வல்லவன், நுண்கலை நுகர்ச்சி யுடையவன்" என்று மறுபபில் கூறி அதற்கு ஆதாரமாக 'ஈண்டு இசையில் வல்ல மாதவி கோவலனிடம் பாணி யாதெனக் கேட்கின்றான். இது இவனது நிறை இசைப் பண்பை நமக்கு எடுத்துக் காட்டு கின்றது. இதற்கு அரும்பத உரையார், "இப்பொழுது இதனை வாசியென்று விதிக்கின்றேனல் லேன்; வாசிக்கும் தாளம் யாதென்று யான் அறியலுறுகின் றேன் என்பாள் போலக் கொடுத் தாள் என்க. யாழைத் திருத்தித் தான் முற்பட வாசியாதே அவன் தலைமை தோன்றக் கொடுத் தாள்" என்று கூறுகின்ற குறிப் புரை கோவலனின் நிறையிசை மாண்பை வலியுறுத்துவதாக உள்ளது" எனும் இக்கூற்றால் கோவலன் இசையில் மாதவியை விடத் திறமையுடையவன் எனக் காட்டுகிறார் மறுப்பு எழுதியவர். துணைக்கு உரை ஆசிரியரையும் வைத்துக் கொண்டார்.

உரை ஆசிரியர்கள்

உரை ஆசிரியர் யாழைத் திருத் தித்தான் வாசியாதே அவன் தலைமை தோன்றக் கொடுத் தாள் என்பதால் மாதவியைக் காட்டிலும் கோவலன் இசையில் சிறந்தவன் என்பது புலனாகிறது என்பது சரியான முடிவல்ல. அதோடு தமிழகப் பெண்களின் மனநிலை உணராத தன்மை என லாம். மாதவியைக் கோவலனை விடச் சிறப்பாகப் படைத்துள் ளார் இளங்கோ, கலை என்ற பெயரால்-அப்படியே வைத்துக் கொள்வோம்; கொண்டவனைத் துறந்து கண்டவள் பின் சென்ற புண்பில் குறைந்தவன் கோவ லன். கலை உள்ளம் என்றாலும் அது குறை உள்ளம். வண்ணத் திப்பூச்சி உள்ளம் கோவலன் உள்ளம். "மாசறு பொன்னே! வலம்புரி முத்தே..." என்று அழைத்தான் புகழ்கிறது கோவலன் நா. மாதவியோ. "அடிகள் முன் னர் யானடி வீழ்ந்தேன்:....." என்று மிக உயர்ந்த கருத்தைக் காதலுக்குச் சொல்லும் திறமை படைத்தவள். விரிப்பில் பெரு கும். மாதவி குணநலன்களில் கோவலனைவிடச் சிறந்தவள். மாதவி கோவலனைக் கணவனா கவே மதித்தாள். கோவலனுக் காக வாழ்ந்து, அவனுக்காகவே இன்பத்தைத் துறந்த கற்புள்ள பெண். கொண்டவனை உயர்ந்த வனாகப் போற்றி வழிபடும்முறை தமிழ்ப் பெண்களின் தனி நாக ரீகம், அதனால்தான் "கல்லானா லும் கணவன்" என்ற வாசகம் ஏற்பட்டது. மாதவி எவ்வளவு தான் திறமை பெற்றிருந்தாலும், கோவலனுக்கு மதிப்புத் தரக் கடமைப்பட்டதை உணர்ந் தவள். அவன் கணவன் அவ ளுக்கு. அதனால்தான் யாழை, மீட்டிச் சுருதி சரியாக உளதா என்று பார்த்துத் தன் காதல னிடம் கொடுத்து வாசிக்கச் சொன்னாள். அவள் தலைமை தோன்றக் கொடுத்தாள் என்ப தால் கோவலன் நிறை இசை யுடையவன் என்று குறிப்பிடு வது பொருத்தமற்ற விளக்கம்.

தவிர, சிறந்த உரை ஆசிரியர் களின் கருத்துக்களையே சின்னா

பின்னப்படுத்தும் அளவுக்கு மறுப்புக் கொடுக்கிருர்கள். குறளுக்குச் சிறந்த உரை பரிமேலழகர் உரை என்கிருர்கள். அதில் குறை யில்லையா? குறையை எடுத்துக் காட்டவில்லையா? நச்சிஞர்க்கினியர் சிறந்த உரை ஆசிரியர். அவரைக் குற்றம் சாட்டுகிருர்கள் மதிப்புக்குரிய பெருமழைப் புலவர் திரு. பொ. வே. சோமசுந்தரஞர் அவர்கள். குறிஞ்சிப் பாட்டு விளக்க உரையில், "சொற்கிடந்த முறையானே பொருள் காண்டல் இனிதாகவும் எளிதாகவும் இருக்க ஆசிரியர் நச்சிஞர்க்கினியர் சொற்களேயும், அடிகளேயும்வரையறையின்றித் தமக்கு வேண்டியவாறே பிரித்தும், இயைத்தும் தாம் கருதிய பொருளேயே கூறுவாராய் நூலாசிரியரின் கருத்தும் பயில்வார்க்குப் புலஞகாதபடி மறைத்தொழித்தனர். நூலாசிரியரின் கருத்தை நுண்ணிதின் விளக்குவதே உரை ஆசிரியரின் கடமையாவதன்றித் தம் கருத்தைப் புகுத்துதல் அன்று,'' 'எனக் கடுமையாகச் சொல்கிருர் பெருமழைப் புலவர் அவர்கள். இவர் நம்மோடு வாழ்பவர்என்றகாரணத்துக்காக, நச்சிஞர்க்கினியார் சிறந்த உரை ஆசிரியர் என்பதால் மேலே குறிப்பிட்ட உரை வெற்றுரை என்று சொல்ல முடியுமா? உரை ஆசிரியர்களும் விருப்பு, வெறுப்புடையவர்கள்தான். அதனுல் உரை ஆசிரியர் சொல்வதையெல்லாம் கண்மூடி ஏற்க வேண்டும் என்ற நியதியும் இல்லே. கட்டுப்பாடும் இல்லே; கூடாது.

கொண்டவனுக்கு மதிப்புத் தர சில வழக்கங்கள் செய்வது தமிழ்ப் பெண் இயல்பு. மாதவியும் அதைப் பின்பற்றிஞள். கற்புடைய மங்கையின் நல்ல வழக்கத்தைச் சுட்டிக்காட்டி, மாதவியே கோவலனுக்குத் தலேமைப் பதவி கொடுத்ததால் அவ்ன் தான் சிறந்த இசை நுட்பம் உடையோன் என நேர்முகமாகவோ மறைமுகமாகவோ கூறுவது தடி எடுத்தவன் தண்டல்காரன் என்பதையும் அரசாங்க அலுவலில் முதலில் இருப்பவர் உத்தியோக உயர்வு முதலாவது பெறுவதால் அவரே அறிவில் சிறந்தவர் என்று ஒப்புக் கொள்வதையும் போன்றதே ஆகும்.

குறையில்லாத கலேஞன் உண்டா?

(4) "எழில்கண்டு மயங்கும் நிலேயற்றக் கலேயுள்ளம் கொண்டவன் என்ருலும் அவனது இசைப் பயிற்சியில் குறை உண்டு என்று கூறுவதற்கில்லே. புறத்தோற்றத்தில் மயங்கி யாழ் வாசிப்பது மறந்தான் என்றும் கூறுவதற்கில்லே; அத்தகைய சூழ்நிலே ஆண்டு உருவாகவில்லே'' என்கிருர் மறுப்பு எழுதிய புலவர் அவர்கள். சிறந்த தமிழ் அறிவுபடைத்த அவர்கள்,

"வண்ணமும், சாந்தும்
மலரும் சுண்ணமும்
பண்ணியப் பகுதியும்
பகர்வோர் விளக்கமும்......
அரசிளங் குமரரும்
உரிமைச் சுற்றமும்......
பரத குமரரும்
பல்வேறு ஆயமும்
ஆடுகள மகளிரும்
பாடுகள மகளிரும்......
இடம்கெட ஈண்டிய
நால்வகை வருணத்து
அடங்காக் கம்பலே உடங்கு
இயைந்து ஒலிப்ப......
வெண்கால் அமளிமிசை...
வருந்துபு நின்ற
வசந்த மாலேகை
திருந்துகோல் நல்யாழ்
செவ்வமை வாங்கி"

ப்பாடிய நிகழ்ச்சியை மறந்தோ மறைத்தோ புறச் சூழ்நிலையை விட்டுவிட்டது வருத்தத்துக்குரியதே. புறத்தோற்றத்தில் மயங்கிய சிறந்த இசைக் கலைஞர்கள் நான் முன் குறிப்பிட்டதுபோல் சகாளு பாடும்போது கானடா போல் பாடுவது இன்றைக்கும் நிகழும் நிகழ்ச்சி. சிறந்த கலைஞரோடு நெருங்கிய தொடர்புடையவன் என்ற முறையில் நான் நன்கு அறிவேன். சிறந்த கலைஞர்களைக் கேட்டாலும் கூறுவார்கள். இந்த விதத்திலேதான் கோவலன் தவறி இருக்க வேண்டும். இசைக்கலை மிகவும் நுட்பமான கலை. புறத் தோற்றத்தில் சிறிது மயங்கினாலும் ஒரு இராகத்தைவிட்டு வேறொன்றுக்கு இழுத்துச் சென்றுவிடும். இசை நுட்பம் தெரிந்தவருக்கு எளிதில் விளங்கும்.

''கலையில் மயங்கும் கலையுள்ளம்கொண்ட நுண்கலைஞன் தன் கலையில் குறைபாடு உடையவனாக என்றும் இருக்கவே மாட்டான் என்பது வெளிப்படை" என மறுப்பு எழுதியவர் அறுதியிட்டுக் கூறுவது வரவேற்கப்பட வேண்டியதுதான். ஆனால் நடைமுறையில் காண முடியாது. மனிதன் தவறிழைக்கக் கூடியவன் என்பதுபோல் கலைஞனும் குறைபாடுடையவனே. குறைபாடுடையவனை எல்லாம் கலைஞன் இல்லை என்று முடிவு கட்டினால் உலகில் கலைஞனே இருக்க மாட்டான்; காண முடியாது.

சீவகசிந்தாமணியில் ஆசிரியர் காந்தருவதத்தையை மிகவும் சிறந்த இசை நுட்பம் உடையவளாகக் காட்டுகிருர். அவள் பாட்டில் விண்ணவரும், மண்ணவரும் மயங்கினர். விலங்குகளும், பறவைகளும் மயங்கின.

''சிலைத்தொழில் சிறுநுதல்
தெய்வப் பாவைபோல்
கலைத்தொழில்பட எழீஇப்
பாடினாள் கனிந்
திலைப் பொழில் குரங்கின
ஈன்றதூண் தளிர்
நிலத்திடைப் பறவைமெய்
மறந்து வீழ்ந்தவே''

என்று, தூண்கள் கூடத்தளிர் விட்டது அவள் பாட்டைக் கேட்டு என்று சொல்லி காந்தருவதத்தையின் இசை மகிமையைப் புகழ்கிருர். ஆனால் புறத்திலே சீவகனைக் கண்டபோது, அவன் பாடிய பாடலைக் கேட்ட பின்பு அந்நுண்கலை ஆற்றலுடையவள் நிலை,

''பண்ணொன்று பாடல்
அதுஒன்று பல்வளைக்கை
மண்ணொன்று மெல்விரலும்
வாள்நரம்பின் மேல்நடவா
விண்ணின்றியங்கி மிடறும்
நடுநடுங்கி
எண்ணின்றி மாதர் இசை
தோற்றிருந்தனளே''

என்ற காட்சியைக் காண்கிறோம். இங்கே புறத்தோற்றத்தில் மயங்கிய சிறந்த கலைச் செல்வியைக் காண்கிறோம். புலவர் திரு. சின்னசாமி அவர்கள் இதற்கு என்ன பெயர் சூட்டினாலும் சூட்டட்டும்; ஒன்று, அவள் இசையில் குறைவு என்று சொல்ல வேண்டும்; அல்லது பாத்திரப்

நன்கொடை

ஆத்தூர் (சேலம்) தோழர் சுந்தரம் — ஜெயமணியவர்களுக்கு 30-10-63 ல் ஆண் குழந்தை பிறந்த நினைவாக குத்தூசிக்கு ரூபாய் 5 நன்கொடையளித்துள்ளனர். நன்றி.

—ஆசிரியர்

படைப்புத் தவறு என்று ஆசிரியரைச் சுட்டிக் காட்ட வேண்டும். புறத்தோற்றத்தில் கலைஞர்கள் மயங்கித்தன் நிலைமறப்பது சாதாரணம். ரசிகர்களுக்குத் தெரியாமல் சமாளித்துக் கொள்கிறார்களே அதுதான் கலைஞர்கள் ஆற்றல். ''கலையில் மயங்கும் கலையுள்ளம் கொண்ட நுண் கலைஞன் தன் கலையில் குறைபாடு உடையவனாக என்றும் இருக்கவேமாட்டான்'' என்று கூறுவது ஆராய்ச்சிக்கு முன் நிற்கும் ஆற்றல் பெற்ற கருத்தா என்பதைச் சிந்திப்பவர் திறத்திற்கு விட்டுவிடுவோம்.

(5) தன் கருத்தை வலியுறுத்தக் கோவலனைப் பொருமைக்காரனாக உருவகப்படுத்துவது வருத்தத்துக்குரியதாகும். மாதவியின் மடல்கண்டு மாதவி குற்றமற்றவள், தவறியவள் தான் தான் என்று எண்ணும் மனம் கொண்ட கோவலன்; ''பொருமையும் அதன் காரணமாக எழுந்த மனக்கசப்புமே அவன் உள்ளத்தில் நிலவி இருந்தது'' அதனாலேயே அப்படிப் பாடினான் என்பது பொருந்தாத விளக்கம். ''நான் கானல்வரிதான் பாடினேன். வேறொருத்திமேல் குறிப்புணர்த்திப் பாடவில்லை'' என்று கோவலன் வாயாலே சொல்லியும்கூட மறுப்புக் கட்டுரை எழுதியவர் கோவலன் மனக்கசப்பால் வேறொருத்தி மேல் காமம் கொண்டதாக குறிப்புணர்த்திப் பாடினான் என்று வலியப் பொருள் கொள்வது கோவலனை இன்னும் இருளில் தள்ளுகிறது. முரணான பொருளாகவும் படுகிறது.

(6) அடுத்து அவர் கூறும் விளக்கம், முத்தமிழ் இயலை முழக்குகின்ற இளங்கோவடிகளின் காப்பியத்தில் இத்தகைய இசைக்குறைவை அமைப்பரோ! அதுவும் காப்பியத் தலைவனும் நுண்கலைவல்லுநன் கோவலனை அம்முறையில் படைப்பரோ?... நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் ஆடல்பாடல் இசையே தமிழே' ஆகியது. இசைப்பாகு பாட்டை எடுத்திசைக்கின்ற சுவைப்பெட்டகங்கள். இத்தகு சிறந்த மெல்லிசைப் பாடல்களைத் தம்யாழிசையோடு இணைத்துக் கருத்துக் கருவூலமாக கனிச்சுவை கனித்தொழுகும் பலவகை அணிநலம் தோன்றப் பாடுகின்ற இசைக்கலை மன்னனும் அரசியுமாகிய கோவலனும் மாதவியும் குறை இசை உடையவர்கள் என்று நினைக்க ஒல்லுமோ'' என்று கேட்டுவிட்டுக் கடைசியில், 'கட்டுரையாளர் கருத்துப்படி அடிகளாரின் பாத்திரப் படைப்புச் சிறப்பில்லை என்றாகும்; அந்த ஐயப்பாட்டிற்கு ஒரு சிறிதும் சிலப்பதிகாரத்தில் இடமில்லை என்க. கோவலன் மாதவி யாழிசை குறையிசை அன்று, நிறையிசையே'' என்று முடிக்கிறார்.

இளங்கோ ஆடல் ஆசான்; இசையோன், நன்னூல் புலவன், தண்ணுமை முதல்வன், குழலோன், யாழ் இசையோன்; அரங்கம் இவற்றிற்கு இலக்கண வரம்பு கட்டும் முறையை நாம் மறப்பதற்கில்லை. போற்றுகிறோம்; போற்றிக் கொண்டே இருக்கிறோம். அதற்காகக் குறை காணும்போது சுட்டிக் காட்டத் தவறக்கூடாது. அப்படியாயின் பெரிய புராணத்துக்கும், கம்ப இராமாயணத்துக்கும் முட்டுக் கொடுப்பதாக நினைக்கும் சிலருக்கும் நமக்கும் வேறுபாடில்லை. முக்காலத்துக்கும் பொருந்திய நூல் வகுத்த வள்ளுவனையே காலத்துக்கு ஒவ்வாத குறள் சில பாடி விட்டார் என்கிறோம். "அரண்" பற்றி அன்று பாடி

யது இன்று பொருத்தமாக இல்லையே என்கிறோம்.

"கல்வியில் பெரியவன் கம்பன்" "கவிச்சக்கரவர்த்தி" என்றெல்லாம் போற்றப்படும் கம்பனை வரி வரியாக ஆராய்ந்துள்ளார்கள் பல அறிஞர்கள். நேரு, "இராமாயணம் ஆரியர் திராவிடர் போர்; அதில் வரும் குரங்குகள், அரக்கர்கள் எல்லாம் திராவிடர்கள், திராவிடரை இழிவுபடுத்த இவ்வாறு சித்தரித்திருக்கிறார்கள்," என்று அவர் மகளுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடுகிறார். கம்பர் அநுமானைச் சிரஞ்சீவி என்று காட்டி மாசைத் தேடிவிட்டார் என்கிறோம். நேருவின் வார்த்தைக்கு மதிப்பளித்துக் கம்பனைத் தாழ்த்துகிறோம். கம்பர்,

"ஆசைபற்றி அறைய
லுற்றேன் மற்றிக்
காசில் கொற்றத்திராமன்
கதை அரோ"

எனப் பாடித்தான் இராம கதையைத் தொடங்குகிறார். நம்மோடு வாழ்ந்த பாரதி,

"கடலினைத் தாவும் குரங்கும்
வெம்கனலிற் பிறந்ததோர்
செவ்விதழ்ப் பெண்ணும்...
கற்பனை,"

என்று ஆணித்தரமாக இராமாயணம் புனை சுருட்டு என்று கூறுகின்ற பாரதியைப் போற்றுகிறோம். "கம்பனின் கயமையும் வால்மீகியின் வாய்மையும்" என்று பா. வே. மாணிக்க நாயகர் அவர்கள் எழுதியுள்ள ஆராய்ச்சி நூலுக்கு இன்றுவரை மறுப்பு எழுதியவரில்லையே! இது போல் பல. கம்பன் கவிநயச் சிறப்புக்காக அவனைப் போற்றிக் கொண்டே இருக்கவில்லை. அதைப்போல்தான் எல்லோருக்கும். இளங்கோவிடம் மட்டும் குறை காணக் கூடாதா?

"நான் கானல்வரிதான் பாடினேன்" என்கிறான் கோவலன்.

"இவன் தன் நிலை மயங்கினான் என்கிறாள்", மாதவி. மாதவியோ கோவலனோ தவறியவர்கள். மேலே காட்டிய காரணங்களால் மாதவியின் திறமையில் ஐயமில்லை. அதனால் குறையிசைக்கு உரியவன் கோவலன்தான். இரண்டுபேரும் இசை நிறை உடையவர்களே என்பதைச் சிந்தித்துப் பார்ப்போர் ஏற்றுக் கொள்வார்களா என்பது ஐயமே. இரண்டு பேரும் நிறை இசை உடையவர்கள் என்றால் இளங்கோ அடிகளை அன்றையச் சூழ்நிலையில் தன்நிலை மறந்து,

"பார்ப்போர் அறவோர்,
பசு பத்தினிப் பெண்டிர்
மூத்தோர் குழவி எனும்
இவரைக் கைவிட்டுத்
தீத்திறத்தோர் பக்கமே
சேர்க,"

என்று கண்ணகி மூலம் அறிவுக் கொவ்வாத, நட்வாத கருத்தை வெளியிட்டுத் தன் படைப்பில் கறை ஏற்படுத்தியதுபோல் இங்கும் கறை ஏற்படுத்திக் கொண்டார் என்றுதான் துணிவாகச் சொல்வேன். இளங்கோவின் கதை அமைப்பில் தவறு என்று குற்றம் சாட்ட விரும்பாததால், மாதவியின் இசையைப்பற்றித் திட்ட வட்டமாகக் கூறிய ஆசிரியர் கோவலனைப்பற்றித் திட்ட வட்டமாகக் கூறாததால் குறை இசைக்குக் காரணம் கோவலனாகத்தான் இருக்கும் என்று முடிவு கட்டினேன். சிறந்த சிந்தனையாளர் பதில் கூறட்டும். குறையுள்ள ஒன்றில்தான் குறை

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

டாக்டர் எம். ஜே. கே. தவராஜ், M. A., Ph. D

பொருளாதார வளர்ச்சி

[ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உரை கல் எது? ஜப்பான், இங்கிலாந்து, ருஷ்யா, அமெரிக்கா, ஐரோப்பா, சீன, இந்தியா ஆகிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சி இன்று எப்படியெப்படியிருக்கிறது? இவற்றைப்பற்றிய தெளிவுரைக் கட்டுரை இது. மிகச் சிக்கலான பொருளாதார சங்கதிகளை மிகச் சுளுவாகப் புரிந்து கொள்ளும்படி எழுதுகிருர், கட்டுரையாளர். இந்தியப் பொருளாதார வளர்ச்சியில் நாட்ட முள்ளவர்களுக்கு இக்கட்டுரை நல்ல பயன்தரும்.]

பொருளாதார வளர்ச்சி என்ற சொற்றொடர் பத்திரிகைகளிலும் அரசியல்-பொருளாதார நூல்களிலும் அன்ருடம் அடிபடுவதைக் காண்கிறோம். இருப்பினும் படிப்போரின் மனதில் அதன் பொருள் இன்னதுதான் என்று தெளிவாகத் தெரிவதில்லே. மேற்கொண்டு படிக்காமல் உங்களையே அக்கேள்வியைக் கேட்டுப் பாருங்களேன். வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்; முதலீட்டை அதிகரித்தல்; விவசாய அபிவிருத்தி செய்தல்; தொழில்களை வளர்த்தல்; பொது நலம் போற்றுதல்; வறுமையைப் போக்குதல் போன்ற பல பதில்கள் வந்தால் அதிக வியப்பொன்றும் இல்லை. மேலே குறித்தவற்றுக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டெனினும் அவை பொருளாதார வளர்ச்சியின் முழுத் தன்மையையும் வெளிப்படுத்துவதில்லை.

அகராதியிலே. . . .

பொதுவாக அகராதிகளில் 'வளர்ச்சி' என்ற சொல் 'செறிந்திருக்கும் வல்லமையை வெளிப்படுத்துதல்' என்ற பொருளிலே கையாளப்பட்டுள்ளது. இதைப் பொருளாதாரத்தோடு இணைத்துப் பார்த்தால் ஒரு நாட்டின் கண் பொதிந்து கிடக்கும் பொருளாதார வாய்ப்புகளைப் பயன்படுத்துவதே பொருளாதார வளர்ச்சி என்று ஆகும். அதிலும் பிறரது தூண்டுதல் எதுவுமின்றி இயற்கையின் விருப்பு வெறுப்புக்கு உட்பட்டு காடாக வளருவது ஒரு நிலை; நன்ருகப் பக்குவம் செய்தும் பாதுகாத்து உரமிட்டு, நீர்பாய்ச்சித் தூண்டப்படும் வளர்ச்சி வேறு நிலை; வளர்ச்சியின் அளவுகளை முன் கூட்டியே திட்டமிட்டு அதற்கேற்ற வகையில் உரம், நீர் ஆகியவற்றை ஊட்டி வளர்ப்பது மற்றொரு நிலை. உயிரினங்களின் வளர்ச்சியைப்பற்றிய இக்கருத்

[முன் பக்கத் தொடர்ச்சி]

கண்டேன். அக்குறையும் பின்னல் பல நன்மைக்கு வித்தாக இருந்ததை எண்ணி மனதைத் தேற்றினேன்.. அதனல் அதில் பூசுவதற்கோ, மெழுகுவதற்கோ ஒன்றும் இல்லை.

னுக்கள் பொருளாதாரத்துக்கும் பொருந்துவதாகும்.

பொருள் உற்பத்தி

உலகில் ஒவ்வொருவருக்கும் தேவைகள் உண்டு. பரம்பரை, வெப்ப தட்ப நிலை, கலாச்சாரம், வருவாய் போன்ற சூழ்நிலைகளுக்கேற்ப தேவைகளின் அளவு, எண்ணிக்கை, தன்மை ஆகியவை மாறுபடும். தனியாருக்குள்ள தேவைகளைப் போலவே சமுதாயத்தின் தேவைகளும் பெருகுவதும் மாறுவதும் உண்டு. இத்தேவைகள் பொருள் வடிவாகவும் அமையலாம்; சேவைகளாகவும் இருக்கலாம். அப்பொருட்களையும் சேவைகளையும் படைத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்வதே பொருளாதார நடவடிக்கைகளின் அடிப்படைக் கொள்கையாகும். இத்தகைய ஆக்க முயற்சியில் ஒரு விவசாயி தனித்தோ, குடும்பமாகவோ அல்லது ஏனைய விவசாயிகளுடன் இணைந்தோ ஈடுபட்டிருக்கலாம் அதைப் போலவே தொழில் துறைகளிலுள்ள பல்வேறு தொழில்களும் நிறுவனங்களும் அவற்றில் ஈடுபட்டிருக்கும் உற்பத்திக் காரணிகளும் பொருட் பெருக்கத்தில் முனைந்து நிற்பர். அவ்வாறே பொருளாதாரத்தின் பல்வேறு உறுப்புகளும் ஒன்றுக்கொன்று உறுதுணையாக இருந்து பொருளாக்கத்தில் கலந்து கொள்ளுமேயானல் அதன் பயனாக நாட்டின் மொத்த உற்பத்தி பெருகும் என்று எதிர்பார்க்கலாம்.

உற்பத்திக் காரணிகள்

உழைப்பு, நிலம், முதல், அமைப்பு......போன்ற காரணிகளின் துணைகொண்டே பொருளுற்பத்தி நடைபெறுகின்றது. உற்பத்திச் சாதனங்களை இயற்கையால் அமைந்தவை, உழைப்பாலானவை என்று பகுக்கலாம். கன்னிநிலமும், காட்டாறும், கானகமும் இயற்கையின் அன்பளிப்பாகும். கச்சாப் பொருட்களும் நிலமடந்தையைக் குடைந்தெடுத்த கனிப் பொருட்களும், எந்திரங்களும் ஏனைய கருவிகளும் ஆக்கப்பட்ட சாதனங்களாகும். இவற்றுள் கச்சாப் பொருளும் கனிப்பொருளும் பொருள் உற்பத்தியின்போது உருமாறி முடிவாக வெளிவரும் பொருளோடு இரண்டறக் கலந்து விடுகின்றன. ஆனல் எந்திரங்களோ அவை போன்ற நீடித்த ஆயுளுடைய முதற்கரு

அடேயப்பா!
(அமெரிக்காவில்)

நியூயார்க்-நகரில் ஒவ்வொரு ஒரு லட்சம் பேருக்கும் 193 மருத்துவர் இருக்கின்றனர்; ஏறத்தாழ 500 பேருக்கு ஒரு டாக்டர்

அலாஸ்கா-விலுள்ள ஆரம்பப்பள்ளி — உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களின் சராசரி ஆண்டுச் சம்பளம் 7300 டாலர்; மாதச் சம்பளம் ஏறத்தாழ 3,000 ரூபாய்.

நியூயார்க் - கோனித்தீவின் கடற்கரை மணல் பரப்பின் நீளம் 5 மைல்; உலகத்திலே முதலாவது.

டெக்சாஸ் – இங்குள்ள மனிதர்களே மிக உயர்ந்தவர்கள்; சராசரி உயரம் 5 அடி $8\frac{1}{2}$ அங்குலம்.

அயோவா – இங்குள்ள குடிமக்களில் எட்டுப்பேரில் ஒருவர் 65 வயதுக்கு மேற்பட்டவர் நாட்டின் சராசரிக் கணக்கு 11ல் ஒருவர். (From 'Pageant')

விப் பொருட்களோ பல்லாண்டு களாக இருந்து பொருளுற்பத்தி யில் புங்கு கொள்கின்றன. என்னதான் எண்ணெயும் மையு மிட்டுப் பேணி வைத்திருந்தா லும் காலப்போக்கில் அக்கருவி கள் தேய்ந்துபடுவதால் அத்த கைய தேய்மானத்தை ஈடுசெய் வது இன்றியமையாதது. இன் றேல் அவ்வவற்றின் ஆயுட் காலம் முடியும்போது அவற்றுக் குப் பதிலாக வேறு எந்திரங்க ளேயோ கட்டடங்களேயோ நிறுவ முடியாமற் போகும். இவ்வாறு தேய்மானத்துக்கென ஒதுக்கப் படும் தொகையை உற்பத்திச் செலவின் ஒரு பகுதியாகக் கொள்ள வேண்டும். அதே சம யத்தில் நாட்டின் மொத்த உற் பத்தியிலிருந்து தேய்மானத் தைக் கழிக்கவேண்டும். அப் போதுதான் நாட்டின் நிகர உற் பத்தி இன்னதென்று கணிக்க இயலும் பொருளாதார வளர்ச்சி யில் கருத்துக் கொண்டவர்கள் நாட்டின் நிகர உற்பத்தி வளரு கின்றதா என்றே காண விழை வர்.

நாட்டு வருவாய்

பொருட்களின் மதிப்பைப அவ் வவற்றின் அளவையும் விலேயை யும் பெருக்கிவரும் தொகையால் கணிப்பது வழமை. ஆனல் அர சாங்கம் விதிக்கும் சுங்கம், விற் பனே, ஆயம்போன்ற மறைமுக வரிகளும் அவ்விலேயில் அடங்கி யிருப்பது கண்கூடு. இத்தகைய வரிவிதிப்பால் பொருட்களின் மதிப்பு மாறிவிடுவதில்லே. ஆனல் வரி அதிகரித்தால் விலேவாசி கள் ஏறும்; விலே உயர்வால் பொருட்களின் மதிப்பு மிகைப் படுத்திக் காட்டப்படும். எனவே பொருட்களுக்கு அங்காடியி லுள்ள விலேயைக் கொண்டு கணிக்கப்படும் மொத்த மதிப்பி லிருந்து அரசாங்கம் மறைமுக வரிகளின் வாயிலாக வசூலிக் கும் தொகையைக் கழித்தால் தான் பொருட்களின் உண்மை யான நிகர மதிப்பு இன்ன தென்று தெரியவரும். இதையே நாட்டு வருவாய் என்று அழைப் பர்.

அங்காடியின் விலேவாசிகள் நிலேயானவை அன்று பொருள் களுக்கு உள்ள தேவையையும் அளிப்பையும் பொறுத்து அவற் றின் விலேவாசிகள் ஏறி இறங் குவதுண்டு. அதைப் போலவே நீண்டகாலப் போக்கிலும் விலே வாசிகள் இயல்பாக ஏறவோ இறங்கவோ செய்யும். உற்பத்தி பெருகாத நிலேயில் விலேவாசிகள் மட்டும் ஏறிப் பொருள்களின் மதிப்பு உயருமானல் அதைக் கொண்டு பொருட் பெருக்கம் ஏற்படுகின்றது என்று கொள்ள லாகாது. பொருளாதாரம் முழு வதற்கும் பொருந்தக் கூடிய நீண்டகால விலே காட்டியின் துணைகொண்டு விலே உயர்வால் ஏற்படக்கூடிய மேடுபள்ளங்களே நிரவ வேண்டும். இவ்வாறு நிலே யான மதிப்பைக்கொண்டு கணிக் கும்போதுதான் நாட்டு வருவாய் வளருகின்றதா? தேங்கி நிற்கின் றதா? அல்லது குன்றுகின்றதா? என்று அறியலாம்.

தனி நபர் வருவாய்

நாட்டு வருவாய் வளருகின்ற அதே காலத்தில் மக்கட் தொகை யும் பெருகலாமல்லவா? நாட்டு வருவாய், மக்கட் தொகை இவ் விரண்டின் வளர்ச்சி வேகத் தைப் பொறுத்தே தனிநபர் வரு வாயில் முன்னேற்றம் உண்டா இல்லேயா என்று கணிக்க இய லும். இரண்டும் ஒரே வேகத்தில் வளருமானல் தனிநபர் வருவாய் தேக்கமுறும். நாட்டு வருவா

யைக் காட்டிலும் மக்கட் தொகை வேகமாக வளருமானல் தனிநபர் வருவாய்குன்றும். மாருக, நாட்டு வருவாய் மக்கட் தொகையைக் காட்டிலும் வேகமாக வளருமானல் தனி நபர் வருவாயிலும் முன்னேற்றம் காணப்படும். இவ்வாறு மாருத்திலையைக்கொண்டு கணிப்பதால் கிடைக்கும் தனி நபர் மெய் வருவாயே பொருளாதார வளர்ச்சியின் சரியான அளவுகோல்.

வளர்ச்சிக்கான சூழ்நிலை

ஒவ்வொரு நாட்டிலும் அதனதன் இயற்கைவளம், மக்கட் தொகை, குடிமக்களின் குண நலன்கள், தொழில் முறை, தொழிலறிவு, முதலாக்கம், ஆக்கப்பணியில் அரசாங்கத்தின் பங்கு, உற்பத்திச் சாதனங்களிடையே உள்ள உறவு ஆகியவற்றைப் பொறுத்து வளர்ச்சி வேகம் வேறுபடுவதுண்டு. வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் பொருளாதாரச் சூழ்நிலை நாட்டுக்கு நாடு வேறுபட்டிருந்திருப்பதையும் அதற்கேற்ப அதனதன் பொருளாதாரத்தின் போக்கும் வளர்ச்சி வேகமும் மாறுபட்டிருப்பதையும் காணலாம்.

வளத்தால் சிறந்த நாடுகள் பல பொருளாதார வளர்ச்சியின் உயர்ந்தபடிகளை எட்டிப் பிடித்திருக்கின்றன. ''உழைப்பால் உயர்வோம்'' என்ற உறுதி கொண்ட மக்கள் மிகுந்த நாடுகளின் வளர்ச்சியும் விறுவிறுப்பாக இருந்திருக்கின்றன. புதுமையில் நாட்டமும் இம்மையில் ஈடுபாடும் கொண்ட மக்களால் உயர்ந்த பொருளாதாரங்களும் உண்டு. மக்களது ஆக்க முயற்சிகளுக்குப் பக்கபலமாக நின்று வளர்ச்சிக்கானதோர் சூழ்நிலையைப் படைத்தளிக்கும் அரசாங்கமும் வேகமான வளர்ச்சிக்கு வழி நடத்த முடியும். வளர்ச்சிப் பாதையின் முன்னணியில் நின்று பொருளாதாரத்தின் உயிர் நாடிகளைக் கையில் ஏந்தி, நாட்டின் கண் ஆக்க சக்திகளையெல்லாம் ஒருங்கே திரட்டி, ஏற்றவகையில் அவற்றைச் செயல்படுத்திச் செல்லக் கூடிய திறம்படைத்த அரசாங்கங்களும் ஆங்காங்கே தங்கள் பொருளாதாரங்களை உன்னதமான பொருள் வளத்தை நோக்கி இழுத்துச் செல்வதுண்டு. இயற்கையின் இன்முகமும் எழில்மிகு மக்களும் ஒருங்கே அமைந்ததோர் நாட்டில் இவ்வாறு துரிதமான வளர்ச்சியில் வேட்கைகொண்ட அரசாங்கத்தின் அணைப்பும் உற்பத்திச் சாதனங்களிடையே உள்ள உறவும் சீராக அமையுமானல் அப்பொருளாதாரம் வீறுநடை போட்டு முன்னேறும் என்பதில் ஐயமில்லை.

கம்பனுல் இராமன்

''இவர் இயற்றிய கம்பராமாயணம் வான்மீக முனிவரது நூலினின்று இராம கதையை மாத்திரமே தழுவிக்கொண்டது. அதனையும் பல இடங்களில் திருத்திச் செம்மைப் படுத்திக் கொண்டதாகும். இது வான்மீகத்தின் மொழிபெயர்ப்பன்று. இப்பெருங் காப்பியம் தமிழ் நாட்டில் தோன்ருது போமாயின், வான்மீகத்தை வாசிக்கும் தமிழர் இராமரை ஒரு கடவுளாக வழிபடமாட்டார். கம்பர் இராமாயணம் பாடியது கி. பி. 1185 என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்.''

—கா. சுப்பிரமணிய பிள்ளை

(தமிழ் இலக்கிய வரலாறு: பக்கம் 405 – 406)

இங்கிலாந்தின் பொருளாதார வளர்ச்சி

தொழிற் புரட்சியின் தாயகமாக விளங்கிய இங்கிலாந்தில் இயற்கை அருள் சுரந்து செல்வங்களை அளவின்றி அள்ளி வழங்கிவிட்டது என்று சொல்ல இயலாது. இரும்பும் நிலக்கரியும் போக்குவரத்துக்கான நதிகளும் இருக்கத்தான் செய்தன. இருந்தும் அந்நாடு பெரிதும் வாணிபத்தையே நம்பி வாழ்ந்து வந்தது. 'எவனைச் சுரண்டியாவது என் வயிறு வளர்ப்பேன்' என்ற குறிக்கோளால் உந்தப்பட்ட பலர் சர்வாதீன உரிமை பெற்ற வாணிபக் குழுக்களாக அமைந்து திரைகடலோடித் தங்கள் வாணிப உரிமைகளையும் அரசியல் ஆதிக்கத்தையும் நிலைநாட்டி அதன் வாயிலாகக் கொள்ளை லாபம் அடித்து வந்தனர். இத்தகைய இலாப வேட்கையையும் ஆதிக்க வெறியையும் அரசாங்கம் தூபமிட்டுத் தூண்டிவந்தது. அதன்பயனாக வெள்ளியும் பொன்னும் இங்கிலாந்தினுள் வந்து குவிந்தது. அவற்றைக் கையாளக் கூடிய பாங்குகள் ஆங்காங்கே தோன்றின. வணிகரின் கையில் தேங்கிக் கிடந்த சேமிப்புகளைத் திரட்டி முதலீடு செய்யக் கூடிய வாய்ப்புகள் வளர்ந்தன. அதன் விளைவுதான் தொழிற்புரட்சி.

தொழிற் புரட்சியால் தூண்டப்பட்ட பொருளாதாரம் ஆண்டொன்றுக்கு இரண்டு முதல் மூன்று சதவிகித வேகத்தில் வளர்ந்து வந்தது. அதன் அடிச்சுவட்டைப் பின்தொடர விரும்பிய மேற்கு ஐரோப்பிய அரசாங்கங்களும் சற்றேறக் குறைய இதே வேகத்திலேயே தங்கள் பொருளாதாரங்களைக் கட்டி வளர்க்க முடிந்தது. கானடாவும் ஆஸ்டிரேலியாவும் இக்குடும்பத்தைச் சார்ந்தவையே.

அமெரிக்காவில் :

இயற்கையின் கண் சிமிட்டலுக்கு இசைந்து அமெரிக்காவில் குடிபுகுந்த ஐரோப்பிய மக்கள் 'முயற்சி திருவினையாக்கும்' என்ற முதுமொழிக்கேற்ப ஊக்கமும் உள்வலியுங்கொண்டு உழைத்து இயற்கை அள்ளி வழங்கிய செல்வங்களைத் தங்களது உழைப்பின் சின்னங்களான இயந்திரம், இரசாயனம், மின்சாரம் ஆகியவற்றின் துணைகொண்டு கைவசப்படுத்தி உலகில் வேறு எவருக்கும் இதுவரை கிட்டாததோர் வாழ்க்கைத்தரத்தை அனுபவித்து வருகின்றனர். இருப்பினும் 1869—1929 வரையுள்ள காலத்தில் அமெரிக்கப் பொருளாதாரத்தின் வளர்ச்சி வேகம் ஆண்டொன்றுக்கு நான்கு சதவிகித அளவிலேயே இருந்துவந்தது. அதன் பின்னர் அது உலகை உலுக்கியதோர் பயங்கரமான வாணிபச் சுழலில் சிக்கிச் சிதைந்தது.

ஃபிராங்க்ளின் ரூஸ்வெல்ட் அளித்த புதுத் தீர்ப்பின் கீழ் ஓரளவு உயிர்ப்பிச்சை பெற்று வந்த அப்பொருளாதாரம் இரண்டாம் உலகப் போராலும் அதன் பின்னுல் ஏற்பட்ட கெடுபிடிப் போராலும் நிறைவேற்றப்படாமல் குமுறி நின்ற தேவைகளாலும் பெரிதும் தூண்டப்பட்டது. ஆனால் சமீப காலத்தில் அதன் வேகம் மறுபடியும் தளர்ந்து ஆமை வேகத்தில் அசைந்து வருகிறது. இத்தகைய சிக்கலுக்கு வற்றிவரும் வளங்களும், வரண்டுவரும் வாய்ப்புகளும், முரண்பாடுமிக்க உற்பத்தி உறவுமே மூல காரணங்களாகும்.

ஜப்பானில் :

முதலாளித்துவப் பொருளாதாரங்களிடையே வளர்ச்சி வேகத்தில் முதலிடம் வகிப்பது ஜப்பான். 1868ம் ஆண்டுக்குப் பின்னரே ஜப்பான் தனது பொருளாதாரத்தைத் தொழில் மயமாக்கும் முயற்சியில் ஈடுபடலாயிற்று. இயற்கை கண்திறந்து பார்த்த நாடு என்றும் ஜப்பானை அழைக்க இயலாது. இங்கிலாந்தைப் போன்றே ஜப்பானும் வாணிபத்தை நாடிவாழவேண்டியிருந்தது. ஆனால் இங்கிலாந்துக்கு இருந்ததுபோல் பெரிய சாம்ராஜ்யம் எதுவும் ஆரம்பத்தில் ஜப்பானுக்கு இருந்ததில்லை. இருப்பினும் இடையருது உழைத்துப் பொருளீட்டிச் சிக்கனமாகச் செலவிட்டு மீந்ததைச் சேமித்து ஆக்கத்துறைகளில் முதலீடு செய்யக் கூடிய மக்கள் இருந்தார்கள். அவர்களது முயற்சிகளுக்கு ஊக்கமளிப்பதோடல்லாமல் நிலச்சீர்திருத்தம், அரசாங்க முதலீடு, அறிவியற் கல்வி ஆகிய துறைகளிலும் முன்னணியில் நின்று தனியாரின் முயற்சிகளுக்கு அரசாங்கம் துணை செய்தது. எனவே வெகுவிரைவில் ஜப்பானியர் மேனாட்டு உற்பத்தி முறைகளைப் பயின்று தமதாக்கினர். கைத்திறங் காட்டி ஆக்கிய பண்டங்கள் ஆசிய மார்க்கட்டுகளை ஊடுருவிப் பாய்ந்தன. சந்தைகளிலும் கச்சாப் பொருள்களிலும் நாட்டம் கொண்ட அரசாங்கம் நாடு பிடிக்கும் ஆசையாலும் பீடிக்கப்பட்டது. ஃபார்மோசா-கொரியா முதலிய நாடுகள் ஜப்பானின் கைவசமாயின. அவற்றில் செறிந்திருந்த கனிப் பொருட்களைக்கொண்டு தங்கள் தொழில்களைத் தூண்டி வளர்க்க முற்பட்டனர். இத்தகைய முயற்சிகளால் 1887-1930 வரையுள்ள காலத்தில் ஜப்பானிய் பொருளாதாரம் ஆண்டொன்றுக்கு ஆறு முதல் ஏழு சதவிகித வேகத்தில் வளர்ந்துவந்தது. இரண்டாவது உலகப் போருக்குப் பின்னரும் அப்பொருளாதாரம் என்றுமிலா மிடுக்குடன் ஓங்கி வளர்ந்து வருகிறது.

சோவியத் ருஷ்யாவில் :

இருப்பினும் விருப்பு வெறுப் பற்ற முறையில் ஆராயப் புகுந்தால் சமதர்ம அடிப்படையில் அமைந்த நாடுகளின் பொருளாதார வளர்ச்சியானது மற்றப் பொருளாதாரங்களைக் காட்டிலும் வேகமாக முன்னேறவல்லது என்பது புலனாகும். ரஷ்யாவை எடுத்துக் கொள்வோம். அமெரிக்காவைப் போலவே அங்கும் மனிதனின் காலடிபடாத கன்னி நிலங்களும், கைக்கு எட்டாத கனிப் பொருள்களும் செறிந்து விளங்கின. வளர்ச்சிக்கான முயற்சிகள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின் பகுதியிலேயே ஆரம்பமாயினவெனினும் உக்ரெயின் போன்ற மேற்கத்திய பகுதிகளே பெரும்பாலும் வளர்ச்சிக்கு இலக்காயின. வளர்ச்சி வேகமும் கணிசமாக இல்லை. இந்நிலையில் அப்பொருளாதாரத்தில் தோன்றிய முரண்பாடுகள் வளர்ந்து முற்றி முதலாவது உலகப் போரின்போது புரட்சியாக வெடித்து முதலாளித்துவ உற்பத்தி முறைக்கே உலைவைத்து விட்டது. பொருளாதாரத்தின் உயிர்நிலைகளைக் கைப்பற்றிய அரசாங்கம் எஞ்சிய பகுதிகளில் கொஞ்சகாலத்துக்கு முதலாளித்துவத்துக்கு உயிர்ப்பிச்சை யளித்து வந்தது. ஆனால் நாளடைவில் அம்முதலாளித்துவத் திட்டுகளைப் புடமிட்டு அழித்துக் கூட்டுறவு அமைப்புகளையும்

சமதர்ம சக்திகளையும் பலப் படுத்தியது.

பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையான முதலைத் திரட்டி நீண்டகாலக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் அதைத் திட்ட மிட்ட முறையில் ஈடுபடுத்தி அதுவரை எங்குமே கண்டிராத வேகத்தில் வளரத் தொடங்கியது. இரண்டாவது உலகப் போரால் அதன் பொருளாதாரம் பத்தாண்டுகள் பின்னுக்குத் தள்ளப்பட்டது எனினும் அதன் பின்னர் அதன் வளர்ச்சி வேகம் முன்போலவே அதிகரிக்கலாயிற்று. வளர்ச்சிக்கான இந்த ஓட்டத்தில் சோவியத் யூனியன் ஏனைய ஐரோப்பிய நாடுகள் பலவற்றையும் ஏற்கனவே முந்திவிட்டது. இன்று உலகிலேயே செல்வமிக்க நாடாகிய அமெரிக்காவைத் தொடர்ந்து நெருங்கிக் கொண்டிருக்கிறது.

உறக்கமின்மை

இது கவலைக்குரிய நோய் என்றே மருத்துவர் கருதுவதில்லை. இதனால் கேடு எதுவுமில்லை என்றே கூறுகின்றனர். இதனால் யாரும் இறந்துவிட்டதாகவோ, உடல் நலிந்து விட்டதாகவோ மருத்துவ வரலாற்றிலேயே கிடையாது. நடுக்கமும், மனச்சோர்வும், கவலையுமே உறக்கமின்மைக்குக் காரணம். ஆதலால் தூக்கமின்மை பற்றி மன மருத்துவ சிகிச்சைதான் சிறந்ததேயொழிய உறக்க மாத்திரைகளோ, மயக்க மருந்துகளோ பயன்படமாட்டா.

ஓய்வுக்காக மட்டுமே உறக்கம் தேவை; உறக்கம் கனவு காண்பதற்கும் பயன்படுகிறது. மனிதனின் மன நலத்துக்கு கனவுகள் தேவை.

சோவியத் பொருளாதார வளர்ச்சியின் வேகத்தைப்பற்றி ஆரம்பத்தில் பலரும் மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவித்து வந்தனரெனினும் அப்பொருளாதாரம் கிட்டத்தட்ட பத்து சதவிகித வேகத்தில் வளர்ந்து வருகின்றது என்பதை இன்று பெரும்பாலோர் ஒப்புக்கொள்கின்றனர். சோவியத் கூட்டுப்பண்ணைகளும் தங்கள் ஆக்க சக்தியைப் பெருக்குமேயானால் சோவியத் பொருளாதாரம் இன்னும் வேகமாக முன்னேற முடியும்.

கிழக்கு ஐரோப்பாவில்:

இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் சீனாவிலும் சமதர்மத்தில் நம்பிக்கைகொண்ட அரசாங்கங்கள் ஆட்சிபீடத்தில் அமர்ந்தன. கிழக்கு ஐரோப்பாவில் ரஷ்யாவைப்போன்று அத்துணை செல்வம் கொழிக்கவில்லை. மக்கள் நெருக்கமும் மிகுதி. முதலாளித்துவ சக்திகளும் முழுவதுமாக முறியடிக்கப் படவில்லை. பெரும்பாலான மக்கள் கம்யூனிஸ்ட் ஆட்சியை முழு மனதுடன் வரவேற்றார்கள் என்றும் சொல்ல இயலாது. இருப்பினும் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சி என்ற அடிப்படையில் இந்நாடுகள் தங்கள் சக்திகளை ஒருமுகமாகச் செலுத்திச் சராசரி எட்டு முதல் பத்து சதவிகித வேகத்தில் வளர்ந்து வருகின்றன.

சீனாவில்:

சீனாவும் இதற்கு விதிவிலக்கல்ல. வளமிக்க நாடுதான் எனினும் மக்கட்தொகை அதையும் மிஞ்சும் நிலையில் உள்ளது. இருப்பினும் கடின உழைப்பில் நம்பிக்கை கொண்டவர்கள் அவர்கள். அவர்களது நம்பிக்கைக்கு

ளிய் தலைவர் பலர் சமதர்மம் வெற்றிபெற வேண்டும் என்ற உறுதியுடன் செயலாற்றி வருகின்றனர். இம் முயற்சிகளுக்கு அண்மைக்காலம்வரை சோவியத் யூனியனின் ஆதரவு இருந்து வந்தது. எனவே சீனப் பொருளாதாரம் தம் மக்களின் சக்திகளை ஆக்க முயற்சிகளில் செலுத்தி உற்பத்தி உறவுகளைக் கூட்டுறவு, சமதர்மம் என்ற அடிப்படையில் மாற்றி யமைத்துத் தேக்க முற்றுக்கிடந்த பொருளாதாரத்தைத் தூக்கிவிட்டு வேகமாக முன்னேறி வந்தது. ஆனால் சமீப காலத்தில் 'கம்யூன்களில்' ஏற்பட்ட சிக்கல்கள், இயற்கை இழைத்த இன்னல்கள், அண்டை நாடுகளோடு கொண்டிருந்த உறவுக்கு ஏற்பட்ட கேடு ஆகிய காரணங்களால் சீனப் பொருளாதாரத்தின் வளர்ச்சி வேகம் சற்றுத் தணிந்து வருகிறது. இந்நிலையில் அதன் எதிர்காலம் எப்படி இருக்கும் என்று எளிதில் கூறுவதற்கில்லை.

இந்தியாவில் :

நம் நாடும் நிலவளம் மக்கட் பெருக்கம் ஆகியவற்றில் கிட்டத்தட்ட சீனவை ஒக்கும். சுரண்டலை அடிப்படையாகக் கொண்டிருந்த ஆங்கில ஆட்சியின்கீழ் தேக்கமுற்றுப் பின் தங்கிப் போயிருந்த நம் பொருளாதாரத்தை ஜனநாயக அடிப்படையில் திட்டமிட்டுத் தூண்டுவதற்கு முயன்று வருகிரேம். வரிவிதிப்பு, பணவீக்கம், அயல்நாட்டுக் கடன் ஆகியவற்றின் மூலம் மூலதனத்தைத் திரட்டி அதைத் திட்டத்துக்கு உட்பட்ட வகையில் ஈடுபடுத்தி அதன்மூலம் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்த வேண்டும் என்பதே நம் அவா. இருப்பினும் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளில் நமது பொருளாதாரம் ஆண்டொன்றுக்கு இரண்டு சதவிகித வேகத்தில் கூட வளரவில்லை என்பது வருந்தத்தக்கது.

"பொருளாதார வளர்ச்சியையே முக்கியமாகக் கருதி அதற்கேற்ற வகையில் செயல்படத் துடிக்கும் தலைவர்கள் இங்கு இல்லை. அவர்களுக்கு உறுதுணையாக நின்று ஆக்கமுள்ள கொள்கைகளை உருவாக்கக் கூடிய அதிகார வர்க்கமில்லை. உற்பத்தி உறவுகள் வளர்ச்சிக்கான வகையில் அமையவில்லை. களைகளைக் களைந்தெறியாவிட்டால் பயிர்கள் வளர்வதெப்படி?......என்ற பல குற்றச்சாட்டுகள் காதில் ஒலித்த வண்ணம் இருக்கின்றன. இவை அனைத்துமே ஓரளவு உண்மையாக இருக்கலாம். அதன் விளைவு தான் தளர்ச்சியுற்ற வளர்ச்சி!

எனவே இயற்கை அன்னையின் அருட்கண் திறந்தால் மட்டும் போதாது. அவள் அள்ளி வழங்கும் செல்வங்களைத் தமதாக்கி அனுபவிக்கும் திறம் படைத்த மக்கள் வேண்டும். அம் மக்களைக் காத்து அரவணைத்து ஆக்கப்பணியில் ஊக்குவிக்கும் அரசியல் – பொருளாதார அமைப்புகளும், உறவு முறைகளும் அமையவேண்டும். அப்போதுதான் பொருள் வளம் பெருகும். பொருளாதார வளர்ச்சியில் துடுக்கும் மிடுக்கும் காணப்படும்.

பொருளாதார ஏற்றத் தாழ்வு

தனி நபர் மெய்வருவாய் வளருகின்றது, அல்லது பொருளாதாரம் வளருகின்றது என்று சொல்லும்போது நாட்டு மக்கள் அனைவரின் மெய்வருவாயும் வளரும் என்று கொள்ளலாகாது. சிலரது வருவாய் வளரும்; பிறரது வருவாய் தேயும், அல்லது

தேக்கமுறும். நாட்டு வருவாய் கூடிவரும்போது பலரது வருவாய் தேக்கமுற்றால் அல்லது தேய்ந்து வந்தால் நாட்டு வருவாயின் பங்கீடு பாதிக்கப்படும். பணக்காரது வருவாய் தேய்ந்து ஏழைகளின் வருவாய் வளருமானால் பங்கீடு சமத்துவத்தை நெருங்கி வருகிறது என்று சொல்லலாம். மாறாக, பணக்காரன் கொழுக்கவும் ஏழைகள் நலியவும் நேர்ந்தால் பொருளாதாரத்தில் ஏற்றத் தாழ்வுகள் வளருகின்றன என்று உணரலாம். இவ்வாறு வருவாயிலுள்ள ஏற்றத் தாழ்வுகள் குறைவதுடன் உற்பத்தி பரிமாற்றம், விநியோகம் ஆகியவற்றின் சாதனங்களும் பொது உடைமைகளாக இருக்குமானால் அச்சமுதாயத்தைச் 'சமதர்ம சமுதாயம்' என்று அழைக்கலாம். அவ்வாறின்றி தனி உடைமையை அடிப்படையாகக்கொண்ட சமுதாயத்தில் பொருளாதார நெருக்கடியின் காரணமாகவோ அல்லது ஜனநாயக சக்திகளின் பலத்தாலோ ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்துப் பொதுநல வசதிகளைப் பெருக்குவதற்கான முயற்சிகள் நடக்குமாயின் அச்சமுதாயத்தைப் 'பொதுநலம்பற்றிய முதலாளித்துவம்' என்று அழைப்பர். மேற்கு ஐரோப்பிய பொருளாதாரங்களில் பல இந்த ரகத்தைச் சார்ந்தவையே.

சில சமயங்களில் பலமிக்க முதலாளிகள் சிலர் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவர்; பொருளாதாரத்தின் உயிர் நாடிகளாக விளங்கும் பகுதிகளை நாட்டுடைமை யாக்குவர்; அல்லது அவற்றின் மீது கண்டிப்பான அரசாங்கக் கட்டுப்பாட்டை அமுல் நடத்துவர்; ஏனைய முதலாளிகளோ தொழிலாளிகளோ மூச்சுவிடாமல் அடக்குவர்...... பின்னர் அப்பொருளாதாரத்தின் சக்திகளை நாட்டாசை போன்ற குறுகிய நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவர். இத்தகைய பொருளாதாரங்கள் வளரலாம். ஆனால் அவற்றின் பிடிப்பு பாஸிசக் கும்பலின் கையில் இருக்கும். இரண்டாவது உலகப் போருக்கு முன்னால் ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் முதலிய நாடுகளின் பொருளாதாரங்கள் பாஸிஸ சக்திகளின் பிடிப்பிலேயே சிக்கியிருந்தன.

அரசாங்க முதலாளித்துவம்

ஒரு சில பொருளாதரங்களில் சமதர்மக் கட்சிகள் ஆட்சி பீடத்தைப் பிடித்துப் பொருளாதாரத்தின் நாடி நரம்புகளை உடனடியாகக் கைப்பற்றிக் கொள்ளும். ஆனால் சின்னஞ் சிறு தொழில்களிலோ பண்ணைகளிலோ உடனடியாகக் கை வைப்பதில்லை. நாளடைவில் (பொருளாதாரம் முழுவதையும் கட்டியாளும் தகுதியும் சக்தியும் பெற்ற பின்னர்) எஞ்சியுள்ள முதலாளித்துவத் திட்டுகளைக் கொஞ்சங் கொஞ்சமாக நாட்டு மயமாக்குவர். இடைப்பட்ட காலத்தில் அமையும் இத்தகைய பொருளாதாரத்தை அரசாங்க முதலாளித்துவம் அல்லது 'முற்றுகையிடப்பட்ட முதலாளித்துவம்' என்று அழைக்கலாம். புதுப் பொருளாதாரக் கொள்கையின்போது (1921—28) இருந்த சோவியத் பொருளாதாரமும், 1949 — 56 வரை இருந்த சீனப் பொருளாதாரமும், இன்றுள்ள கிழக்கு ஐரோப்பியப் பொருளாதாரங்கள் பலவும் இவ்வகையைச் சேர்ந்தவையே.

சமதர்மத்தின் உரைகல்

எனவே, பொருளாதாரம் வளர்ச்சியுறலாம். பொருளாதாரத்தின் குடுமியை அரசாங்கம்

ஆட்டி வைக்கலாம். அரசாங்க முதலீடும் பேரளவில் நடைபெறலாம். இவற்றின் காரணமாக அப்பொருளாதாரம் சமதர்மத்தின் சாயலைப் பெற்றுவிடாது. ஆட்சி பீடத்தில் அமர்ந்திருப்பது யார்? உற்பத்தி உறவுகள் எவ்வகையில் அமைந்துள்ளன? ஆக்கப்படும் பண்டங்கள் எவ்வாறு பங்கிடப்படுகின்றன? என்பன போன்ற கேள்விகளுக்குக் கிடைக்கும் விடைகளைப் பொறுத்தே அப்பொருளாதாரத்தில் சமதர்மம் மலருகின்றதா? இல்லையா? என்று முடிவு செய்ய இயலும். அவ்வாறின்றி, முதலாவது உற்பத்தி; பின்னால் பங்கீடு; சர்வாதீன சக்திகள் பலம் பெற்றாலும் பரவாயில்லை; பொருளாதாரம் வளர்ந்தால் போதும்; ஏற்றத் தாழ்வுகள் இல்லாமல் பொருளாதாரம் வளருவதெப்படி? அரசாங்கக் கட்டுப்பாடுகளே வளர்ச்சிப் பாதையில் உள்ள குறுக்கீடுகள்...என்பன போன்ற குரல்கள் காதில் விழுமானால் அவை முதலாளித்துவத்தின் முணுமுணுப்பேயன்றிச் சமதர்மத்தின் சலசலப்பு ஆகாது!★

குழந்தை பொய் பேசுதல்

பெற்றோர்கள் தம் குழந்தைகளைப் பொய்யர்கள் என்று திட்டலாமா? கூடவே கூடாது. குழந்தைகள் மீது இந்தக் கேவலமான குற்றத்தைச் சாட்டக் கூடாது.

குழந்தை பொய் பேசுவதற்கு எப்படிக் கற்றுக்கொள்கிறது?

சில குழந்தைகளுக்கு, முக்கியமாக பள்ளி செல்லும் வயது வராத குழந்தைகளுக்குக் கற்பனை சக்தி மிகுதியாக இருக்கிறது. எந்த விவரத்தையும் அவை மிகைப்படுத்திக் கூற விரும்புகின்றன. புதிய விவரங்களையும் கற்பனை செய்து சேர்த்துக் கூறுகின்றன. பல விளையாட்டுகளுக்கு குழந்தையின் கற்பனை சக்தி தேவையாயுள்ளது. உதாரணமாக மரச் சட்டத்திலே உட்கார்ந்து கொள்ளும் குழந்தை குதிரையிலே சவாரி செய்வதாக நினைத்துக் கொள்கிறது. குதிரை சவாரி செய்வதாகக் கூறும் குழந்தை பொய் பேசுவதாகக் கூறுவது மிகப்பெருந் தவறாகும். உண்மைக்கும் கற்பனைக்குமுள்ள வேற்றுமையை நாசூக்கான முறையில் குழந்தைக்கு நாம் எடுத்துரைக்க வேண்டும்.

குடும்பத்திலே குழந்தைகள்தான் மிகவும் பலக்குறைவானவர்கள். தற்காத்துக் கொள்ளும் ஆற்றல் இல்லாதவர்கள். அடிக்கடி தண்டிக்கப்படும் குழந்தை இன்னும் பலவீனமாகி விடுகிறது. அச்சத்தால் பொய் பேச முற்படும் குழந்தைகளுக்கு நாளடைவில் பொய் பேசுவதே பழக்கமாகி விடுகிறது.

குழந்தைகளுக்கு வயதானவர்களிடம் நம்பிக்கை ஏற்படும்படியான முறையில் அவர்களை வளர்க்க வேண்டும். தமது தவறுகளையும் தீய செயல்களையும் அவர்கள் அச்சமின்றி பெரியவர்களிடம் சொல்லும்படி பழக்க வேண்டும்.

சில சமயங்களில் வயதானவர்களே பொய் பேசக் கற்றுக் கொடுத்து விடுகிறார்கள் குழந்தைகள் நேர்மையானவர்களாக இருக்க வேண்டுமானால் முதலில் நாம் நேர்மையுடன் இருப்பது அவசியம்.

— "சோவியத் நாடு"

5. காதல் சிறப்பு உரைத்தல்

[காதல் உணர்ச்சியினால் சேர்ந்த பிறகு பிரிந்திருக்கும் காதலர்கள் ஒருவர் மற்றவர்மீது கொண்டுள்ள அன்பு மிகுதியை எண்ணியெண்ணி, பிரிவாற்றாமை காரணமாகத் தனித்தனியே தமக்குள்ளாகவே காதல் உணர்வின் சிறப்புப்பற்றிக் கூறிக்கொள்வது. ஆண் கூறுவதுபோல் அய்ந்து குறள்களும் பெண் சொல்வது போல் மீதி அய்ந்தும் அமைந்துள்ளன.]

நயமான சொற்களைப் பேசுகின்ற என் காதலியைப் புணர்ந்த சமயம் அவளது தூய்மையான பற்களிடையே ஊறிய வாயூறல் நீரானது பாலையும் தேனையும் கலந்து அருந்தியது போல் அவ்வளவு சுவையாக இருந்தது; (பாலின் உணவுப் பொருளும் தேனின் சத்துப் பொருளும் கலந்ததுபோல் உணர்வும் ஊக்கமும் கலந்ததாயிருந்தது.) இப்பெண்ணுடன் எனக்குள்ள நட்பு (உறவு) உடம்புக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பு போன்ற நெருக்கமுடையதாயிருக்கிறது; உடலை விட்டுப்பிரிய உயிருக்கு மனமில்லாததுபோல் இவளை விட்டுப் பிரிய எனக்கு விருப்பமில்லை. என் கண்ணின் கருமணிக்குள் இருக்கின்ற பாவையே! நீ போய்விடு! (நீ இங்கே இருப்பதனால்) நான் காதலிக்கின்ற இப்பெண்ணுக்கு என் கண்ணுக்குள்ளே இடமில்லாமலிருக்கிறது; நீ உள்ள இடத்தில் என் காதலியை வைக்க விரும்புகிறேன். இவள் என்னுடன் கூடியிருக்கின்ற வரையில் என் உயிருக்கு வாழ்வு போன்றவள்; என்னைவிட்டுப் பிரியும்போது என் உயிருக்குச் சாவு போன்றவள். என் காதலியின் குணச் சிறப்புக்களை நான் மறந்தால் பிறகு நினைக்க முடியும்; ஆனால் ஒருபோதும் மறக்காமல் எந்நேரமும் எண்ணிக் கொண்டேயிருக்கிறேன்.

(இனி, காதலி தனக்குள்ளே சொல்வது:—)

என்காதலர் எனதுகண்ணுக்கு உள்ளேயும் போகாதபடி (இமைக்கும் விழிக்கும் இடையில் தங்கிக்கொண்டு) இமைக்கும் போது இமையின் அடிபட்டுத் துன்பப்படாமலிருக்கிறார்; அவர் அவ்வளவு நுட்பமானவர். என் காதலர் என் கண்ணுக்குள்ளேயே இருப்பதனால், என் கண்ணுக்கு மைதீட்டினால் அவர் மறைந்து விடுவாரென்று எண்ணி, நான் மைதீட்டுவதில்லை (காதலரைப் பிரிந்திருப்பதனால் மைதீட்டுவதில்லை என்ற கருத்தும் அடங்கியுள்ளது.) காதலர் கண்ணினுள் மட்டுமில்லை; என் நெஞ்சினுள்ளும் இருக்கிறார். ஆதலால் சூடான எதையாவது உண்டால், உள்ளேயுள்ள அவரைச் சுட்டுவிடுமென்று அஞ்சி சூடான பொருளை உண்ண அஞ்சுகிறேன். (பிரிவாற்றாமை காரணமாக சூடான உணவைக்கூட ஆறிப்போன

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

கடிதங்கள்

கவிதைக் கருத்து

செப்டம்பர் 'குத்தூசி' யில் வெளியான கவிதைகள் நான்கும் மனதைக் கவரும் வகையில் உள்ளன. தியாக வேங்கடதாசன் அவர்கள் எழுதியுள்ள 'வழி ஒன்றுதான் புரட்சி' என்ற கவிதையில், 'இதந்தரும் ஏழை நெஞ்சில், இலங்கிடும் எண்ணம் யாவும், சிதைந்திடில் எழும் புரட்சி, செப்பவோ வார்த்தையில்லை' என்ற வரிகளும் 'வஞ்சகர் வாழும்போது, வறியவர் வாழ்வதென்னுள்?' என்ற வரியும் ஆசிரியரது எண்ண எழுச்சியைக் காட்டுகின்றன. இவரது கவிதைகளும், இதுபோன்ற பிற கவிதைகளும் தொடர்ந்து வெளிவந்தால் நல்லது. ஏழையை அடக்கி வாழ்பவன் உயர்ந்ததில்லை. புரட்டுத்தன்மை காலத்தால் அழிந்து போகும், என்ற உண்மைகளை இனிய எளிய நடையில் ஆசிரியர் வெளியிட்டிருப்பது போற்றத்தக்கது. அந்த இதழில் பொன்மொழிகள் அதிகம்வரவில்லை. அவற்றை வேண்டுமளவு வெளியிடலாம். "பழமொழி விளக்கம்", போலிக் கருத்துக்களை அகற்றி உண்மையை விளக்குகின்றது.

எம். முத்துசாமி
(கோவை)

ஆசிரியரா பொறுப்பு?

ஆசிரியர்களின் அவலநிலை பற்றி அறிந்தால், "மாணவரா, ஆசிரியரா?" என்ற கேள்விக்குத் தக்க விடை கிடைக்கும்.

1. ஒவ்வொரு வகுப்பிலும் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை ஐம்பதுக்குமேல் இருக்கிறது. தரப்படும் நேரம் (Period) (45) நாற்பத்தைந்து மணித்துளிகள். இதில் ஒவ்வொரு மாணவனுக்கும் எவ்வளவு நேரம் ஒதுக்குவது? குறிப்பிட்ட அளவு பாடதிட்டத்தை(Syllabus)எப்படி நடத்தி முடிப்பது? கையெழுத்துப் போட்டு முடிக்கக்கூட நேரமில்லாதபோது அதிக அக்கரை காட்டுவதெப்படி? இது ஆசிரியரின் தவறு?

2. மாணவர்கள் பள்ளியில் பழகும் காலம் எவ்வளவு? வீட்-

(முன் பக்கத் தொடர்ச்சி)

பிறகுதான் உண்கிருள் என்ற கருத்துச் சுவையும் அடங்கியுள்ளது) என் காதலரைப் பிரிய மனமில்லாமல் அவரை எந்நேரமும் பார்த்துக்கொண்டேயிருக்கும் விருப்பத்தினுல் நான் கண்களை மூடுவதில்லை. கண்ணை மூடினுல் என் காதலர் கண்ணிலிருந்து மறைந்து விடுவார் என எண்ணி இமைக்காமல் விழித்தபடியே இருக்கிறேன். இதனுல் அவர் எனக்குத் தீங்கு செய்துவிட்டார் என்று ஊரார் அவர் மீது குறை கூறுகின்றனர். எப்போதும் என் உள்ளத்தில் இன்பத்தோடு வாழ்கின்ருர், என் காதலர். இதை அறியாத இவ்வூரார், அவர் என்னிடம் அன்பில்லாதவர் என்று வீண் பழி சுமத்துகின்றனர்.

டில் பழகும் காலம் எவ்வளவு? அதனுல் அவர்களின் முன்னேற்றத்தில் அதிக பங்கு பெறுவோர் யார்?

3. ''ஆசிரியர்கள் கற்றுத்தரக் கடமைப் பட்டவர்களேயன்றி தண்டிக்கத் தகுதியற்றவர்கள்" என வாதாடும் பெற்ருேர்களைப் பற்றிச் சிந்தித்ததுண்டா?

கு. முத்துக்கிருட்டினன்
(அரக்கோணம்)

கதை தேவை.

குத்தூசியில் பல புதிய பகுதிகள் வெளிவரவேண்டும் பிறந்து ஓராண்டிலேயே பத்திரிகை உலகில், ஏன், படிப்போர் உள்ளத்தில், உயரியதோர் இடத்தைக் கைப்பற்றிக் கொண்டுள்ள இந்த ஏடு நல்ல தொடர் கதைகளைத் தன்னகத்தே கொண்டு புதுமைப்பித்தும் விடுதலை வேட்கையும் கொண்டு சமத்துவம் சமதர்மம் ஆகிய தத்துவங்களைத் தமிழ் மக்கள் வாழும் மூலை முடுக்குகளிலெல்லாம் சங்கநாதம் செய்ய வேண்டுமென்பது என் அவா. முற்போக்குக் கருத்துக்களைப் பரப்பும் சமூகத் தொடர் கதைகளும் சிறு கதைகளும் வெளிவந்தால் மக்கள் இதயத்தில் நீங்காத இடத்தை நம் குத்தூசி பிடித்துவிடும் என்பது உறுதி. உடனே ஆவன செய்ய வேண்டுகிறேன்.

எம். எஸ். தங்கமணி
(டால்ச்சர்-ஒரிசா)

என் கருத்து

பகுத்தறிவுப் பாசறையின் காவலர்களா யிருக்க வேண்டிய அமைச்சர்கள் மதச் சார்பற்ற சர்க்காரில் மதத்தை வாழ்விக்கும் நிலையில்தானே உள்ளனர்? காஞ்சி காமகோடி ஜகத்குருக்களின் தாசர்களாகத்தானே திகழ்கிருர்கள்? இப்படி யிருக்க குத்தூசியின் குத்துகள் குடத்திலிட்ட விளக்குப் போன்றவை தானே? குத்தூசியின் கருத்துரைகளை ஆய்ந்துணர்ந்து, அமைச்சர்கள் திருவாய் மலர்ந்தருளினுல் சமுதாயம் கொஞ்சமாவது நன்மைபெறும்! ......ம்! ''ஊதுகிற சங்கை ஊதி விடுவோம், விடிகிறபோது விடியட்டும்'' என்ற நிலையில்தான் குத்தூசியின் சமுதாயத் தொண்டு தொடர முடியும். அறிவுக்கண் திறக்கிறபோது சமுதாயம் ஞானம் பெறட்டும்.

சென்ற அக்டோபர் தலையங்க இறுதியில் ஆசிரியர் தந்த 'முதல்

நிமிஷத்துக்கு 85 குழந்தைகள்!

இன்றைய உலகில் நிமிஷத்துக்கு 85 குழந்தைகள் பிறந்து கொண்டேயிருக்கின்றன. அதாவது மணிக்கு 5,100; ஒரு நாளைக்கு 122,400 குழந்தைகள்!

இதே வேகத்தில் சென்ருல் அடுத்த நாற்பதாண்டுகளில் இந்த உலகின் மக்கள் எண்ணிக்கை இரட்டிப்பாக ஆகிவிடுமாம்!

இன்றுள்ள 300 கோடி மக்களும் நாள்தோறும் மூன்று வேளை உண்பதற்கான உணவு உற்பத்தியாகவில்லை. எனவே தான் கோடிக்கணக்கானவர் அரைப்பட்டினியாக இருக்கின்றனர்.

தரையின் மேல்பரப்பிலுள்ள ஒன்பது அங்குல ஆழமான மண்ணின் உற்பத்தி சக்தியைத் தான் இன்று 300 கோடி மக்கள் தங்கள் உணவுக்காக நம்பியிருக்கின்றனர்.

நன்றி' என் நெஞ்சத்தை நெகிழ வைத்துவிட்டது. காந்தியாரின் 'கக்கூஸ் லைப்ரரி' புதுமையாகப் படவில்லை எனக்கு. அரிய கருத்துக்கள் உருவாகத்தக்க அமைதி தரும் இடம் அது என்றால் மிகையாகாது. பத்துப்பக்க "கணிதப் பொறிகள்" லாகிருதம் பொறுமையைச் சோதிக்கிறது. பலருக்கு விளக்கெண்ணெய்; சிலரிலே சிலருக்கு தேன் ஆக இருக்கலாம். அரசியல் நடாத்தும் அமைச்சர்களின் கண்களுக்கு ஏற்றபடி சுருங்கச் சொல்லி விளங்க வைக்கத் தெரியவில்லை, "சமூக நீதிக்கு வழி"யை.

தில்லிச் சகோதரி அவர்களின் குடும்ப வாழ்க்கைப் பகுதி, அலுவல்புரியும் மனைவியர்க்கு ஒரு விளக்கவுரை தருகிறது. வரவேற்கத்தக்கது. மேலைநாட்டு வாராந்திர 5-நாள் பணி நல்ல திட்டமே. இருப்பினும், பல துறைகளிலும் சுயதேவை பூர்த்தி பெற்ற மேலைநாடுகள், ஒருநாள் மிகுதி ஓய்வு விடுமுறை பெறுவது பொருத்தமே. மழலைப் பருவத்திலிருந்து இளமைப் பருவம் வந்துள்ள நம் பாரதம், மேலை நாட்டைப் போன்ற வாராந்திர இருநாள் ஓய்வுபெறும் நிலையில் சுயதேவை நிறைவு பெறவில்லை. இத்தலை முறையில் கூட நிறைவு பெறாது. ஏனெனில் சாண் போனால்தான் முழம் சறுக்குகிறதே! சுயநலமும், லஞ்சமும் ஒழியத்தான், நம் அரசியல் அரங்கில் புதிய மாற்றம் உருவாகியுள்ளது. முன்னணியா, பின்னணியா, பார்ப்போம். ஆகவே நம் பாரதத்திற்கு வாராந்திர ஒருநாள் ஓய்வே போதுமானது. பற்றாக்குறைக் குத்தான் பற்பல ஜெயந்திகள் உள்ளனவே!

"சொற் சிலம்பம்" கட்டுரை தமிழகத்திலே திகழும் ஹிந்திக் காகப் பரிந்து பேசுபவர்களுக்கு ஒரு தெளிவுரையாகத் திகழட்டும் என வாழ்த்துகிறேன். குழந்தைச் செல்வத்தின் நலம் பேணும் பெரும்பான்மைத் தம்பதியர்க்கு "படிப்பும் பருவமும்" ஓர் நல்விருந்தளிக்கிறது.

கணவனுடன் கூடிச் சேர்தலின் உவகையறியாமல், திரைக் காதலின் நிழலாட்டத்திலே இன்பம் கண்டு மகிழும் இன்றைய மங்கையர் பல்லாயிரவர்க்கு, வள்ளுவரின் "புணர்ச்சி மகிழ்தல்" குறள் விளக்கம், ஒரு புது மாற்றம் தந்திடும். அவர்கள் தம் மணாளர்க்கு இன்பவிருந்து கிடைத்திடும்.

டி. கே. கலாநிதி
(தாத்தய்யங்கார்பேட்டை)

"கணிதப் பொறிகள்"

தங்கள் அக்டோபர் 'குத்தூசி' இதழில் "கணிதப் பொறிகள்" பற்றிய கட்டுரை வரிசையில் 'இயங்கோல்' (Slide Rule)பற்றிய கட்டுரையைப் படித்தோம். இப்புதிய முயற்சிகண்டு மகிழ்ச்சி கொண்டோம். அக் கட்டுரையின் எளிமையும்,, செம்மையான படைப்பும் எங்களை வியப்பிலாழ்த்தியது. இம் மாதிரியான கணித, விஞ்ஞானக் கட்டுரைகள் 'குத்தூசி' மூலம் தமிழ்த் தாயை அணி செய்வதை பேருவகையோடு வரவேற்கிறோம். எங்கள் பாராட்டுதலை அக்கட்டுரை ஆசிரியருக்குத் தெரிவிக்க வேண்டுகிறோம்.

சி. இராசாமணி, M.Sc.
மு. இராசாமணி B.A.
(மதுரை)

இனிய கட்டுரைகள்

கடந்த இதழ்களில் கருத்துப் படம் (கார்ட்டூன்) வெளிவந்துள்

ளது மிகவும் சிறப்பான பகுத்தறிவுக் கருத்தை உள்ளடக்கி இருக்கிறது. எம். ஜே. கே. தவராஜ், கோவை மாறன், கவிஞர் முருகுசுந்தரம் போன்றோரின் கட்டுரைகள் கருத்தாழம் உள்ளவையாக உள்ளன. அன்னிபெசண்ட் அம்மையாரைப்பற்றி வெளியிட்டுள்ள கட்டுரை படிக்கப்படிக்க இனிமையாக உள்ளது. தாங்கள் தலையங்கமும் துணைத் தலையங்கமும் மட்டும் எழுதிவிட்டு நிறுத்தி விடுகிறீர்கள். தங்களின் தனிச் சிறப்புக் கட்டுரைகள் நிறைய இடம் பெற வேண்டும். குத்தூசியில் தொடர்ந்து வெளி வருகின்ற இலட்சுமிரதன் பாரதியின் கட்டுரை, சமுதாய முன்னேற்றத்தில் அக்கரையுள்ள எல்லோரும் படிக்க வேண்டியது. குஞ்சிதம் அம்மையார், இராமநாதன், 'அகரம்' கட்டுரைகளும் இடம் பெறவேண்டும். குத்தூசியை மாத ஏடாக வெளியிட்டு எங்களைத் தவிக்க விடுகிறீர்களே! மாதம் இரண்டு முறையாவது வெளியிடக்கூடாதா?

இரா. சண்முகானந்தம்
(திருவாரூர்)

தொழிலாளர் தொழுநோய்

சென்ற அக்டோபர் திங்கள் இதழில் இடம் பெற்றுள்ள "தொழிலாளர் தொழுநோய்" மறு சிந்தனையைத் தருகின்ற நல்ல கட்டுரை. வேலை நிறுத்தங்களினால் பாழான மனித நாட்களின் (Man days) அரசினர் புள்ளி விவரத்தைப் பார்க்கும் பொழுது மனம் வேதனைப்படுகின்றது. நமது அரசினரும் தொற்றுநோயாக பல்கிப் பெருகி வரும் இவ்வேலை நிறுத்தத்திற்கு ஓர் முடிவு காணுதல் சாலச் சிறந்ததாகும். தொழிலாளர் சங்கங்கள் (Trade Unions) அனைத்தும் எக்கட்சியின் பாலும் சாராது தனித்து நிற்றல் வேண்டும். தனி ஒரு நிர்வாகத்தின் கீழ் செயல்படல் நன்று. அரசியல் கட்சிகள் தொழிலாளர் சங்கங்களை (Trade Unions) ஒரு கருவியாகப் பயன்படுத்தி வருகின்றன.

ஒன்றை நான் ஈண்டு நினைவு படுத்த விரும்புகின்றேன். 1956 டிசம்பர் 8ல் இத்தாலிய பொதுவுடைமைக் கட்சியினர் ஒரு திட்டத்தை வகுத்தனர். 'கம்யூனிசத்துக்கு இத்தாலிய வழி' (Italian road to Communism) என்ற பிரகடனத்தில், 'ஒரு இயந்திரத்தின் சக்தியை பெல்ட் மூலம் மற்றொரு இயந்திரத்திற்கு மாற்றுவது போல தொழிலாளர்களின் வலுவைக் கட்சிக்குக் கட்சி மாற்றிவரும் பெல்ட்டாக தொழிலாளர் சங்கங்கள் செயலாற்றுவதென்பது இன்றைய இத்தாலியில் நடவாது' எனக் கூறியுள்ளனர். வர்க்கப் போராட்டங்களுக்கு அரசியல் நோக்கங் கொண்ட வேலை நிறுத்தங்கள் கூடாதென்பது அனைவரும் பின்பற்ற வேண்டியதொன்று.

அவ்விதழில் இடம் பெற்ற சாக்கோ-வான் செட்டி போன்ற நாத்திகப் பெரியார்களின் வாழ்க்கைக் குறிப்புகள் அவசியம் விரிவான முறையில் இடம்பெறல் வேண்டும். கவிஞர் முருகுசுந்தரம் அவர்களின் கவிதை உள்ளத்தைத் தொடுகின்ற நிலையில் அழகுற அமைந்துள்ளது. எந்த நிலையிலும் பத்திரிகா முனிவரின் சாபம் குத்தூசியை அணுக வழியில்லை. நிச்சயம் சில ஆயிரம் தமிழரேனும் இவ்வேட்டைப் படித்துப் பயனடைகிறார்கள்! அவர்களில் யானும் ஒருவன்

என்பதில் மகிழ்ந்து இதழ் வாழ், வளர, விரும்புகின்றேன்.

ச. வெ. சுப்பிரமணியன்
(மகாதேவி - திருச்சி)

பகுத்தறிவு

அறிவு, பகுத்தறிவு. அறிவற்ற மக்கள் உலகத்திலேயே இல்லை. அறியும் சக்தியைத்தான் அறிவு என்கின்றோம். ஒரு பொருளைக் காட்டி இது என்ன என்று கேட்டால் அதை அவன் அறிந்திருந்தால் அதை இன்ன பொருள் என்று கூறலாம். இல்லையென்றால் "இதைப்பற்றி எனக்குத் தெரியாது" என்று கூறலாம். அவன் அந்தப் பொருளைப்பற்றி அறியாத காரணத்தால் அவன் அறியும் சக்தியில்லாதவன் என்று கூற முடியாது. அவனுக்கு அந்தப் பொருளைப்பற்றி அறிந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படவில்லை. ஆகையால் தான் அதை அறிந்து கொள்ள முடியவில்லை. இதுபோலவே அறிவற்றவர், அறிவுடையோர் என்று பிரித்துக் கூற முடியாது. பகுத்து அறிவது பகுத்தறிவு. இது மனிதனுக்கு உள்ள தனிச் சிறப்பு. மதவாதிகள், ஆத்திகர் ஆகியவர்களை பகுத்தறிவு அற்றவர்கள் என்றும், மத நம்பிக்கையற்றவர்களும், நாத்திகர்களும்தான் பகுத்தறிவுவாதிகள் என்றும் கூறும் வாதம் சரியானதல்ல. ஆத்தீக நாத்தீக வாதம் முடிவற்றது. அது அவர்கள் எண்ணங்கள் அனுபவங்கள் ஆகியவைகளைப் பொறுத்தது. பொதுவாக 'பகுத்தறிவு' என்பது நாத்திகர்களுக்குச் சொந்தமான சொத்து என்று சிலர் கருதிக் கொண்டிருக்கலாம். அதை எப்படி ஒப்புக் கொள்ள முடியும்?

மேலும், இன்றைய அரசாங்கம் "செக்யூலர் கவர்ன்மெண்ட்" அதாவது மதச்சார்பற்ற அரசாங்கம். அரசாங்கம் எந்த மதத்தையும் சார்ந்ததல்ல என்பது தான் பொருள். ஆனால் அரசாங்கத்திலுள்ள எல்லா மக்களும் அவரவர் மதங்களை சார்ந்திருப்பதில் தவறில்லை. எண்ணிக்கையில் குறைவாக உள்ள இஸ்லாமியரும் கிறிஸ்துவரும் இந்த அரசாங்கம் தங்களுடையது என்று கூறிக்கொள்ள முடியாதது போலவே எண்ணிக்கையில் அதிகமாக உள்ள இந்து மதத்தவர்களும் தங்கள் அரசாங்கம் என்று கூறிக்கொள்ள முடியாது. எந்த மதத்தினரும் தங்கள் மதத்தின் காரணமாக அரசாங்கத்

முதல் உதவி: மாரடைப்பு

"இது கடுமையான நோய்; பெரும்பாலும் ஆண்களுக்கே காணும். இதயமுள்ள பகுதியிலும் இடப்புறத்திலும் பொறுக்க முடியாத வலி இருக்கும்; முகம் வெளுக்கும்; மூச்சு விடத் தொல்லையாயிருக்கும்.

உடனே நோயாளி கீழே விழுந்துவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். கழுத்திலும் இடுப்பிலும் உள்ள உடைகளைத் தளர்த்தி விடவேண்டும். படுக்க வைக்க வேண்டும். அமில் நைட்ரேட் (Amyl Nitrate) என்பதைத் துணியில் ஊற்றி முகரச் செய்யவேண்டும். உடனே மருத்துவருக்குச் சொல்லியனுப்ப வேண்டும். வேறுவிதமான இதய நோய்கள் கண்டால் மருத்துவருக்கு ஆள் அனுப்பிவிட்டு நோயாளியை உட்காரும் நிலையில் வைக்க வேண்டும். முகம் குப்புற விழாமல் பார்க்க வேண்டும்."

"கலைக்களஞ்சியம்"

தைச் சொந்தமாக்கிக் கொள்ள முடியாது. ஆனால் அரசாங்கம் எல்லா மத இன மக்களையும் தங்கள் குடிமக்கள் என்று கூறிக் கொள்ளலாம். அரசாங்க நடவடிக்கைகள், செயல் முறைகள் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள நிர்வாகிகள் எந்த மதத்தைச் சார்ந்துள்ளார்களோ அதற்கு ஆதரவான செயல்கள் நடைபெறுகின்றன அதற்காக நாம் அரசாங்கத்தைக் குறை கூறுவது சரியா? தங்கள் எழுத்து நீண்ட நாட்களாகவே இந்தக் குறைபாட்டைப்பற்றியே இருந்து வருகின்றதை அறிவேன்.

கடவுள் உண்டா, இல்லையா என்ற வாதம் தோன்றி—அதாவது புத்தர் காலத்திற்கு முன்பிருந்தே, இன்று வரையில் அதற்கு முடிவே ஏற்படவில்லை. இது ஒரு வேலையற்ற வாதமாகும்.

கடவுள் இருந்தால் நமக்கு என்ன நஷ்டம்? இல்லாவிட்டால் நமக்கு என்ன லாபம்? அவரவர் வேலைகளைப் பார்ப்பது நாட்டின் முன்னேற்றத்திற்கும், நமது முன்னேற்றத்திற்கும் சிறந்ததென்று கருதி உழைப்பதுதான் நன்மை என்பது என் கருத்து.

[இதற்கு மறுப்பு எழுதுவோர் கடிதமாகவோ, கட்டுரையாகவோ எழுதலாம்.]

சீ. தி. இராசு
(பேட்டவாய்த்தலை)

"உன் வாழ்க்கையை சிரிப்பாலும் சூரிய ஒளியினாலும் நிரப்பு! இன்பத்தை வெளிப்படுத்துவதற்கு மிக மிக வெற்றிகரமான முறை இதுதான்!"

—ராபர்ட் லூயி ஸ்டீவன்சன்

* * *

"தன் சக்திக் கேற்ற மிகப் பெரிய சாதனையைச் சாதிப்பதற்காகத் தன்னை நல்ல நிலையில் வைத்துக் கொள்ள வேண்டுவது ஒவ்வொரு மனிதனுடையவும் புனிதமான கடமையாகும்."

— ஒரிசான் எஸ். மார்டன்

* * *

"நல்லவர்களோடு சேர்ந்து பழக வேண்டும்; அதுதான் உங்கள் பெருமைக்கழகு; தீயவர்களுடன் சேர்வதை விடத் தனிமையில் இருப்பதே சிறந்தது."

— வாஷிங்டன்

பேனா மன்னன் ஸான்ட்-பீவ்

[காதம்பரி]

[தமிழர்கள் அறிந்திராத வெளிநாட்டுப் பெரியார்கள் பலர்-மிகப்பலர்-இருக்கின்றனர்; பலதுறைகளிலும், எழுத்துத்துறையில், ஃப்ரெஞ்சு நாட்டில் தலைசிறந்து விளங்கிய பேனா மன்னர் ஒருவரைப் பற்றியது இக்கட்டுரை.]

அவன் இலக்கியக் கடலின் மறு கரையை அடைந்தவன்; ஆனால் இன்பம் என்ற சொல்லின் பொருள் என்ன என்பதையே அறியாதவன். ஆயிரமாயிரம் மக்களின் உள்ளத்தில் தன் எழுத்துவன்மையால் மகிழ்ச்சியையும், மன நிறைவையும் ஏற்படுத்தியவன்; ஆனால் அவன் மனமோ ஏக்கத்தால் நிரம்பி வழிந்தது. அவனுடைய ஆதரவால் முன்னுக்கு வந்தவர்கள் எத்தனையோ பேர்கள்; ஆனால் அவன் என்னவோ, வாழ்க்கை என்னும் ஓட்டப்பந்தயத்தில் கடைசியிலேயே ஓடிவந்தான். அவனை உயிருள்ள பல்கலைக் கழகம் என்றும் சொல்லலாம்; 'தோல்வியின் திருவுருவம்' என்றும் கூறலாம்.

சார்லஸ் அகஸ்டின் ஸான்ட்-பீவ், 23—12—1804 அன்று, பூலோன் என்ற ஊரில் பிறந்தான். அவன் தந்தை சார்லஸ் பிரான்சிஸ் சுங்க இலாகாவில் அதிகாரியாகப் பணியாற்றி வந்தார். தாயின் பெயர் அகஸ்டின் கோலியோ. ஸான்ட்-பீவ் பிறந்தபோது அவன் தந்தை உயிருடன் இல்லை. தன்னுடைய ஐம்பத்து ஒன்றும் வயதில் அவர் இறந்துவிட்டார். அப்போது அவன் தாய்க்கு வயது நாற்பது.

ஸாண்ட்-பீவினுடைய தந்தையும் பெரிய படிப்பாளியல்ல. தாயும் மிகச் சர்வசாதாரணம். அப்படியிருக்க அவன் எப்படி நடமாடும் பல்கலைக் கழகமாக முடிந்தது? அதுதான் வியப்பாக இருக்கிறது. 'சூழ்நிலைகள் மனிதனை உருவாக்குகின்றன,' என்று சொல்பவர்களுக்கு சாந்த்-பீவ் ஒரு புதிராகவே இருக்கின்றான்.

"பிளெரியோ" பள்ளிக்கூடம் (Institute Bleriot) என்றழைக்கப்பட்ட கல்விக்கூடத்தில் ஆரம்பக் கல்வி கற்ற ஸாண்ட்-பீவ், தன்னுடைய பதின்மூன்றாவது வயதுக்குள்ளேயே ஏராளமான லத்தீன் நூல்களைப் படித்துவிட்டான். அதன்பிறகு ஸெயின்ட்-லூயி மருத்துவ நிலையத்தில் சேர்ந்து பயிலத் தொடங்கினான். அவனுக்கு இலக்கியக் கலையில் இருந்த ஆர்வம், மருத்துவத்தில் இல்லை. ஆகவே அவன் நான்காண்டுப் பயிற்சிக்குப் பின்னர், இலக்கியத்தில் ஈடுபட்டான். அதில் அவன் தாய்க்கு அதிக ஏமாற்றமே.

'குளோப்' (Le Globe) என்றழைக்கப்பட்ட இலக்கிய ஏடு ஒன்று அப்போது பாரிஸ் நகரில் வெளியாயிற்று. தன்னுடைய பத்தொன்பதாவது வயதிலே

சான்ட்-பீவ் எழுதித் தந்த இலக்கியக் கட்டுரை ஒன்று அதில் வெளியாயிற்று. ஃபிரெஞ்சுக் கலைமன்றத்தினர் நடத்திய கட்டுரைப் போட்டி ஒன்றில் சான்ட்–பீவ் கலந்துகொள்ளும்படி வற்புறுத்தப்பட்டான். "பதினாறும் நூற்றாண்டின் பிரெஞ்சுக் கவிதைகள்" என்பது பொருள். பத்துப் பக்கங்கள் கொண்ட கட்டுரையே போதுமானது. ஆனால் அவன் படித்திருந்ததோ ஏராளம். ஆகவே அவன் இரண்டு தொகுதிகள் கொண்ட நூல் ஒன்றை அதற்கு அனுப்ப நேரிட்டது. அது வெளியானதும், அவன் புகழ் பரவியது. பூர்பான் கல்லூரியில் படித்துவந்த இரண்டு ஆங்கில நண்பர்கள் அவனை இங்கிலாந்துக்கு அழைத்துச் சென்றார்கள். அப்போது அவனுக்கு வயது இருபத்து மூன்று. "நான் மறுபிறவி எடுக்க நேரிட்டால், ஒரு ஆங்கிலேயனாகப் பிறக்கவே விரும்புவேன்," என்றான் அவன்.

'ஜோசஃப் டெலொார்ம்' (Joseph Delorme)என்ற பெயரில் அவன் பல கவிதைகளை எழுதினான். அவை அவ்வளவாக உயர்ந்தன வல்லவெனினும் அவனுடைய கவிதை நூல்கள் இரண்டு மூன்று தொகுதிகளாக வெளியாயின.

விக்டர் ஹ்யூகோ என்ற உலகப் புகழ்பெற்ற கதாசிரியர் அப்போது தம்முடைய கவிதைத் தொகுதி ஒன்றை வெளியிட்டிருந்தார் அதைப் பற்றிய திறனாய்வுக் கட்டுரை ஒன்றை 'குளோப்' ஏட்டில் சான்ட்-பீவ் எழுத நேரிட்டது. அதன் விளைவாக விக்டர் ஹ்யூகோவுக்கும், அவனுக்கும் அறிமுகம் ஏற்பட்டது. ஹ்யூகோவுக்கு அப்போது வயது இருபத்தி ஐந்து. அவர் தம்முடைய இளம் மனைவி அடெலே (Adele)யுடன் இன்பகரமான இல்லறம் நடத்தி வந்தார். ஸான்ட்-பீவைத் தம் வீட்டுக்கு விருந்துண்ண அழைத்தார், ஹ்யூகோ. அச்சமயம் திருமதி அடெலேயக்கும் ஸான்ட்-பீவுக்கும் அறிமுகம் ஏற்பட்டது. அந்த வினாடியிலிருந்து ஸான்ட்-பீவ் நிம்மதி யிழந்தான்.

வழுக்கி வீழ்தல்

திருமதி ஹ்யூகோ பேரழகி அவள் தன் கணவனைக் காதலித்து மணந்திருந்தாள். சுகவாழ்க்கை நடத்தி வந்தாள். ஸான்ட்-பீவோ, ஏழை. அதிக வருமானமில்லாதவன். விகாரமான தோற்றத்தையுடையவன். ஆனால் இளைஞன். இந்த இருவருக்கும் ஏற்பட்ட தொடர்பு, விநோதமானது. ஸான்ட்-பீவின் அறிவுத் திறனில் தன் உள்ளத்தைப் பறிகொடுத்தாள் அடெலே. அவள் அழகில் தன் மனதைப் பறிகொடுத்தான் அவன். இரகசியமாகக் கடிதங்கள் எழுதத்தொடங்கினர் இருவரும். கடைசியில் உடலுறவும் ஏற்பட்டது. அன்றுமுதல் விக்டர் ஹ்யூகோவுக்கும், ஸான்ட்–பீவுக்கும் தீராப்பகை உண்டாயிற்று.

தன்னுடைய காதல் அனுபவத்தை அடிப்படையாக வைத்து ஸான்ட்-பீவ் 'வாலுப்டே' என்ற நவீனத்தை எழுதினான். அது மிகவும் அழகாக எழுதப்பட்டிருந்த போதிலும், பெரும்பாலோர் அதை விரும்பவில்லை. அதற்குப் பிறகு தன்னுடைய கடைசி கவிதைத் தொகுதியை வெளியிட்டான் அவன். அதுவும் மகத்தான தோல்வியாக அமைந்தது. அவன் மனம் மாறியது. அதன் பிறகு அவன் சொந்தமாக நாவல்களோ, கவி

தைகளோ எழுதுவதை விட்டு விட்டான்.

ஸ்விட்ஸர்லாந்துக்கும், இத்தாலிக்கும் சுற்றுலா சென்று வந்தான் ஸான்ட்-பீவ். லாசேன் என்ற நகரில் அவனுடைய சொற்பொழிவுக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். அவனுடைய பேச்சில் அழுத்தம் இருந்த போதிலும், சுவை இல்லை. அவன் பேச்சாளனல்ல. ஆகவே அவன் மனம் சோர்ந்து தன் நாட்டுக்குத் திரும்பினான். ஆனால் திரும்பிவந்ததும் தன்னுடைய லோசன் சொற்பொழிவுகளையே நூலாக எழுதினான். "போர்ட்-ராயல்" என்ற தலைப்புள்ள அந்த நூல், அவனுடைய ஆராய்ச்சித் திறமையையும், எழுத்து வன்மையையும் அகில உலகுக்கும் பறை சாற்றியது. அவன் புகழ் உயர்ந்தது. விக்டர் கசின் என்ற அவனுடைய நண்பரும், ஆதரவாளருமான அமைச்சர் அவனை 'மஜாரின்' நூல் நிலையத்தின் உதவித் தலைமை அதிகாரியாக நியமித்தார். அதில் இருந்த ஆயிரக் கணக்கான நூல்கள் அவனைக் கனவுலகுக்குக் கொண்டு சென்றன. மாதந்தோறும் ஒரு குறிப்பிட்ட தொகை சம்பளமாகக் கிடைத்தது. அவன் வாழ்க்கையில் முன் எப்போதுமில்லாத நிம்மதி உண்டாயிற்று. அவன் திருமணம் செய்துகொள்ள விரும்பினான். ஆனால் அவன் விரும்பிய பெண்கள், அவனை உதறித்தள்ளினர். அவனை விரும்பின பெண்கள் அவனால் புறக்கணிக்கப்பட்டார்கள். ஆகவே திருமணம் ஆகவில்லை.

ஃபிரெஞ்சுக் கலைமன்றம் (French Academy) என்பது ஃபிரான்ஸின் பேரறிஞர்களை உறுப்பினர்களாகக் கொண்டதோர் அமைப்பு. அதன் பெரு

அய்க்கிய நாடு அமைப்பு

'யூனோ' (U.N.O. = United Nations Organisation) என்று அழைக்கப்படும் அய்க்கிய நாடு அமைப்பு உலகப்போர் நடக்காமல் தடை செய்யவும், உலக மக்கள் அனைவரும் உடல் நலமும் அறிவும் உள்ளவர்களாக - ஒற்றுமையாக - வாழவும் ஏற்பட்டதாகும். 1945 ஜூன் 26 ல் அமெரிக்காவிலுள்ள சான்ஃப்ரான்சிஸ்கோவில் 50 நாடுகளின் பிரதிநிதிகள் கூடி அய்க்கிய நாடுகளின் சாசனத்தை ஒப்புக் கொண்டனர். இந்த அமைப்பு 1945 அக்டோபர் 24 ல் நடைமுறைக்கு வந்தது. உலக அமைதியையும் பாதுகாப்பையும் நிலை நாட்ட உறுதி கொண்டுள்ள நாடுகள் இந்த சாசனத்தில் கையெழுத்திட்டுள்ளன. 10-9-62வரை 104 நாடுகள் இதில் உறுப்பினராயுள்ளன.

இந்த அமைப்பின் சிறப்பு உறுப்புக்கள்:— (1) பொதுச் சபை (2) பாதுகாப்பு கவுன்சில் (3) சர்வதேச நீதி மன்றம் (4) பொருளாதார சமூக கவுன்சில் (5) தர்மகர்த்தா கவுன்சில் (6) செயலகம் — முதலியன.

இந்த அமைப்பு சாசனத்தைத் திருத்த வேண்டுமானால் பொதுச்சபை (General Assembly) மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் ஏற்றுக் கொண்ட பிறகு பாதுகாப்பு கவுன்சில் நிரந்தர உறுப்பினர் உட்பட மூன்றில் இரு பகுதி உறுப்பினர் ஒப்புக் கொள்ள வேண்டும். எனவே, உலக அமைதி ருஷ்யா, பிரிட்டன், அமெரிக்கா — ஆகிய நாடுகளின் நல்லுறவைப் பொறுத்தே இருக்கிறது.

மையும் புகழும் மேனுடுகள் அனைத்திலும் பரவிக் கிடந்தன. அதில் உறுப்பினர்கள் நியமிக்கப் படுவதில்லை; தேர்ந்தெடுக்கப் படுவர். தேர்ந்தெடுப்பவர்கள் மன்ற உறுப்பினர்களே! ஸான்ட்-பீவ் அப்பெருமன்றத்தின் உறுப்பினராக விரும்பி முயன்ருன். மிகவும் கசப்பான அனுபவங்களுக்குப் பிறகு அவனுக்கு வெற்றி கிடைத்தது. அது உண்மையில் பெரிய சாதனையே. அவனை வரவேற்று உரை நிகழ்த்தியவர் யார் என்று எண்ணுகிறீர்கள்? அவனுடைய பகைவரான மாபெரும் மேதை விக்டர் ஹ்யூகோவேதான்! கலைமன்ற உறுப்பினர்களுக்கு அரசியலிலும், சமூகத்திலும் செல்வாக்கு அதிகம். அவர்கள் எழுதும் நூல்களுக்கு அன்பளிப்பும் மிக அதிகம். ஸான்ட்-பீவ் அந்த விதத்தில் பேறுடையவனே.

ஸான்ட்-பீவ் கல்லூரியில் படித்துப் பட்டம் பெருத மேதை என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். ஆனாலும் அவன் காலத்தில் அவனைவிடச் சிறந்த படிப்பாளி யாருமேயில்லை. ஃப்ரான்ஸ் முழுவதிலும் உள்ள பல்கலைக் கழகப் பேராசிரியர்களின் அறிவின் திரட்சி, அவனுடைய பேனு முனைக்கு முன்னுல் மண்டியிட்டு நிற்கும். ஆகவே அவனை பெல்ஜிய நாட்டு அரசாங்கம் மதிப்புடன் வரவேற்று லீஜ் பல்கலைக் கழகத்தில் கௌரவ பேராசிரியராக நியமித்தது. ஃபிரெஞ்சு இலக்கியத்தின் வளர்ச்சியைப் பற்றி அவன் வாரம் இரு சொற்பொழிவுகள் வீதம் அறுபத்து நான்கு சொற்பொழிவுகளை நிகழ்த்தினுன். அதன் பிறகு இன்னொரு இலக்கியப் பிரிவைப் பற்றி இருபத்திரண்டு தொடர் சொற்பொழிவுகள் இயற்றினுன். அவனுடைய கரைகாணுத புலமையையும், நினைவாற்றலையும், ஆழ்ந்த சிந்தனையின் விளைவையும், லீஜ் பல்கலைக் கழகத்தினர் சுவைத்தனர். இருந்தபோதிலும் பொருமை பிடித்த சிலர் அவனுக்கு விரோதமாகப் பிரசாரம் செய்தனர். "ஃபிரெஞ்சு இலக்கியத்தைப் பற்றிப் பேச இந்த ஆசாமிதாஞ கிடைத்தான்? முழுநீளப் பட்டம் பெற்ற பேரறிஞர்கள் எவ்வளவோ பேர் இருக்கிருர்களே!" என்ற முணுமுணுப்பு எழுந்தது. ஆனல் முழுநீளப் பட்டம் பெற்ற அந்த அறிஞர் பெருந்தகைகளே, ஸான்ட்-பீவின் பேரறிவின் முன்னே வெட்கித் தலைகுனிந்து அமர்ந்த சங்கதி அவர்களுக்குத் தெரியாது.

புகழ் ஏணியின் உச்சி

பொருமை பிடித்த பேராசிரியர்களது தூண்டுதலின் விளைவினுல் போக்கிரி மாணவர்கள் செய்த குழப்பம் அவன் மனதை வருத்தியது. ஆகவே புண்பட்ட உள்ளத்துடன் அவன் பாரிஸ் திரும்பினுன். அங்கே நல்ல வேலையாக அவனுக்கு ஒரு வாய்ப்புக் காத்துக் கிடந்தது. "கான்ஸ்டிடியூஷனல்" என்ற வார இதழில், ஒவ்வொரு திங்கட்கிழமையும் ஏதாவது ஒரு பொருள் பற்றி அவன் கட்டுரை எழுதவேண்டுமென்றும், ஒவ்வொரு கட்டுரைக்கும் நூறிலிருந்து நூற்றைம்பது ஃபிராங்குகள் வரையில் அன்பளிப்புத் தருவதாகவும் அந்த ஏட்டின் ஆசிரியர் அவனிடம் ஒப்பந்தம் செய்துகொண்டார். ஏதாவது சரித்திர நிகழ்ச்சிபற்றியோ அல்லது இலக்கியத்தைப் பற்றியோ அவன் எழுதினுல் போதுமானது என்றும் ஆசிரியர் கூறினுர். அவன் உடன்பட்டான். முதல் கட்டுரை 1-10-1849ல் வெளியா

யிற்று. அந்த வாரத்திலிருந்து தொடர்ந்தாற்போல் இருபது ஆண்டுகள், அதாவது 1869ல் அவன் இறக்கும் வரையிலும் அவன் பேனா எழுதித் தள்ளிக் கொண்டேயிருந்தது. ஆயிரத்துக்கு மேற்பட்ட கட்டுரைகளை அவன் 'லுண்டிஸ்' (Lundis) என்றவரிசையில்எழுதிவந்தான். அவன் திரட்டிவைத்திருந்த அறிவுச் செல்வம் அனைத்தும் ஒவ்வொரு திங்கட்கிழமையும், ஃபிரான்ஸ் நாடுமுழுவதிலும், எல்லா இல்லங்களிலும் படிக்கப்பட்டன. அவை தொகுதி தொகுதியாக அடிக்கடி வெளியானதால் மற்ற ஐரோப்பிய மொழிகளிலும் உடனுக்குடன் மொழி பெயர்க்கப்பட்டன. 1849லிருந்து 1869ம்ஆண்டு வரையிலும் ஸான்ட்-பீவ் என்ற பெயர் ஐரோப்பாக் கண்டம் முழுவதிலும், எதிரொலித்தது, அமெரிக்காவிலும் அவன் நூல்கள் விரும்பிப்படிக்கப்பட்டன.

அவன் எழுதாத பொருளில்லை. அவனுக்குத் தெரியாத நூலுமில்லை. அவன் புகழேணியின் உச்சியில் இருக்கும்போது அவன் தாய் மகிழ்ச்சியின் மிகுதியால் இறந்தாள். 1869ம் ஆண்டு அக்டோபர் 13ந்தேதியன்று பிற்பகல் 1-30 மணிக்கு அவன் இறந்தான். அவனுடைய விருப்பப்படி அவனை அவனுடைய தாயின் கல்லறைக்கு அருகில் புதைத்தார்கள். "தான் இறந்தபின் எந்தவிதமான மதச் சடங்கும் செய்யத் தேவை இல்லை" யெனவும், நீண்ட இரங்கல் உரைகள் எதுவும் தேவையில்லை என்வும், அவன் இறக்குமுன்னர் தன் அன்பர்களைக் கேட்டுக் கொண்டான். ஆனால் அவனுடைய சவ ஊர்வலம் நீண்டதாகவே இருந்தது. ஃபிரான்சின் பெரிய எழுத்தாளர்கள் அனைவரும் — குஸ்தாவ் பிளேபர்ட், ஜார்ஜ் ஸான்ட், அலெக்ஸாண்டர் டூமாஸ், ரேனன், டுரூபாட் உட்பட—வந்திருந்தார்கள். அவன் மரணத்தைக் கேட்டு ஐரோப்பா கண்டமே அழுதது. அவனுக்குப் பின் ஃப்ரான்சில் அவனைப் போன்றவர்கள் யாரும் பிறந்ததாகத் தெரியவில்லை— இன்றைவரையில்!

"புரட்சி இல்லாவிட்டால் மனித சமுதாயமே தேங்கிப் போய்விடும்; அநீதியைத் திருத்த முடியாமல் போய்விடும். ஆதலால் சில சூழ் நிலைகளில் கீழ்ப்படிவதற்கு மறுக்கின்ற ஒருவன், தேவையான கடமையைச் செய்கிறான். ஆனால் அந்த மறுப்பு தன்னலத்துக்காக இல்லாமல் சமுதாயத்துக்காக இருக்க வேண்டும்."

— பர்ட்ரண்டு ரஸ்ஸல்

* *

"புகழ் என்பது நீராவி; எல்லோரிடமும் செல்வாக்காயிருப்பது திடீர் நிகழ்ச்சி; செல்வம் என்பது பறந்து விடக்கூடியது; நிலையாக நிலைத்திருப்பது ஒன்றே ஒன்றுதான்; அது நற்பண்பு"

— ஹொரேஸ் கிரீலி

தீ. சலாவுத்தீன், B. Sc.

குளவிகள்

[குளவிகளில் எத்தனை வகை, அவற்றால் மனிதனுக்கு ஏற்படும் நன்மைகள், குளவிகளின் வாழ்க்கை முறை — இவை பற்றிய இனிய கட்டுரை இது. இயற்கையிலுள்ள உயிரற்றவை — உயிருள்ளவை — ஆகியவைபற்றி ஆராய்ந்து அறிவது சுவை மிக்க பணியாகும்.]

குளவிகளைப் பற்றி எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். சிலர் அவைகளைக் கண்டாலே பயப்படுவார்கள். அது கொட்டினால் கொட்டிய இடத்தில் அதிகமாக எரியும். இதைச் சரிப்படுத்த பலர் சுண்ணம்பைத் தடவுவதும் உண்டு. இதைப்பற்றி எல்லோருக்கும் இவ்வளவுதான் தெரியும். சில சமயங்களில் நாம் வீடுகளை சுத்தம் செய்யும் பொழுது சன்னல்களின் ஓரங்களிலும், சுவரின் சந்துகளிலும் குளவிகள் உறங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்திருக்கிறோம் ஆனால் அது ஏன் உறங்குகிறது என்று தெரிந்துகொள்ள ஆசைப்படுவதில்லை. ஏன்? அது ஒருவகை ஈ தானே; அதைப்பற்றி நமக்கேன் ஆராய்ச்சி? அது எப்படி வாழ்கின்றது, தம் இனத்தை எப்படிப் பெருக்குகின்றது, அதன் உணவு வகைகள் யாவை என்பவை பலருக்குத் தெரியாது. தெரிந்தால் வியப்படைவார்கள். அதன் அறிவு நம்மில், பலருக்கு இல்லையே என்று வருத்தப்படுவார்கள்.

குளவிகள்; ஒளி புகு நால்கு (நான்கு) சிறகிகள், (Hymenoptera) "ஹைமநோப்டிரா" என்ற வரிசையைச் சேர்ந்தவை. இந்த வரிசையைச் சேர்ந்த மற்றவை எறும்புகள், தேனீக்கள் முதலியன. பொதுவாக இவைகளுக்கு நான்கு மெல்லிய சிறகுகள் உண்டு. இவை இயந்திரம் போல் வேலை செய்வன. இவை தங்கள் கண்மூடித்தனமான இயல்புணர்ச்சியால் தான் (இயற்கையான ஊக்கம்) (Blind Instinct) வாழ்க்கையை நடத்துகின்றன. இவைகளுக்கு நுண்ணறிவு இல்லை.

இனப்பெருக்கம்

பனிக்காலத்தில் வருந்தி உயிர் வாழ்ந்த ராணிக்குளவி தான் இனப்பெருக்கத்தைச் செய்யும். முதலில் சில அறைகள் கொண்ட கூடுகள் கட்டப்படும். இந்தக் கூடு மரக்கூழினால் செய்யப்பட்டது. மனிதன் காகிதத்தைக் கண்டுபிடிப்பதற்கு ஆயிரம், ஆயிரம் காலத்திற்கு முன்பே குளவிகள் மரக்கூழினால் காகிதம் செய்துவிட்டன இந்தக் கூடுகள் வெள்ளையாக இருக்கும். இதன்மேல் பக்கத்தில் உள்ளே போவதற்கு வழி இருக்கும். மழைகாலத்தில் கூடு கெடாமல் இருக்க, தன் வாயிலிருந்து வரும் ஒரு திரவத்தால் கூட்டை மெழுகி வைக்கும். கூடுகளின் வாயில்கள் வடக்குப் பக்கத்தை அல்லது வடகிழக்குத் திசையை நோக்கி இருக்குமாறு கட்டிவைக்கும். ஏனென்றால் கோடைகாலத்

திலும், குளிர் காலத்திலும் குளிர்ந்த காற்று எதிர்த் திசையிலிருந்து அடிக்கும் என்பதால். கூடு கட்டி முடிந்ததும், ராணிக் குளவி முட்டையிடும். பிறகு அவைகளை அடைகாக்கும். இதிலிருந்து வெளிவரும் குளவிகள் தான் வேலைக்காரக் குளவிகள். இவை கூட்டைப் பெரிதாக கட்டவும் உணவு சேர்க்கவும் உதவுகின்றன.

ஆகஸ்டு மாதத்தில் வேலைக்காரக் குளவிகளுக்கு நீண்ட விடுமுறையாகும். இவைகள் பூக்களில் தேனை உண்டு மலரின் மணத்தைத் முகர்ந்து மயங்கி அந்த மலரின் உள்ளேயே அயர்ந்து தூங்கும். இதை நாம் கூர்ந்து கவனித்தால் அறியலாம். இதன் பிறகு ராணி மீண்டும் முட்டையிடும். இவைகளிலிருந்துதான் ஆண், பெண் குளவிகள் வெளிவரும். இவை செப்டம்பர் மாதத்தில்தான் கூடும்.

உணவும் அதை அடையும் விதமும்

இவை தேனை மட்டும் உணவாகக் கொள்வதில்லை. சின்ன ஈக்களைப் பிடித்து அதை நன்றாக திரவமாக்கி தன் குழந்தைகளுக்கு. (கூட்டிலிருக்கும் புழுக்களுக்கு) கொடுக்கும். இவை ஈயைப் பிடிப்பது நல்லதொரு காட்சியாகும். குளவிகள் முன்னும் பின்னுமாக நன்றாகப் பறக்கும். இவை தரைக்குமேல் மெதுவாகப் பறந்து கீழே ஏதாவது இருக்கிறதா என்று கூர்ந்து பார்த்துக் கொண்டே போகும். ஈ ஏதாவது தென்பட்டால் உடனே அதைப் பிடித்துக் கொள்ளும். சில வேளைகளில் ஈ தப்பித்துக் கொள்ளும். ஆனால் குளவி விடுவதில்லை. அதைப் பின்தொடர்ந்து கட்டாயம் பிடித்துவிடும். பிடித்தவுடன் தன் நச்சு வாளான கொடுக்கினால் கொட்டும். அவ்வளவுதான் ஈ செயலற்று விழுந்துவிடும். பிறகு குளவி ஈயின் கால்களையும், இறக்கைகளையும், தலையையும் அறுத்துப் போட்டு விட்டு உடலை மட்டும் எடுத்துச் சென்று அதை திரவமாக்கி உண்ணும். பொதுவாக பெரிய குளவிக்கும் சிறிய குளவிக்கும் சண்டை ஏற்பட்டால் இச்சண்டையின் முடிவில் இரண்டில் ஒன்று கட்டாயம் கொல்லப்படும், சமாதானம் என்பதே இல்லை.

இறுதியில் உயிர்வாழ்வது

குளிர் காலம் தொடங்கு முன் ராணிக்குளவியும் மற்றப் பெண்களும் கூட்டை விட்டுச் சென்று விடும். கூட்டில் வேலைக்காரக் குளவிகளும் ஆண் குளவிகளும், சில கூட்டுப் புழுக்களும் இருக்கும். வேலை செய்த களைப்பினால் அவை அங்கேயே படுத்துக் கிடக்கும். குளிர்காலம் வந்தவுடன் கூட்டுப்புழுக்களுக்கு உணவு கொடுக்க முடியாததால் அவைகளைக் கூட்டின் வெளியே வேலைக்காரக்குளவிகள் கொண்டு சென்று கொன்றுவிடும். அவை பசியால் துடித்து உயிர் விடுவதைப் பார்த்துக் கொண்டிருக்க மனம் இல்லாததால் கொன்று விடுவதே மேல் என்று எண்ணி அப்படிச் செய்கின்றனவோ!!

குளிர் அதிகமாக ஆக, ஆக ஆண்களும் வேலைக்காரக்குளவிகளும் உணவில்லாமல் கூட்டிலேயே இறந்து விடும். வெளியே பெண்குளவிகள், வருங்கால ராணிக் குளவிகள் இவை மரங்களின் சந்துகளில் குளிரின் கடுமையிலிருந்து மறைந்து வாழ்ந்து, பின்பும் தங்கள் இனப் பெருக்கத்தைச் செய்ய தகுந்த

காலத்தை எதிர் நோக்கி இருக்கும்.

குளவிகளின் வகைகள்

குளவிகளில் பல வகைகள் உண்டு:—

(1) "கால் வாஸ்ப்"(Gall wasp)

(2) 'ஸிகாடாகில்லர்' (The cicada killer)

இது மஞ்சள் நிறமுடையது. இந்த வகை ஆண் குளவிகளுக்கு உண்டு களிப்பதே வேலையாகும். பெண்கள்தான் எல்லா வேலைகளையும் செய்யும்.

(3) மணல் குளவி (The sand wasp). இது மண்ணில் பொந்து செய்து உள்ளே வாழும். இது கருமை நிறங் கொண்டது.

(4) குதிரை காப்பாளன்(Horse Guard). இதைக் குதிரை லாயங்களில் காணலாம். குதிரைகளைத் தொல்லைப் படுத்தும் ஈக்களைக் கொன்று தின்பதே இதன் வேலை. இதன் நிறம் கருப்பும் மஞ்சளும் கலந்ததாகும்.

(5) மண் குளவி(Potter-wasp). இது மண்ணால் குடம்போல் தன் கூட்டைச் செய்து அதில் வாழும். இந்தக் கூடுகளை மரங்களின் இலைகளிலும் செடிகளின் இலைகளிலும் காணலாம். இது தன் கூட்டுப்புழுவுக்கு உணவாக கம்பளிப்புழுவைத் தன்னிடமுள்ள ஒரு திரவத்தால் மயக்கமடையச் செய்து கூட்டிற்குள் போட்டு மூடிவிடும்.

(6) மஞ்சள் குளவி (Yellow Jackets). இது மண்ணிலேயே வாழ்வது பெயர் மஞ்சள் குளவி என்று இருந்தாலும் இதன் உண்மை நிறம் கருப்பும் வெள்ளையும் கலந்திருக்கும். இது புழு பூச்சிகளை உணவாகக்கொள்ளும்.

எட்டுக் கால் பூச்சியின் எதிரி

இப்பொழுது குறிப்பிட்ட நான்கு வகை குளவிகளைப் பற்றி விரிவாக அறியலாம். ஒரு முறை ராபர்ட். இ-ஹட்சின்ஸ்(Robert. E.Hutchins) என்பவர் குளவியொன்று எட்டுக்கால் பூச்சியைத் தாக்கியதையும் தாக்கிய பிறகு நடந்த நடவடிக்கைகளையும் விரிவாகக் கூறுகின்றார். எட்டுக்கால் பூச்சி ஒன்று தன் கூட்டை விட்டு வெளி வந்து காற்று வாங்கிக் கொண்டிருந்தது. திடீரென்று அந்தப் பக்கமாக ஒரு பெரிய குளவி பறந்து வந்தது. அது இந்த எட்டுக்கால் பூச்சியைக் கண்டுவிட்டது, எட்டுக்கால் பூச்சி அஞ்சவில்லை அது என்ன செய்யும் என்று தெரிந்திருந்தும் அது தன்னிடம் நச்சுக் கொடுக்கு உண்டு, எப்படியும் சமாளித்து விடலாம் என்று நின்று இருந்தது. பக்கத்தில் ஓடி மறைய அடர்ந்த செடி கொடிகள் இருந்தன. குளவி மெதுவாகப் பறந்து வந்து தன் நச்சுக் கொடுக்கை அதன் உணர்ச்சி மிக்க இடத்தில் செலுத்திவிட்டது. அவ்வளவு தான்! எட்டுக்கால் பூச்சி சாய்ந்து வீழ்ந்தது!

பிறகு குளவி தான் முதலிலேயே கட்டிவைத்த கூட்டிற்குள் அதை மெதுவாக இழுத்துச் சென்று தள்ளிவிட்டது. பிறகு எட்டுக்கால் பூச்சியின்மேல் முட்டைகளை இட்டுவிட்டது. எட்டுக்கால் பூச்சி மயங்கித்தான் கிடக்கிறதே தவிர, இறக்கவில்லை. ஆகையால் அது முட்டையிலிருந்து வெளிவரும் குளவியின் கூட்டுப் புழுக்களுக்கு உணவாகிறது. முட்டையிட்ட பின் குளவி கூட்டின் வாயிலை மூடிவிட்டு தன் இறக்கைகளை காலினால் தடவிக் கொடுத்துவிட்டு மீண்டும், தன்

வேட்டையை ஆரம்பித்துவிடுகிறது. கூட்டில் நன்ருக வளர்ந்த பிறகு அது தானுகவே கூட்டை உடைத்துக்கொண்டு தன் வேலையைச் செய்ய ஆரம்பித்து விடுகிறது. என்னே, இயற்கையின் செயல்!

குயில் குளவி

மக்களில் சிலர் மிகவும் வருந்தி வேலை செய்கிருர்கள்; ஆனல் அதன் பயனை அவர்கள் அடைவதில்லை. அந்தப் பயனை, குளுகுளு அறையில் உட்கார்ந்து கொண்டு உல்லாசமாக காலத்தைத் தள்ளும் "பெரியவர்கள்" என்று சொல்லப்படும் சிலர் அடைகின்ருர்கள். இதேபோல் குளவிகளும் உண்டு. இதில் ஏமாறுவது மண் குளவிதான். இது மிக வருந்திக் கூடுகட்டி, சிறிய எட்டுக்கால் பூச்சி யொன்றை மயக்கப்படுத்தி கூட்டில் வைத்து, முட்டை பிறகு இடலாம் என்று ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கும். "ஏமாறச் சொன்னது நான்தானு?" என்று சொல்லும் வகையில் இது ஏமாந்து இருக்கும் சமயத்தில், பூக்களிலுள்ள தேனை உண்டு உல்லாசமாக இருக்கும் பச்சை நிறங் கொண்ட குளவி அந்தக் கூட்டில் தன் முட்டைகளை இட்டு விட்டுப் பறந்து சென்றுவிடும். கடைசியில் மண் குளவி தன் முட்டைகளை இட்டுவிட்டு கூட்டை மூடிச் சென்றுவிடும். அதில் முதலில் வெளிவரும் பச்சை நிறக் குளவியின் கூட்டுப் புழுக்கள், பிறகு வெளிவரும் மண் குளவியின் கூட்டுப் புழுக்களைத் தின்று பெரிதாகும். இந்தப் பச்சைக் குளவிக்கு "குயில் குளவி" (Cuckoo Wasp) என்று அமெரிக்காவில் கூறுகிருர்கள்.

ஊதா குளவி

இது குயில் குளவியைவிடப் பல்மடங்கு அட்டகாசம் செய்யும். "ஊதா குளவி" (Steel Blue Wasp) என்று பெயர். இது மிகப் பெரியது. நல்ல பலமுடையது. இதைக் 'கொடியவன்' என்றும் சொல்லலாம் (Villain). இது, வேருருகுளவி தன் முட்டைகளை இட்டு மூடிவிட்டுச் சென்ற கூட்டைத் திறந்து உள்ளே இருக்கும் பூச்சியையும் முட்டைகளையும் வெளியே எறிந்துவிட்டு, தான் கொண்டுவந்த பூச்சிகளை அதில் போட்டு, தன் முட்டைகளை அதில் இட்டுவிட்டு கூட்டை மூடிவிட்டுச் சென்றுவிடும். மண்ணுல் தனக்கு வீடுகட்டத் தெரியாதாகையால் அது மற்றதின் கூட்டை உடைத்து தனதாக்கிக் கொள்கிறது.

மணல்-விரும்பி

இந்தக் குளவிக்கு கம்பளிப் புழு வென்ருல் மிகப் பிடிக்கும். இது கம்பளிப் புழுவை மெதுவாக அணுகி தன் கூர்மையான கொடுக்கால் அதன் உணர்ச்சி மிகுந்த நரம்பில் தன் நஞ்சை ஏற்றிவிடுகிறது. கம்பளிப் புழு மயக்கமடைந்து விடுகிறது. இதைத் தன் கூட்டில் வைத்து முட்டையிட்டு கூட்டை மூடிவிடுகிறது. இது கூட்டை மூடுவது நம் கவனத்தை மிகவும் ஈர்க்கும். ஒரு மண் உருண்டையை எடுத்து வேகமாக குழியின் வாயிலின் பக்கம் வீசி எறியும். மண் உருண்டை வாயிலில் வீழ்ந்து மண் உள்ளே சென்று குழியை மூடிக்கொள்ளும். இதற்கு "மணல்-விரும்பி" அல்லது "அம்மோபீலா" (Ammophila) என்று பெயர்.

மனிதன் கருவியைக் கண்டு பிடிப்பதற்கு ஆயிரம் ஆயிரம்

ஆண்டுகளுக்கு முன்னேயே இந்த மணல்-விரும்பி மண் உருண்டை ஆயுதத்தைக் கண்டு பிடித்து அதைப் பயன்படுத்தவும் செய்துள்ளது!

குளவிகளினால் நமக்குப் பல நன்மைகள் உண்டு. இவைகளினால் மகரந்த சேர்க்கை ஏற்பட்டு நமக்குப் பழங்களும் விதைகளும் கிடைக்கின்றன. இன்னும், குளவிகள், ஈக்கள், கம்பளிப் புழுக்கள் போன்ற பூச்சிகளை உணவாகக் கொள்வதால் தாவரங்கள் பாதுகாக்கப்படுகின்றன.

பூச்சிகளின் இனத்தில் இன்னும் எவ்வளவோ வியப்புக்குரிய, மக்களுக்குத் தெரியாத, விசித்திரங்கள் விநாடிக்கு விநாடி நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன.

மண விலக்கு உரிமை
(DIVORCE)

இச்சட்டம் (1955-ம் ஆண்டு இந்து மணச் சட்டம்) தொடங்கியதற்கு முன்பே மணம் செய்து கொள்ளப்பட்டிருந்தாலும் சரி, இதன் பிறகு மணம் செய்து கொள்ளப்பட்டதானாலும் சரி, திருமணத்திற்குரிய தம்பதிகளில் ஒருவர், தம்மிடம் மற்றவர் அடியிற்கண்டபடி இருப்பது காரணமாக சட்டபூர்வமாகப் பிரிந்து போவதற்கான தீர்ப்பைக் கோரி மாவட்ட நீதி மன்றத்துக்கு மனுச் செய்து கொள்ளலாம்:—

(1) மனுச் செய்து கொள்வதை யொட்டி முந்தித் தொடர்ச்சியாக இரண்டு ஆண்டு காலத்துக்குக் குறையாமல் மனுதாரைக் கைவிட்டிருக்கிறார் என்பது; அல்லது

(2) மனுதாரர் தம்மைச் சேர்ந்த மற்றொரு தம்பதியுடன் வாழ்க்கை நடத்துவது அபாயகரமானது அல்லது தீங்கானது என்று நியாயமான அச்சத்தை மனுதாரின் மனதில் உண்டு பண்ணக் கூடிய அளவுக்கு அவர் மனுதாரரைக் கொடூரமாக நடத்தியிருக்கிறார் என்பது; அல்லது

(3) மனுச் செய்து கொள்வதற்கு அடுத்து முந்திய ஒரு ஆண்டு காலத்துக்குக் குறையாமல் கொடிய குஷ்டரோகத்தினால் பீடிக்கப்பட்டிருக்கிறார் என்பது; அல்லது

(4) மனுச்செய்து கொள்வதற்கு அடுத்து முன்பு, தொத்திக் கொள்ளத்தக்க மேக நோயினால் பீடிக்கப்பட்டிருக்கிறார் என்பது; ஆனால் இந் நோய் மனுதாரரிடமிருந்து தொத்திக் கொண்டதாக இருக்கக் கூடாது; அல்லது

(5) மனுச்செய்து கொள்வதற்கு அடுத்த முந்திய இரண்டு ஆண்டு காலத்துக்குக் குறையாமல் தொடர்ச்சியாக தன் நினைவு இல்லாமலிருக்கிறார் என்பது; அல்லது

(6) மணம் செய்து கொண்ட பிறகு, அவர் தம் கணவனாயிராத, அல்லது மனைவியாயிராத, மற்றொரு நபருடன் புணர்ச்சி செய்திருக்கிறார் என்பது.

(1955 இந்து திருமணச் சட்டம்: விதி –10.)

மதிப்புரை:

1. 'பூவா முல்லை

[எழுதியவர்: புலவர் குழந்தை. (230 பக்கங்கள்-விலை ரூ 3-50) இளங்கோ புத்தகசாலை, ஈரோடு]

பதினெட்டுக் கட்டுரைகளைக் கொண்டது இந்நூல்.

முல்லை அரும்புகள் மலர்வதற்கு மாலையை எதிர்நோக்கி இருத்தல் போல தன்னைப் பிரிந்த தலைவன் வெற்றியுடன் மீளும்வரை ஏங்கி இருத்தலை 'பூவாமுல்லை' யில் சித்தரிக்கிறார். தைப்பொங்கல் திருநாளில், ஒரு விளையாட்டாக்கி வெறித்தோட விரட்டிய காளைகளை, வீரம் காட்டிப் பிடித்தடக்கி வெற்றிகொள்ளும் இளங்காளையரை விரும்பி வரித்துக்கொள்ளும் தமிழ் மகளிர் அக ஒழுக்கத்தை 'ஏறு தழுவல்' என்ற கட்டுரையில் விளக்குகிறார். எழுத்தறிவில்லாத மக்கள் தத்தம் வாழ்க்கையில் ஒன்றி உணர்ச்சிவயப்பட்டு இசை இன்பம் பெருகப் பாடும் பாட்டுகளின் 'கல்லாக் கவித்திறம்' புலவர் புனையும் செய்யுள் மரபிற்கு காரணமாகிறதை எடுத்துக் காட்டியிருக்கிறார். அரசர் குருவாகி தமிழ் முடிமன்னரையும் அடிவருடச் செய்யும் ஆரிய சூழ்ச்சிகளின் திறனைப் 'போலிச் சோழர்' என்ற தலைப்பில் காணுகிறார்: அடுத்து, 'ஓரவஞ்சனையில்' பெண்களைத் தம் உரிமைகளாக்கி மறுமணத் தடைபோன்ற விலங்குகளைப் பூட்டி, ஆடவர் செயும் கொடுமைகளைப் படம் பிடித்துக் காட்டுகிறார். 'இந்திர விழாவில்' 'சிலம்பும்,' 'மணிமேகலையும்' விவரிக்கும் விழா விண்ணவர் தலைவன் விழா அன்று, பௌத்த அறங்கள் தழைக்க கீழ்த்திசைக் காவலரான இந்திரர்கள் (இந்திரம்-குணபுலம்) விழாவாகும் என முடிவு கட்டுகிறார். 'யார் குற்றவாளி' என்ற கதையின் மூலம் ஒருதலைக் காமமாகிய கைக்கிளையை விளக்குகிறார். காமத்திற்கு இன்பம் பயக்கும் காதலியின் ஆராமையை (புலவி நுணுக்கம்) 'ஓர் இரவில்' ஒரு சிறுகதையாகத் தருகிறார். தமிழகச் செல்வி கடலுக்கு கூறும் முகத்தால், அதனுடைய அரிய பொருள்களையும், பல திறப்பட்ட முத்துக்களையும் 'முத்தாரமுதத்தில்' விவரிக்கிறார். 'ஊழ்' என்ற தலைப்பில் அது மாற்ற முடியாத முற்பிறப்பின் வினைப்பயன் என்பதை மறுத்து, உலகியல் முறைமையே என்றும், அதனை உணர்ந்து செயல்படுதலே நன்றென்றும் கூறுகிறார். 'நனி நாகரிகம்' என்ற தலைப்பில் அழகுக் கலைகள் முதல் அனைத்து வாழ்க்கையிலும் ஏற்படும் மாறுபாடுகளில் தழைத்தோங்கும் தமிழர் நாகரிகத்தின் சிறப்புக்களைக் காண்கிறோம்.

'கலப்புக்கலை', 'தமிழ்க்கொலை' 'ஊமும் செவிடும்', 'வள்ளுவன் வாயது', 'பாட்டியற் பரிசு', 'முன்னுக்குப் பின்', 'நெல்லிடைப் புல்', ஆகிய கட்டுரைகளில் வட ஆரியர், தென்னகத்தில் புகுந்து, தமிழர் நாகரிகத்தையும், பண்பாட்டையும், மொழியையும் எவ்வாறு கெடுத்தொழிந்தனர் என்பதைப் பல சான்றுகளால் எடுத்துக் காட்டுகிறார்.

"தமிழரைப் பொறுத்தவரை 'கலப்புக் கலை' செய்த கேடு ஒன்றிரண்டல்ல; அளவில் அடங்காதவை...மொழியையும் கெடுத்துக் குட்டிச் சுவராக்கிவிட்டது... ஆரியப் புலவர்கள் தமிழ் இலக்கிய இலக்கணத்தில் தங்கள் கொள்கைகளைப் புகுத்தி வந்தனர்" (பக்கம் 88) "பழந்தமிழ் நூல்களின் உரையில் தங்கள் கொள்கையான நஞ்சைக் கலந்து சுத்த தமிழ் நூல்களின் பொருளையே பிற்காலத்தமிழர் அறிந்து கொள்ள முடியாமல் செய்துவிட்டனர். தொல்காப்பிய உரையும் திருக்குறள் உரையும் இதற்கு எடுத்துக்காட்டுகளாகும்" (89) "இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர் முதலிய உரையாசிரியர்கள் வேண்டுமென்றே வடமொழிக் கருத்துக்களை வலிந்து புகுத்தி தமிழ்க் கொலை செய்துள்ளனர் என்பது உலகறிந்த உண்மை... நீர் என்பது ஆரியச்சிதைவு என்கிறார் சேனாவரையர் இது வேண்டுமென்றே கூறும் பச்சைப் பொய்யல்லவா?" (99)

"திரு மு. ராகவய்யங்கார், ''தமிழர்க்கு ஒழுக்கமில்லை...ஆரிய மேலோர் மணச் சடங்குகளை வகுத்துக்கொடுத்து வாழ்வித்தனர்'', எனத் தமிழ் மரபையே பழித்துத் தமிழ்க்கொலை புரிந்தார்". திரு பி. சா. சுப்பிரமண்ய சாஸ்திரியார், ''வடமொழி இலக்கண நூலின் மொழிபெயர்ப்பே தொல்காப்பியம்" என மனங் கூசாமல் எழுதித்தள்ளித் தமிழ்க் கொலை புரிந்தார்" (101) மதுரைக் கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் திரு ரா. கிருஷ்ணமூர்த்தி ஒரு புதிய முறையில் தமிழ்க் கொலை செய்ய முற்பட்டிருக்கிறார்...தமிழில் பெண்பால் விகுதி 'இ' அல்ல, 'இ' என்பது 'ஸ்திரி' என்பதன் சிதைவு (102) வடமொழியிலிருந்து தமிழ் உண்டானது என்னும் பொருந்தாக் கூற்றை உட்கொண்ட பொருந்தாக் கூற்றாகும். (107) வேலியே பயிரை மேயும் நிலையில் உள்ளது தமிழ்நாடு. (108) தமிழ்த் தலைவர்களுக்கு என்று உண்மையான தமிழுணர்ச்சி உண்டாகுமோ அதுகாறும் தமிழ்மொழி 'ஊமும் செவிடும்' உண்மை உரை காணும் இழிநிலையிலேயே இருந்துவர வேண்டியதுதான். (130) ''நாலு வேதங்களும் பாரதமும் கொண்ட ஆரிய நாகரிகமும் தமிழர் நாகரிகமும் ஒன்றே-திருக்குறள் கூறுவது ஆரிய நாகரிகமே," என்பன போன்றவற்றைக் கூறித் தமிழரை ஆரியத்துக்கு அடிமையாக்கச் செய்த தந்திரமே இது" (146) ''செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்—தங்குறிப்பனவே திசைச் சொற்கிளவி" (தொல்காப்பியம்–100) இச் சூத்திரத்திற்குச் சோழ நாட்டின் தென்பகுதியே செந்தமிழ் நாடாகவும் அதைச் சேர்ந்த பன்னிரண்டும் கொடுந் தமிழ் நிலங்களாகவும் கொண்ட சேனாவரையரின் பொருந்தா உரைகளையும், நன்னூலாரின் கலப்பிலக்கணவிதி தமிழ்மொழிக்குச் செய்த கேட்டையும், 'முன்னுக்குப் பின்' என்ற கட்டுரையில் கண்டிக்கிறார். 'நெல்லிடைப்புல்' எனும் கட்டுரையில், கபிலர் அகவலை ஆய்ந்து, வள்ளுவர் பிறப்புப்போன்ற கேவலமான கற்பனைக் கதைகளையும் பொய்க் கூற்றுக்களையும் தமிழர் வரலாற்றிடை நிரப்பிய இழி தகைமைகளையும் கண்டிக்கிறார். 'பாட்டியற் பரிசு' என்ற கட்டுரையில் சாதி தமிழர் வாழ்க்கையில் மட்டுமின்றி அவர்தம் மொழியிலும் இலக்கணத்திலும் செய்யுள் இயற்று முறையிலும் நீக்க

டீறப் புகுந்திருப்பதை விளக்குகிருர், வருணப் பொருத்தத்தைப் புகுத்தி தமிழ் எழுத்துக்களையும் 'மறையோர்', 'அரசர்' 'வணிகர்', 'சூத்திரச்' சாதிகளாகப் பிரித்தனர். பணக்காரத் துரைகளை ஏமாற்றிப் பொருள் பறித்து வாழ்வதற்காகப் பிற்காலப் புலவர்கள் படைத்துக்கொண்டதே இப்பட்டியல். இன்னும் வெண்பா மறையோர் சாதி; ஆசிரியப்பா அரசர் சாதி; கலிப்பா வணிகர் சாதி; வஞ்சிப்பா சூத்திரர் சாதி. ''பார் திகழ் மூவர் பணித்த பணி ஒழுகல் காட்டினர் சூத்திரர் தங்கண்" எனக் காட்டி வேளாண் குடிமக்களை சூத்திரராக்கினர். இவ்வாருக ஆரியவருண வேற்றுமை வேண்டுமென்றே தமிழரிடை புகுத்தப் படுகிறது.

தமிழர் மானமும் தமிழ் ஆக்கமும் போற்றிக் காக்க விரும்புபவர்களுக்கு இந்நூல் ஒரு நல் விருந்தாகும்.

—சோ. இலட்சுமீரதன் பாரதி.

2. தொல்காப்பியம்

மக்கள் வாழ்வின் இலக்கணம்

[ஆசிரியர்: நெல்லை, இரா. சண்முகம் கோலாலம்பூர். பக்கம் 160. விலை 2-00. கிடைக்குமிடம்:- தொல்காப்பியர் தமிழ் நிலையம், அங்கமங்கலம், குறும்பூர் அஞ்சல், திருநெல்வேலி.

'தொல்காப்பியம்' என்ற இந்நூலில் பத்துக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. முன்னுரையில் ஆசிரியர் தொல்காப்பியம் வழிநூல் என்ற பனம்பாரனரது உரைக்கு மறுப்புக் கூறித் தொடங்குகிருர். அகத்தியத்தின் வழிநூல் அல்ல என்று அவர் வாதிடும் திறன் போற்றுதற்குரியது; சிந்தனைக்குரியது. அகத்தியருக்கும், தொல்காப்பியருக்கும் ஏற்பட்ட பிணக்கு மொழிப் போராட்டமே என்று வாதிடும் முறையும், துணையாகத் தொல்காப்பியரின் சொற்களையே எடுத்துக்கொண்ட விதமும் பாராட்டுதற்குரியவை.

''வடமொழி, தென்மொழிப் போர் தொல்காப்பியர் காலத்திலேயே தமிழ் கூறும் நல்லுலகில் மூண்டெழுந்தது. இதன் காரணமாகவே தொல்காப்பியர் தனித் தமிழ் இலக்கணம் செய்தார். சொற்களின் வகையில் இயற்சொல்; திரிசொல்; திசைச்சொல்; வடசொல் எனக்கூறி வடசொல்லைக் கடைசியில் ஓதுக்கினர். அது தனித்தமிழ் இலக்கணத்துக்கு உடன்பாடற்றது, மாறுபட்டது என்று அப்பொழுதே விரட்டி அடித்திருக்கிருர்", என்று கூறுகிருர். வடசொல்லால் தமிழ் அடைந்த தீமையை எண்ணி உளம் உருகிக் கூறும் சொற்கள்.

ஆங்காங்கே உரை ஆசிரியர்களின் விபரீதப் போக்கையும், தகுந்த ஆதாரத்துடன் கூறும் திறன் பாராட்டுதலுக்குரியது. முன்னுரையிலே இந்நூல் எழுதத் தூண்டுகோலாயிருந்த சூழ்நிலையைக் கூறித் தமிழரின் பண்பாடாம் 'நன்றியுணர்வு'தனைக் கூறிச் செல்கிருர்.

''தனித்தமிழ் ஆசிரியர்களும், வ. ரா அவர்களும்" என்ற முதல் கட்டுரையில் எழுத்துச் சீர்திருத்தம் விரும்பும் வ. ரா. அவர்களை வ. ரா. வின் சொற்களைக் கொண்டே தாக்குகிருர். ''நாட்டை வஞ்சித்து, ஏழை மக்களை வஞ்சித்து, பொய்யுரைத்துப் புறம்பேசி வயிறு வளர்க்கும் பாவிகளின் மனத்திலன்ருே இடி விழும்", என்று ஆசிரியர் கூறுவது, தமிழுக்கு ஊறுசெய்பவரை எதிரியாகப் பாவிக்கும் திறன்

உடையவர் என்பதைப் புலப்படுத்துகிறது.

அடுத்துவரும் சில அதிகாரங்களில் தொல்காப்பியர் உள்ளத்தையும், நச்சினர்க்கினியர், அவர் உள்ளத்துக்கு எதிரான பொருள் கொடுத்த விதத்தையும், எழுத்தின் பிறப்பு, ஒலிவடிவம், வரிவடிவம் இன்ன பிறவற்றையும், சுருக்கமாக, ஆனல் தெளிவாக விளக்குகிருர். ஒரே சொல் காலமாறுபாட்டால், அந்நியர் வரவால், எப்படிப் பொருள் திரிவு பெற்றது என்பதை விளக்கச் சிலம்பு, குறள், மற்றும் காப்பியங்களிலிருந்தும், கணக்குகளிலிருந்தும் எடுத்துக்காட்டு எடுத்துத் தரும் தன்மை ஆசிரியரின் ஆழ்ந்த அறிவையும், கற்ற நூற்களின் தன்மையையும் எடுத்துக் காட்டுகிறது.

"தொல்காப்பியரும், நச்சினர்க்கினியரும்" என்ற கட்டுரையில் "வடமொழிக் கலப்பாலேயே மக்களுள் பிரிவினை தோன்றியது; நாட்டின் உண்மை வரலாறுகள் மறைந்தன", என்று பிரிவினைக்கு ஒத்திடும் வடமொழியை வன்மையாகக் கண்டிக்கிருர். இதற்கு ஆதாரமாக நாவலர் சோமசுந்தர பாரதியார்; திரு. வி. க. இவர்கள் ஆரியரைப் பற்றிக் கூறிய சிறந்த பகுதிகளை எடுத்தாள்வது புகழ்ச்சிக்குரியதாகும்.

நேமிநாதம், நன்னூல் இவற்றின் ஆசிரியர்; காலம்; நூற் சிறப்பு இவற்றையும், ஆங்காங்கே மதிப்பிட்டுச் சொல்வது கால ஆராய்ச்சி செய்வோருக்குத் துணையாகும். "தொல்காப்பியரும், குணவீர பண்டிதரும், பவணந்தி முனிவரும்" என்ற கடைசிக் கட்டுரையில் ஒரே சூத்திரத்துக்கு இளம்பூரண அடிகளார், சேனவரையர், நச்சினர்க்கினியர் இவர்கள் தரும் கருத்துக்களை விளக்கியுள்ளார்.

கடைசியாகப் பொற்கலத்துக்குப் பொட்டிட்டது போல் புலவர் குழந்தை அவர்களின் உரையிலிருந்து 'வானேர்', தேவர்'; 'தெய்வம்', 'புத்தேளுலகம்' என்ற சொற்களுக்கு விளக்கம் கொடுத்துள்ளது மிக மிகச் சிறந்ததே யாகும். இவ்வெடுத்துக்காட்டுகள், இந்நூலைப் படிப்போரை நிச்சயம் புலவர் குழந்தை அவர்களின் "திருக்குறள் உரை"யைப் படிக்கத் தூண்டும்; பயன்பெற வைக்கும்.

160 பக்கங்களே ஆனலும், இந்நூல் தமிழிலக்கணம் ஓரளவு புரிய வாய்ப்புத் தரும். தமிழ் மொழி யார் யாரால் எப்படி எப்படி, அழிக்கப்பட்டது என்பதை அறிய வசதி செய்யும். மறைமுகமாகத் தமிழை அழித்தவர் யார்; நேர்முகமாக எதிர்த்தவர்கள் யார் என்பதை விளக்கும். தமிழன் என்ற புனிதமான் பெயர் பெற்ற மக்கள் கடமை என்ன என்ற கடமை உணர்வை ஊட்டும். கடல் கடந்து சென்ருலும் தமிழார்வம் விடாத இவ் ஆசிரியரின் உள்ளத்தைக் கண்டாவது கருங்கல்லாக இருக்கும் சில தமிழர் நிலை உயர வழிசெய்யும். தமிழார்வம் உடையவர்கள் தவருமல் படிக்கவேண்டிய நூல்.

—மு. குழந்தைவேலு, பீ.ஏ.

அச்சிட்டோர் : திரு. ஏ. எம். பொன்னப்பா, மாணிக்கம் பிரஸ், சென்னை-29.
ஆசிரியர் & வெளியிடுவோர் : சா. குருசாமி, 84, ஷெனய் நகர், சென்னை-30

குத்தூசி

[ஆசிரியர் : சா. குருசாமி]

— கட்சி சார்பற்ற பகுத்தறிவுக் கொள்கை ஏடு —

ஒவ்வொரு மாதமும் 4-ந் தேதியன்று வெளிவரும்.

தனி இதழ் : விலை 50 காசு ;

ஆண்டுக் கட்டணம் :

உள் நாடு : ரூ. 5 | கொழும்பு : ரூ. 6

வெளி நாடு : ரூ. 9

ஓராண்டுக்குக் குறைந்த கட்டணம் இல்லை.

விற்பனையாளர் இல்லாத ஊர்களில்
ஆண்டுக் கட்டணம் அனுப்புவதே நல்லது.

விளம்பர விகிதம் :

பக்கம் ஒன்றுக்கு, ஒரு தடவைக்கு, 50 ரூபாய் ;
அட்டைப் பக்கத்துக்கு 75 ரூபாய் ;
இரு வர்ண அட்டைப் பக்கத்துக்கு 100 ரூபாய்.
(அரைப் பக்கம் : 25 ரூபாய்)

குறிப்பு :- நீடித்த விளம்பரத்துக்கு 50% கழிவு.

84, ஷெனாய் நகர் :: சென்னை-30.

குறிப்பு :—"குத்தூசி"யில் வரும் கட்டுரைகள் அனைத்தும் பதிப்புரிமை பெற்றவை ; முன் அனுமதியின்றி எவரும் வெளியிடக்கூடாது. கட்டுரையாளர் கருத்துக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்ல.

Regd. No. M. 7629 KUTHOOSI February 1964

டெலிஃபோன் நம்பர் : 51451
நிறுவனம் : 1930
தந்தி : ORIDOL

தரத்தில் சிறந்த

எங்கள் பருப்பு வகைகள்

பட்டினத்தார் உளுத்தம் பருப்பு	எப்போதும் வாங்கி உபயோகியுங்கள் — எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.	ஷெல் துவரம் பருப்பு

தயாரிப்பாளர்கள் :

P. புன்னவன நாடார் (FIRM)

235, திருவொற்றியூர் ஹைரோடு,

சென்னை-21.